# ஒலி அலையில் என் நினைவலைகள்





விசாலாட்சி ஹமீது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலி அலையில்
# என் நினைவலைகள்

*வானொலியோடு ஐம்பது வருடங்கள்*
*வாழ்க்கையின் இனிய அனுபவங்கள்*

விசாலாட்சி ஹமீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : ஒலி அலையில் என் நினைவலைகள்

வகை : சுயசரிதம்

பதிப்பு : முதல் பதிப்பு
23 மார்ச் 2005

பக்கங்கள் : 140

ஆசிரியர் : விசாலாட்சி ஹமீது
**567/2A Havelock Road,**
**Columbo - 6**
**Srilanka**

தாள் : 18.6 J.K. மேப்லித்தோ

அச்சு எழுத்து : 11.5 புள்ளிகள்

விலை : 50/-

அச்சாக்கம் : நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
67/1 கோர்ட் ரோடு,
நாகர்கோவில் - 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



என்னை இவ்வுலகிற்கு ஈன்றெடுத்த அன்னை தந்தையருக்கும் என்னை வாழவைத்த அன்புத்தெய்வம் எம். ஹமீது அவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.
THIRU MURUGAN THUNAI

Phone: 431406
433881

Sri Siva Subramania Swami Kovil
SERVED BY THE MANAGEMENT OF
The Thedchanathar Velalar Mahamai Paripalana Society Ltd.
(INCORPORATED)

Devasthanam Office:-
No. 98, Gintupitiya Street,
Colombo

Date:.....

உ

திரு. V. T. V. தெய்வநாயகம் பிள்ளை
தர்மகர்த்தா,
ஸ்ரீ சிவகப்பிரமணிய சுவாமி கோவில்
ஜிந்துப்பிட்டி.

ஆசியுரை :

## இலங்கை வானொலியில் 50 ஆண்டுகள் கலைப்பணி

திருமதி. விசாலாட்சி ஸ்ரீமீட் இலங்கை வானொலியில் கலைப்பணியாற்றத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றதென்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். திருமதி விசாலாட்சியை சிறுவயதிலிருந்தே நான் நன்கறிவேன். இவரது தந்தை திரு. குகதாசன் அவர்கள் சோதிடக்கலை நிபுணர். அவர் எனக்கு மிகவும் பிடித்த நெருங்கிய நண்பர். விசாலாட்சியின் கலைத்திறமைகளை சிறுவயதிலிருந்தே நான் கண்டு பாராட்டி புகழ்ந்துள்ளேன். சங்கீதம், நாடகம், ஓவியம் போன்ற பல துறைகளில் ஈடுபாடு கொண்டவர். இலங்கை வானொலியில் 50 வருடங்களாக நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும், பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அவரது கலைப்பணிக்கு அவர் கணவரும் மிகவும் ஒத்தழைப்பு வழங்கியுள்ளார்.

'ஒலி அலையில் என் நினைவலைகள்' என்ற இந்நூல் நிச்சயம் ஒரு சிறந்த பயனுள்ள பாராட்டுப் பெறத்தக்க நூலாக அமையும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. எந்தக் காரியத்தையும் அதிக சிரத்தையுடன் சிறப்பாகவும், புதுமையாகவும் செய்து முடிக்கும் திறன் கொண்டவர். என்றும் எப்போதும் அவருக்கு என் வாழ்த்துக்களும், நல்லாசிகளும் உண்டு. அவர் தம் கலைப்பணி தொடர எம் ஜிந்துப்பிட்டி முருகன் சகல வழிகளிலும் துணைபுரிவாரென நம்புகிறேன்.

நல்லாசியுடன் முருகன் துணை வேண்டி

.....

தேசபந்து வில்வப்பிரசாதினி V.T.V.தெய்வநாயகம்பிள்ளை ஜே.பி.
தர்மகர்த்தா - ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவகப்பிரமணிய சுவாமி கோவில்,
ஜிந்துப்பிட்டி, கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை



இலங்கை வானொலியின் பகுதிநேர அறிவிப்பாளராகப்
பல்லாண்டுகள் பணியாற்றி
தமிழ் நெயர்களின் உள்ளங்களில் அழியாத இடம்
பெற்றிருப்பவர் திருமதி விசாலாட்சி ஹமீத்.

பிறப்பால் மலையாளியாக இருந்தாலும் தமிழைப் படித்து
வளர்ந்தவர். தமிழ் மொழியின் மேல் அவருக்கிருந்த ஆழ்ந்த
பற்றும் புலமையும் ஆர்வமும் அவரை வானொலி
அறிவிப்பாளராக மிளிரச் செய்தன.

வானொலி அறிவிப்பில் தன் குரல் வளத்தாலும் ஆழ்ந்த
அறிவுத்திறத்தாலும் நிகழ்ச்சிகளை வித்தியாசப்படுத்தித்
தமக்கென ஒரு முத்திரையைப் பதித்துக்கொண்டு ஐம்பது
ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை வானொலியின்
காற்றலையில் வலம் வந்த பெருமைக்குரியவர்.

இலங்கை வானொலித் தமிழ் நேயர்களிடையே
தமிழார்வத்தையும் இலக்கிய ரசனையையும் வளர்த்ததில்
விசாலாட்சி ஹமீது அவர்களுக்கு பெரும் பங்குண்டு.

இனக்கலவரத்தின் போது இலங்கை வானொலியில்
பணிபுரிந்த நிரந்தர அறிவிப்பாளர்கள் கட்டாய விடுமுறையில்
அனுப்பப்பட்டபோது இவர் தனி ஒருவராக ஜவரின்
உதவியோடு தமிழ் ஒலிபரப்புக்கு 45 நாட்கள் பொறுப்பேற்று
நிகழ்ச்சிகளை சிறிதும் தொய்வின்றி நடத்தியதும் வானொலி
நிலைய வளாகத்தில் வெடி குண்டு இருப்பதாகத் தகவல்
வந்தபோதும் துணிச்சலோடு அன்றும் இவர் கடமை
ஆற்றியதும்
பெரும் வியப்புக்கும் பெருமைக்கும் உரிய செய்திகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி மத இன பேதங்களைக் கடந்து தன் மனம் கவர்ந்த மணாளரையே மணம் புரிந்த மாதரசி இவர்.

இவரது அருமைக் கணவர் திரு.ஹமீது அவாகள் தமிழ் நாட்டில் பிறந்து இலங்கையில் குடியேறியவர். வாழ்க்கையின் அடித்தளத்திலிருந்து கடின உழைப்பால் முன்னேறியவர். இரும்பையும் அறிந்தவர் இலக்கியத்திலும் தோய்ந்தவர். இவர்களின் காதலுக்கு நூற்றொடர்பு பாலமாக அமைந்தது.

"ஒலி அலையில் என் நினைவலைகள்" எனும் இந்நூல் ஒரு வானொலி அறிவிப்பாளரின் சரிதம் மட்டுமல்ல: இன்று வானொலியில் அறிவிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கியிருப்போருக்கும் பணியாற்ற விரும்புவோருக்கும் அரிய பல தகவல்களைக் கொண்ட கையேடாகவும் திகழ்கிறது.

இந்நூலில் திருமதி விசாலாட்சி ஹமீது அவர்கள் பதிவு செய்துள்ள சம்பவங்களும் வானொலி அனுபவங்களும் வாசகாகள் மனதில் நம்பிக்கையை ஊட்டிக் கலாரசனையை வளர்க்கும் என்பது என் எண்ணம்.

ஒலிபரப்புக்கலையில் அவர் ஐம்பது ஆண்டுகள் ஆற்றிய சேவைகளை இலங்கை வானொலியின் வரலாற்றுப் பொன்னேடு கட்டாயம் குறித்துக்கொள்ளும் என்பதும் திண்ணம்.

தமிழுக்குக் குரல் கொடுத்த தங்க மகளைத் தமிழர்கள் வாழ்த்திக்கொண்டே இருப்பார்கள்.
முதல் வாழ்த்து என்னுடையது.

அன்புள்ள

22, நான்காம் குறுக்குத் தெரு • டிரஸ்ட்புரம் • சென்னை - 600 024.
தொலைபேசி : 2484 4767 • தொலைநகல் : 91-44-2481 6195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

நான் பல்கலைக்கழக மாணவியாக இருந்தபோது வானொலிக்கலைஞராக இசை நிகழ்ச்சிகள் இசைச்சித்திரங்கள் ஆகியவற்றில் பங்குபற்றிக்கொண்டிருந்த காலம் அது. அப்போதெல்லாம் எனது நிகழ்ச்சிகளுக்கு அறிவிப்பாளராக வருவார் விசாலாட்சி ஹமீது என்கின்ற நல்ல தூய தமிழ் பேசுகின்ற ஒரு மெல்லிடைப் பெண். என் மனதில் ஒரு கேள்விக்குறி எழும் பெயரில் பெரிய குழப்பம் இருக்கிறதே அவர் பேசும் தமிழைக் கொண்டு எந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்று கண்டு பிடிப்பது மிகவும் சிரமம். அவர் யாரோடு பேசுகிறாரோ அந்தத் தமிழிலிலே அவரும் பேசுவார்.

1974ல் இலங்கை வானொலியில் நிரந்தர தயாரிப்பாளராகச் சேர்ந்தபிறகு எனது தயாரிப்பில் உருவாகும் இசைச்சித்திரங்களில் விசாலாட்சி ஹமீதையே உரைநடைக்குப் போடும்படிக் கேட்பேன். அவரது பண்பான சொற்தெளிவான வாசிப்பு முறை எவரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் பொருத்தமான இடங்களில் குரலில் ஏற்ற இறக்கம் நிறுத்தம் யாவையும் மிகச்சிறப்பாகச் செய்யக்கூடியவர். எந்த நிகழ்ச்சியையும் முழு ஈடுபாட்டுடன் ஆர்வத்துடன் செய்வார். இவரது வாசிப்பில் எனக்கிருந்த பிடிப்பு மெல்ல மெல்ல அவருடன் நெருங்கிப் பழகி அவரைப்பற்றித் தெரிந்து கொள்ளவும் ஏதுவாயிற்று.

விசாலாட்சி கேரளத்தைப பூர்வீகமாகக் கொண்டவர். இந்துமதத்தைச் சேர்ந்தவர். அவரது கணவர் ஹமீது ஒரு வர்த்தகப்பிரமுகர் இஸ்லாம் மதத்தைச்சேர்ந்தவர். இருவரும் அவரவர் மதங்களையே பின்பற்றுகின்றனர் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

1975ல் அவர்களது புதுமனை புகுதல் விழாவிற்கு நானும் என கணவர் டொக்டர் ஸ்ரீரங்கநாதனும் சென்றிருந்தோம். அந்த விழாவின் போதுதான் திரு.ஹமீதைச் சந்திக்க நேர்ந்தது. ஒரு முஸ்லீமாக இருந்தாலும் ஏனைய மதங்களைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருக்கிறார். இயல் இசை நாடகம் முத்தமிழிலும் கொண்ட ஈடுபாடே இவர்களை இல்லறம் எனும் பந்தத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்திருக்கிறது. என் கணவருக்கும் விசாலாட்சி ஹமீது தம்பதிகளை மிகவும் பிடித்துப்போய்விட்டது. இரு குடும்பங்களும் நெருக்கமாகப் பழக ஆரம்பித்தோம். வானொலிச் சிநேகிதங்கள் எத்தனையோ இருந்தாலும் எங்கள் சிநேகிதம் சற்று வேறுபட்டதாகவே இருந்தது. விசாலாட்சி அறிவிப்புத்துறையில் மட்டுமல்ல பாடுவதிலும் நடிப்பதிலும் சிறந்தவர் என்பது எல்லோரும அறிந்த விஷயம். ஆனால் அவருக்கு ஓவியமும் கைவந்த கலை என்பது பலர் அறியாத விஷயம்.

இந்தப் புத்தகத்தில் அவரது கணவரின் படத்தை அவரேதான் வரைந்திருக்கிறார். இரு வேறு மதங்களால் இணைந்த குடும்பம் விரிவடைந்து இப்போது நான்கு மொழிகளை நான்கு மதங்களைக் கொண்ட குடும்பமாக வளர்ந்திருக்கிறது. இன்றும் எங்கள் நட்பின் உறவு உறுதியாக இருக்கிறது என்றால் அவரது அன்பும் பண்பும பழகும் விதமும்தான் காரணம். அவர் பல்லாண்டு காலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்



இலங்கை வானொலியின் 75வது வருட பவளவிழாவில் கௌரவிக்கப்பட்டபோது. முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் விருது வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

*சாதித்தவனுக்கு எப்போதுமே ஒரு சரித்திரம் இருக்கும். திறமை இருந்தும்*

*சாதிக்க முடியாமற் போனவனுக்கும் ஒரு சரித்திரம் இருக்கும். சாதிக்க நினைப்பவனுக்கு இரண்டாமவனது சரித்திரம் அதிகப் பயனள்ளதாக இருக்கும்.*

சாதனை என்பது திறமையின் வெளிப்பாடு.

ஒருவனுடைய புகழ் என்பது அவனது திறமையைக் காட்டும் அளவு கோல் அல்ல. அது சந்தர்ப்பத்தால் வருவது என்று அறிஞர் தொமஸ் கார்லைல் கூறியிருக்கிறார் சந்தர்ப்பம் வராத காரணத்தினால் எத்தனையோ திறமைசாலிகள் குடத்திலிட்ட விளக்காக வெளியில் தெரியாமல் மறைந்திருக்கிறார்கள் சிலர் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். இதையே கவியரசர் கண்ணதாசன் திரைப் பாடலாக புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை என்று எழுதினார்.

இலங்கை வானொலியோடு 50 வருடங்கள் வாழ்ந்து குப்பை கொட்டி இருக்கிறேன். பெரிதாக சாதித்தது ஒன்றுமில்லை. 50 வருடங்கள் என்று நான் குறிப்பிடுவது வானொலியில் நாடகக் கலைஞராகத் தெரிவாகிப் பங்கேற்று அதற்கான ஊதியமாக 30 ரூபாவை முதன் முதலாகப் பெற்ற நாளிலிருந்து இன்று பகுதிநேர அறிவிப்பாளராக சேவையாற்றிக் கொண்டிருப்பது வரையிலான 50 வருடங்கள்.

.மனிதனால் மனிதனுக்கு மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டவைதான் ஊடகங்கள். காலப்போக்கில் சிறிது சிறிதாகப் பரிணாம வளர்ச்சியடைந்து பணம் சம்பாதிக்கும் வர்த்தக நிறுவனங்களாக மாற்றமடைந்தன. பணமும் புகழும் ஒரே சமயத்தில் கிடைக்கிறது என்பதால் போட்டியும் பொறாமையும் நிறைந்த இடங்களாக மாறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியைப் பொறுத்த வரையில் ஒருவர் சொல்லிக் கொடுத்துக் கற்றுக்கொள்ள முடியாத ஒரு கலை இந்த ஒலிபரப்புக் கலை. ஒவ்வொருவரும் தமது அனுபவத்தினாலேயே கற்றுக்கொள்ள வேண்டிய கலை அது.

பிறர் ரசித்துக் கேட்கின்ற வகையில் ஒரு விஷயத்தை எடுத்துக் கூறுதல் என்பது மிகச் சிலருக்கே வாய்த்த ஒரு கலை ஆற்றல். ஆழ்ந்த அனுபவத்தினாலும், இதயக்கனிவினாலும் மாத்திரமே ஏற்படக்கூடியது அந்தக் கலை. .

இன்றைய தலைமுறையினருக்கு வாசிக்கும் பழக்கம் குறைந்து கொண்டே வருகிறது. தொலைக்காட்சியும், திரைப்படங்களும் போட்டி போட்டுக் கொண்டு பொதுமக்களின் பொழுதையெல்லாம் விழுங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் புத்தக வெளியீடு என்பது எந்த அளவுக்கு வெற்றியைத் தரும் என்பது கூறமுடியாதிருக்கிறது.

புத்தகம் வெளியிடும் எண்ணம் எனக்கு என்றுமே ஏற்பட்டதில்லை. பேச்சுவாக்கில் "2005 ல் கலைத்துறையில் கால் பதித்து 50 வருடங்களைப் பூர்த்தி செய்கிறேன்" என்று விளையாட்டாகக் கூறினேன்.

"அப்படியானால் உங்கள் அனுபவங்களை ஒரு புத்தகமாக வெளியிடலாமே. நீங்கள் எழுதுங்கள்" என்று என்னை எழுதச் சொல்லி ஊக்குவித்தார் அறிவிப்பாளர் அன்புத் தம்பி எஸ்.ரபீக் அவர்கள். காற்றில் கலை படைப்பவர்கள் நம் அறிவிப்பாளர்கள். அந்தப் படைப்புக்களை வரிவடிவில் பதிவாக்கி நேயர்கள் வாசித்துப் பயன்பெறும் வகையில் செய்வது நல்ல காரியம் என்றே எனக்கும் தோன்றியது. இந்த முயற்சியில் நான் வெற்றி பெற்றேன் என்றால் நிச்சயம் அந்த வெற்றியில் அவருக்கும் பங்கு உண்டு. முதலில் என்னை அறிமுகம் செய்து கொள்ள வேண்டியது என் கடமையாகிறது.

பாரதத் தாயின் மடியில் பிறந்தன இரு குழந்தைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபிக்கடல் அரவணைக்கும் சேரநாடு என்றழைக்கப்பட்ட கேரள மாநிலத்தில் ஒரு குழந்தையும் இந்து சமுத்திரம் தழுவிச் செல்லும் சோழ நாடான தஞ்சையில் ஒரு குழந்தையும் வறுமைக் கோட்டின் எல்லையில் நின்று வாடித் தவித்து நின்றன. பாசம் நிறைந்த பாரதத்தாய் பரிவோடு இருகரம் நீட்டி வாரி எடுத்து உடன்பிறந்த சகோதரியான இரத்தினங்களின் இளவரசி, குபேர அரசி என்றழைக்கப்படும் ஈழத்தாயிடம் வளர்க்கும்படி கொடுத்துவிட்டாள். இந்தியத் தாயின் காலடியில் சிரம் தாழ்த்தி கைகூப்பி வணங்கி நிற்கும் சிற்றன்னையாம் இலங்கை அன்னை இரு வேறு திசைகளில் இரு வேறு மதங்களில், இரு வேறு மொழிகளில் பிறந்து வளர்ந்த அந்த இருவரையும் வளர்த்து வாழ்வில் ஒன்றாக இணைத்துவிட்டாள். இருவேறு மதங்களின் பெயர்களையுடைய. இரண்டு சமுத்திரங்கள் இந்தியத்தாயின் காலடியான கன்னியாகுமாரியில் சங்கமிப்பதுபோல் இரு வேறு திசை என்றாலும் உதயத்தையும் அஸ்தமனத்தையும் ஒரே கடலில் அங்கே காட்சி கொடுக்கும் ஆதவனைப்போல், ஒன்றாகச் சேர்த்துவிட்டாள். பாரதத்தாய் ஈன்றெடுத்து, ஈழத்தாய் வளர்த்தெடுத்த அந்த இரண்டு உயிர்கள் வேறு யாருமல்ல. விசாலாட்சி ஹமீது இருவரும்தான்.

சேரநாட்டுக்கும் சோழநாட்டுக்கும் ஆதி காலம் தொட்டே திருமண உறவு இருந்து வந்திருக்கிறது. சேர நாட்டிலும் தமிழ்மொழிதான் அந்த காலத்தில் பேசப்பட்டு வந்ததாக கேரள சமஸ்காரம் என்கின்ற நூல் கூறுகிறது. வடக்கிலிருந்து ஆரியர்கள் வந்து குடியேறியதால் தமிழ்மொழியோடு சமஸ்கிருதமும் கலந்து மலையாளம் என்றொருமொழி உருவாகியது.

தமிழ்மொழிக்கும் மலையாள மொழிக்கும் சிகரமாக விளங்கும் ழகரம் வேறு எந்த மொழியிலும் இல்லாது இந்த இரு மொழிகளில் மாத்திரமே காணப்படுவது அதன் மேலான சிறப்புக்களில் ஒன்று.

ஏனைய மொழிகளைப் போலல்லாது தமிழ்மொழிக்கும் மலையாள மொழிக்கும் அதிகமான ஒற்றுமை காணப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான். மலையாளமொழிப் பாடகர்களும், நடிகர், நடிகைகளும் தமிழில் அழகாகப் பேசுவதற்கும் பாடுவதற்கும் இந்த மொழி ஒற்றுமையே காரணம்.

ராஜாராணி திரைப்படத்தில் சேரன் செங்குட்டுவன் நாடகத்தில் நடிகர் திலகமும் ராஜசுலோசனாவும் உரையாடும் பகுதி ஒன்று வருகிறது.

கதை ஒன்று சொல்லுங்கள் அத்தான்
கதையா சொல்கின்றேன்.

சோழன் மகளை சேரன் மணந்தான். அந்த சேரனுக்கு ஒரு செல்வன் பிறந்தான். அந்தச் செல்வன் இந்தச் சிலையை மணந்தான்.

தெரிந்த கதைதானே இது?
நடந்த கதையும்கூட.
நடக்காத கதை ஒன்று சொல்லுங்கள் அத்தான்.
சுவைக்காத கண்ணே அது.

நடக்காத கதை என்றும் சுவைக்காது உண்மைச் சம்பவங்கள் உள்ளத்தைத் தொடுவதுபோல கற்பனைக் கதைகள் தொடுவதில்லை. நானும் எழுதுகிறேன். ஒரு உண்மைக் கதை. உங்கள் உள்ளத்தை தொட்டேனா என்பதைக் கேள்விக்குறியாக விட்டு விடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலி அலையில் என் நினைவலைகள்

*கலையொரு மூன்றுங் கடந்து அப்பால் நின்ற*
*தலைவனை நாடுமின் தத்துவநாதன்*
*விலையில்லை விண்ணவரோடு உரைப்பன்*
*நரையில்லை உள்ளுறும் உள்ளவன் தானே.*

ரேடியோ சிலோன் என்று சொல்லப்படுகின்ற அதிசக்தி வாய்ந்த மக்கள் தொடர்புச்சாதனம் லட்சக்கணக்கான நேயர்களின் பேரபிமானம்பெற்ற ஒரே வானொலியாக விளங்கியது ஒருகாலத்தில். உலகப்புகழ் பெற்ற இலங்கை வானொலியில் ஒரு கலைஞராக அங்கீகாரம் பெற்றுப் பின்னர் பகுதி நேர அறிவிப்பாளராகப் பணியேற்று ஐம்பது வருடங்களைக் கடந்து வந்துவிட்டேன். இதுவரை காலமும் இன்னல்கள் பல நிறைந்த இந்தத் துறையில் என்னைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றிவந்த அந்த இறைவனுக்கு முதலில் நான் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதன் முதலாக இலங்கை வானொலியில் நான் பங்கு பற்றிய நிகழ்ச்சி பாலர் நிகழ்ச்சியாகும். கொழும்பு விவேகானந்த வித்தியாலத்தில், அப்போது ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். எங்களுக்கு வகுப்பாசிரியராக இருந்தவர் வித்வான் R.S. சோதிநாதன் மாஸ்டர். அவர் இலங்கை வானொலியில் பாலர் நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்.

வாரம் ஒருமுறை இந்த நிகழ்ச்சி நடைபெற்று வந்தது. அதனால் அவரது மாணவ மாணவிகளுக்கு அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அப்போது சங்கீதமும் பயின்று கொண்டிருந்தபடியால் எனக்கு நிகழ்ச்சியில் பாடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

முதன் முதல் ஒலிவாங்கியின் முன் பாட உட்கார்ந்தபோது முகத்திற்கு நேராக ஒரு தேன்கூடு தொங்குவது பொல் ஒலிவாங்கியைக் கண்டவுடன் பயத்தினால்

சத்தமே வெளிவரவில்லை. முதன் முதலாகப் பாடப்போகிறேன் என்பதால் கருணை செய்குவாய் கஜவதனா என்ற பாடலைப் பாடும்படி எனது சங்கீத ஆசிரியை பராசக்தி டீச்சர் எனக்குச் சொல்லிக் கொடுத்துப் பயிற்சி அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகப் பாடிப் பழகி மனப்பாடம் செய்த பாடலின் வரிகள் ஞாபகத்திற்கு வராமல் மறந்து போய்விட்டது. எப்படியோ கஷ்டப்பட்டு நாலு ஐந்து வரிகள் அன்று பாடிவிட்டு வந்துவிட்டேன். அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் தொடர்ந்து சந்தர்ப்பம் கிடைத்ததும் ஒலிவாங்கி பழக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் தொடர்ந்து எனக்கு நாடகங்களில் நடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தவர் சரவணமுத்து மாமா அவர்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் 45 நிமிடநேரம் நேரடி ஒலிபரப்பாக நடைபெறும் சிறுவர் மலர் நிகழ்ச்சி அப்போது மிகவும் பிரபலமான ஒரு சிறுவர் நிகழ்ச்சியாக இருந்தது.

அது மாத்திரமல்ல. பிற்காலத்தில் பிரபலமான பல கலைஞர்களையும் அறிவிப்பாளர்களையும் உருவாக்கிக் கொடுத்த பெருமையும் அந்த நிகழ்ச்சிக்கு உண்டு. சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடாத்தி வந்த சரணமுத்து மாமாவும் அப்போது வானொலி நாடக அரங்குகளில் நடித்து வந்தார். தன்னிடம் பயிற்சி பெற்ற நன்றாக நடிக்கக் கூடிய மாணவ மாணவிகளை நாடக அரங்கு, நடிகர் தேர்வுக்கு விண்ணப்பிக்கச் சொல்லுவார்.

அந்த நாளில் பெரும்பான்மையானவர்களின் பொழுதுபோக்குச் சாதனமாக விளங்கியது வானொலி ஒன்றேதான். இரவு நேரங்களில் ஒலிபரப்பாகும் நாடகங்களை, தமிழ்பேசும் அத்தனை வீடுகளிலும் தவறாமல் கேட்பார்கள். அதில் நடிக்கும் நடிக, நடிகைகள், திரைப்பட நடிக நடிகைகளின் அளவுக்கு பிரபலம் பெற்றவர்களாக இருந்தார்கள்.

சிறுவர்மலர் நிகழ்ச்சிக்கு வரும் நாம் எல்லோரும் இந்த நடிக நடிகைகளைப் பார்ப்பதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுவோம். ஒருநாள் எமக்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. எங்களைக் கடந்து நாலைந்து பேர் பேசிக் கொண்டே போனார்கள்.

வானொலியில் கேட்ட அதே குரல்கள், உடனே பக்கத்திலிருந்த என் தோழி மேரி ஜொஸ்பின் "இதோ போகிறார்கள் நாடக நடிகர்கள், முன்னால் கையை நீட்டி உயர்த்திப் பேசிக் கொண்டு போகிறாரே உயரமான ஒருவர். அவர் தான் ரொசாய்ரோ பீரிஸ். அவருக்குப் பக்கத்தில் போகிறார் பிச்சையப்பா. பின்னால் போகிறாரே ஒருவர் நீளமான கூந்தல். அவர்தான் ராஜேஸ்வரி பிச்சாண்டி., பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவர்ணம் லஷ்மணன்" என்று அவசர அவசரமாக அறிமுகப்படுத்தினார்.

ஆனால், அவர்கள் நால்வரையும், நாம் பார்த்தது பின்புறம்தான். முகத்தைப் பார்க்க முடியவில்லை. இவ்வாறு முகத்தைக்கூட பார்க்க முடியவில்லையே என வருந்திய நான் ஒரு காலத்தில் அவர்கள் முன் நின்று சரிசமமாக என் நடிப்பாற்றலைக் காட்டுவேன் என்று அப்போது எதிர்பார்க்கவேயில்லை.

நாங்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருப்பதை அவதானித்த சரவணமுத்து மாமா, எங்களைப் பார்த்து, நாடகத்தில் நடிப்பதற்கு உங்களில் ஆர்வமுள்ளவர்கள் அடுத்த வாரம் குரல் தேர்வு நடக்க இருக்கிறது. அதற்கு நீங்களும் விண்ணப்பிக்கலாம் என்றார். அடுத்த நாளே எங்கள் விண்ணப்பங்களைக் கொண்டு போய் கொடுத்துவிட்டோம்.

ஒரு வாரத்திற்குள் குரல், நடிப்புத் தேர்வு. எப்படியும் நாடக அரங்குக்கு நான் தெரிவாக வேண்டும். பிரபலமான நடிக நடிகைகளோடு நானும் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் துளிர்விட்டது. வீட்டில் நான் சேகரித்து வைத்திருந்த பேசும்படம் மாத சஞ்சிசைகளை எல்லாம் எடுத்தேன். அவற்றில் திரைப்படங்களின் கதை வசனப்பகுதி என்று ஒவ்வொரு இதழிலும் வெளிவரும் அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து வைத்துக் கொண்டு அத்தனை கதாபாத்திரங்களின் வசனங்களையும் பேசி நடித்துப் பயிற்சி செய்தேன்.

அப்போது நான் பத்தாவது படித்துக் கொண்டிருந்தேன். டிசம்பரில் எஸ்.எஸ்.சி பரீட்சை. பெப்ரவரியில் நான் தீவிரமாக நடிப்புத் தேர்வுக்கு வசனங்களைப் பேசி நடித்து பார்த்து பயிற்சி செய்து கொண்டிருக்கின்றேன். எந்தப் பெற்றோராவது இதனைப் பார்த்து சகித்துக் கொண்டிருப்பார்களா? அம்மாவின் ஏச்சும் பேச்சும் ஒரு புறம். திரைக்கதை வசனப் பயிற்சி மறுபுறம். அம்மாவின் ஏச்சும் அனார்க்கலி வசனப் பயிற்சியும் இப்படித்தான் மிக சுவாரஸ்யமாக இருக்கும்.

"காலையிலை இருந்து நானும் கவனிச்சிட்டுத்தான் வாறன் பாடப் புத்தகத்தை தொட்டும் பார்க்கிறதில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக இளம் மனதை .ஏங்கவிட்ட ஏந்தலே வருக.

"அடி செருப்பால எங்கிட்டியே வசனம் பேசுறியா?

குறித்தநேரத்திற்கு வரவில்லையே என்று கோபிக்கிறாயா அனார்.

"இப்படியே போனால் பையத்திக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் போகவேண்டி வரும்"

கொலுமண்டபத்து மனிதர்களுக்கு நேரமாவது நினைப்பாவது.

"நான் பேசுறது ஏதாவது காதில எடுக்கிறியா"

கொலுமண்டபத்து மனிதன் அப்பப்பா கோபத்தில் என் அந்தஸ்த்தை கூட உயர்த்திவிட்டாயே.

"இங்கை பார் இதுக்கு மேலே என்னால ஏலாது உன்னைச் சமாளிக்க"

தெரியும் எனக்கு தென்றல் நடைபோடும் தீரரே டில்லி ஏகாதிபத்தியத்தின் எதிர்காலக் காவலரே. என்ன விழிக்கிறீர்? போர் வீரனல்ல என் காதலர் புவியாளும் பாதுஷாவின் புதல்வர் புரிந்து விட்டது. நீங்கள் மூட்டிய புகை மண்டலம் மறைந்து விட்டது.

"புகைமண்டலமா. இந்தா வாறன் கொள்ளிக்கட்டை எடுத்துக்கிட்டு" என்று அடுப்படிக்கு ஓடுவாள்.

"அம்மா அம்மா சும்மா தமாசுக்குத் தானே."

என்று அம்மாவை சமாதானப்படுத்துவேன்.

கடைசியில் அம்மா சொல்லிவிட்டார். "இந்த வருடம் எஸ்எஸ்சி பரீட்சையில் மட்டும் நீ பாஸாகாமல் இரு. அதோடு நீ ரேடியோ சிலோன் போவதும் முடிந்தது. அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நடிப்பதற்குப் போ." என்று ஒரே போடாகப் போட்டு விட்டார்.

பரீட்சைக்குத்தான் இன்னும் பத்து மாதங்கள் இருக்கின்றனவே. அதைப்பற்றி பின்னர் பார்த்துக் கொள்ளலாம். நடிப்புக்கான குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்வில் முதலில் நான் வெற்றி பெற வேண்டும். இரவும் பகலும் அதே சிந்தனைதான்.

குரல் தேர்வும் வந்தது. நவரசங்களும் பிரதிபலிக்கும் விதத்தில் கதா பாத்திரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஒலிவாங்கியும், கலையகமும் எனக்குப் பழக்கப்பட்டதனால் கொடுத்த பாத்திரத்தை திறம்படச் செய்தேன்.

என்னோடு தெரிவு செய்யப்பட்டவர்கள் மேரி ஜொஸ்பின், டி.சுப்ரமணியம், இருவரும் சிறுவர் மலரில் பங்கு கொண்டவர்கள்தான். மேரி ஜொஸ்பினும் நானும் எதிர்வீட்டுக்காரர்கள். உயிர்த்தோழிகள் இருவருமே நாடகத் தேர்வில் வெற்றி பெற்று விட்டதில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அடுத்த வாரமே எனக்கு நாடக ஒப்பந்தப் பத்திரம் தபாலில் வந்து சேர்ந்தது. இலங்கை வானொலி ஆரம்பித்த காலத்தில் இருந்து நாடகத் தயாரிப்பாளராக இருந்து வருபவர், "சானா" என்று அன்புடன் எல்லோராலும் அழைக்கப்படும் எஸ்.சண்முகநாதன் அவர்கள்.

ஒப்பந்தப் பத்திரத்தில் நாடகத்தின் பெயரும் ஒத்திகை நடைபெறும் திகதியும் நேரமும் ஒலிபரப்பாகும் திகதியும் நேரமும் அத்தோடு சன்மானத் தொகையும் கூட குறிப்பிடப்பட்டு இருந்தது.

30 நிமிட நாடகத்திற்கு 30 ரூபாய் சன்மானம். நாடகத்தின் பெயர்

மக்தலத்து மரியாள். சரித்திர நாடகம்,

ஒப்பந்தப் பத்திரத்தை கையில் வாங்கிப் பார்த்ததும் சந்தோஷம் தாங்காமல் முதலில் அம்மாவிடம்தான் ஓடினேன். அவர் கையில் அதைக் கொடுத்து "பார்த்தியா ஒரு நாடகத்திற்கு 30 ரூபாய் தருகிறார்கள். நான் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டேன்" என்று துள்ளிக் குதித்தேன். அந்நாளில் 30 ரூபாய் என்பது பெரிய தொகை. தங்கத்தின் விலையே அப்போது சவரின் 50 ரூபாய்தான் என்றால், 30 ரூபாயின் பெறுமதியைக் கணக்குப் பார்த்துக் கொள்ளுங்கள்.

"நாடகத்திற்கு அழைப்பு வந்திருக்கிறது என்கிற சந்தோஷத்தில் படிப்பைக் கோட்டை விட்டுவிடப் போகிறாய். SSC பரீட்சையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸாகி விட்டேன் என்று நீ பெருமையாகச் சொல்ல வேண்டும். அப்போதுதான் உண்மையாக சந்தோஷப்படுவேன்" என்று கூறிவிட்டார்.

ஒப்பந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்பிவிட்டு, நாடக ஒலிப்பதிவு தினத்திற்காக காத்திருந்தேன். ஆனால், அடுத்தவாரமே நாடகப் பிரதி தயாரிப்பாளர் சானாவால் எனக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆவலோடு அதைப்பிரித்து என்னுடைய கதாபாத்திரம் என்னவென்று தேடினேன். ஆச்சரியமாக இருந்தது. மக்தலத்து மரியாள் நாடகத்தில் மரியாள் கதாபாத்திரம். பிரதான கதாபாத்திரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. சானா என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை எண்ணி சந்தோஷத்தில் சிறகடித்து சிறிது நேரம் வானவெளியில் பறந்தேன்.

சாதாரணமாக ஞாயிற்றுக்கிழமைகளில் 30 நிமிட நேர நாடகங்கள் ஒலிபரப்பாகும். ஒலிப்பதிவுக்கு முன்னால் முதல்நாள் பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணிவரை ஒத்திகை நடக்கும். அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை மீண்டும் ஒத்திகை. பின்னர் 1.30 முதல் 4 மணி வரை ஒலிப்பதிவும் நடைபெறும்.

இந்த விபரங்கள் கலைஞர்களுக்கு ஒப்பந்தப்பத்திரம் அனுப்பும் போதே அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்ததந்த நேரங்களில் ஒத்திகைக்குத் தவறாது சமூகமளிப்பேன் என்று அந்த ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு அனுப்பிய பின்னரே நாடகத்தில் நமது பெயர் சேர்க்கப்படுகிறது. அதனால் முதல்நாள் ஒத்திகைக்கு வராதவர்களை நாடகத்தில் இருந்து விலக்கிவிட்டு வெறொருவரை அந்தக் கதாபாத்திரத்திற்குப் போடுவதற்குச் சானா தயாராகிவிடுவார். எனவே எவரும் ஒத்திகை நேரங்களை தவறவிடவே மாட்டார்கள்.

எனது முதல் நாடகமான மக்தலத்து மரியாள் நாடக ஒத்திகையும் முதல் நாள் சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமானது. எனக்குப் பிரதான கதாபாத்திரம் ஆனதால், பிரபல நாயகன், நாயகிமார் எவரையும் அன்று நான் சந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அது எனக்கு ஓரளவு தைரியத்தையே அளித்தது.

பிரபலமானவர்கள் முன்னால் அவர்களோடு நடிப்பதற்குப் பயமாகவே இருந்திருக்கும். நாடகத்தில் ஜீசஸ்சாக நடித்தவர் அப்போது இலங்கை வானொலியிலும் இப்போது இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியிலும் பிரபலமாக விளங்கும் எஸ்.எம்.ஏ.ஜப்பார் அவர்கள். இப்போதும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஜப்பாரும் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் பங்குபற்றியவராதலால் அவரோடு நடிப்பதில் எனக்குப் பயம் தோன்றவில்லை.

எனது கதாபாத்திரம், சோகமானது. ஊர்மக்கள் கூடி கல்லால் அடித்துத் துன்புறுத்தப்படும்பொது ஜீசஸ் அங்கே வந்து காப்பாற்றுவதாக அமைந்த மரியாளின் பாத்திரம். கலைத்துறையில் காலடி எடுத்து வைத்துவிட்டாய் பெறப்போகும் கல்லடிகளையும் சொல்லடிகளையும் தாங்கும் மனத்திடத்தை இன்றிலிருந்து பெற்றுக்கொள் என்று அந்த முதல் நாடகம் உணர்த்தியதோ என்னவோ?

நாடகம் ஒலிப்பதிவு முடிந்ததும் கலையத்திற்கு வெளியே வந்தோம். நாடகத்தைப் பற்றி ஏதாவது சொல்வார் என்று சானாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒன்றுமே கூறவில்லை. பங்குபற்றிய எல்லோருக்கும் நாடகத்திற்கான பண வவுச்சரைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார். என் கையில் 30 ரூபாய்க்கான பணவவுச்சர்.

முதன் முதலாக, வானொலி நிலையத்திலிருந்து நான் பெற்ற சன்மானம். முதன் முதலாக விசாலாட்சி குகதாஸன் என்று எனது பெயர் எழுதப்பட்டு, நானும் ஒரு வானொலிக் கலைஞர் என்று எனக்குக் கிடைத்த அங்கீகாரம். அந்த வவுச்சரை வரவேற்புக் கவுண்டரில் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டபோது அந்த 30 ரூபாய் எனக்கு பல இலட்சங்களை அள்ளித் தந்த குதூகலத்தைக் கொடுத்தது.

வீட்டிற்கு வந்து அம்மாவிடம் ஓடிச்சென்று அந்தப் பணத்தைக் கொடுத்தேன். அம்மா வாங்கவில்லை. சந்தோஷப்படவுமில்லை.

"அப்பாவிடம் கொண்டு போய்க் கொடு என்றார்.

அப்பாவிடம் தயங்கி தயங்கிச் சென்றேன்.

"அப்பா! "

என்ன? என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா! ரேடியோ நாடகத்தில் நடிச்சதற்காக 30 ரூபாய் பணம் தந்தார்கள்."

"படிக்கிற வயதிலே படிப்பை விட்டுவிட்டு நாடகத்தில் நடிச்சு பணம் சம்பாதித்து வந்திருக்கிறாயா"? என்றார் கோபமாக

எந்த அளவுக்கு உயரத்தில் வானத்தில் சிறகடித்துப் பறந்தேனோ, அந்த உயரத்தில் இருந்து பயங்கரவேகத்தில் தரையில் தூக்கி வீசப்பட்டேன்.

அன்னையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அன்னையும் அத்தனும் ஆரறிவார் என்னை
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்து
அன்னையும் அத்தனை யான் புரந்தேனே.

எங்கள் குடும்பத்தில் நாங்கள் ஐந்து பேர். எனக்கு அண்ணனும் ஒரு தம்பியும் இருக்கிறார்கள். எனது தந்தையார் மிகவும் கண்டிப்பானவர் மாநகரசபைக் கட்டிடமேற்பார்வையாளராகத் தொழில் பார்த்து வந்தார். நாள் முழுவதும் அவர் பார்த்துக்கொண்டிருப்பது கற்களும் சிமந்தும் கம்பிகளும்தான். ஆனாலும் அவர் ஒரு இசைப்பிரியர். சோதிடக்கலை வான சாத்திரம் ஆகியவற்றில் நிபுணர். ஆனால் அதை ஒரு சேவையாகவே செய்து வந்தார். அதனால் நிறைய நண்பர்கள் அவருக்கு இருந்தார்கள்.

நான் வானொலி நாடகங்களில் நடிப்பதை அவர் விரும்பவில்லை. ஆரம்பத்தில என்னை வானொலிக்கு அனுப்ப சம்மதித்தது பாடப் போகிறேன் என்பதற்காகத்தான். ஆனால் என் வகுப்பில் எல்லோரும் எனனைப் பாராட்டினார்கள். எங்கள் கணிதபாட ஆசிரியர் தியாகராஜா மாஸ்டர் ஒரு வானொலி நாடக ரசிகர்.

"என். வீட்டில் நான் நடிப்பதற்கு எதிர்க்கிறார்கள் எப்போது பார்த்தாலும் நான் பரீட்சையில் பாஸாகமாட்டேன் என்று குறைசொல்லிக் கொண்டிருக்கிறார்கள்." என்று மாஸ்டரிடம் கூறி வருத்தப்பட்டேன்.

அவருக்கு என்மீது பரிதாபம் ஏற்பட்டது. "என்னால் ஒரு உதவி செய்யலாம். பரீட்சைக்கு 3 மாதங்கள் இருக்கும்போது உனக்கு விசேட வகுப்புகள் வைத்து கணித பாடத்தில் எப்படியாவது பாஸ் பண்ண வைத்துவிடுகிறேன்."என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் நிறைந்த கண்களோடு அவரைக் கைகூப்பி வணங்கினேன். எங்கள் வகுப்பில் அந்த வருடம் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் மொத்தம் 12 பேர்.

பெண்கள் 9 பேர் ஆண்கள் 3 பேர். வகுப்பில் நான் முதலும் இல்லை கடைசியும் இல்லை. நடுத்தரமான மார்க்குகள் வாங்குவேன். எப்படியும் பாஸாகிவிடுவேன் என்ற நம்பிக்கை என்னிடம் உறுதியாக இருந்தது. இப்போது தியாகராஜா மாஸ்டர் உதவுவதாகக் கூறியபின் நம்பிக்கை மேலும் உறுதியானது.

பரீட்சையும் வந்தது. என்னைப் பொறுத்தவரையில் அந்தப் பரீட்சை எனது வானொலி நாடகத்திற்கும் சேர்த்துத்தான். பாஸாகினால்தான் மேற்கொண்டு வானொலி நாடகங்கள் என்ற நிலை. இந்த இடைவெளிக்குள் 5 அல்லு 6 நாடங்களில் பங்கேற்று நடித்து விட்டேன். பாதியில் பறி போகப் போகிறதா அல்லது தொடரப் போகிறா என் நாடக வாழ்க்கை என்பதைத் தீர்மானிக்க பரீட்சையும் வந்தது.

பெறுபேறுகள் எப்படியாகுமோ என்று பயந்து எதிர்ார்த்துக் கொண்டிருந்த எனக்கு எதிர்பார்த்ததை விட நல்ல மார்க்குகள் பெற்று சித்தியடைந்திருக்கிறேன் என்ற செய்தி கிடைத்தது. 6 பாடங்களில், மூன்று பாடங்களில் விசேட சித்தியுடன் பெறுபேறுகள் கிடைத்தன.

அந்த மூன்று பாடங்கள் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்தம். கஷ்டப்பட்டு டியூஷன் எடுத்துப் படித்த எண்கணிதம் சாதாரண சித்திதான். என்றாலும் அந்த சாதாரண சித்தியும் கிடைத்தத்திற்கு காரணம் தியாகராஜா மாஸ்டர்தான். இத்தனைக்கும் அவர் இலவசமாகவே எனக்கு அந்த உதவியைச் செய்தார். இந்தக் காலத்தில் இப்படியான ஆசிரியர்களைக் காண்பது மிக மிக அரிது.

ஒவ்வொரு கால கட்டத்திலும் என் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒவ்வொரு திருப்பங்களுக்கும் எனக்கு கல்வியறிவூட்டிய ஆசிரியர்கள்தான் காரணமாக இருந்திருக்கிறார்கள். என்னை முதன் முதலில் வானொலி நிலையத்திற்கு பாட அழைத்துச் சென்றவர் சோதிநாதன் மாஸ்டர். எனக்குப் பிரத்யேக வகுப்புகள் வைத்து என்னைப் பரீட்சையில் சித்தியடையச் செய்தவர் தியாகராஜா மாஸ்டர். இருவரையும் என் உயிர் உள்ளவரை மறக்கவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் சோதிநாதன் மாஸ்டர் வானொலி நாடகங்களிலும் அவ்வப்போது பங்கு பற்றி வந்தார்.

ஒரு முறை சரித்திர நாடகம் ஒன்றில் நானும், என்னை வானொலிக்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரிய சோதிநாதன் மாஸ்டரும் சேர்ந்து நடிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த நாடகத்தில் நான் மகாராணியாகவும், மாஸ்டர் சேவகனாகவும் நடிக்க வேண்டும். நாடகத்தின் ஒரு கட்டத்தில் நான் சேவகனைப் பார்த்து' "எனது கட்டளையை உடனே நிறைவேற்று இல்லாவிட்டால் உன் தலை துண்டிக்கப்படும்" என்று அதிகாரத் தொனியில் கூற வேண்டும்.

எதிரில் இருக்கும் எனது ஆசிரியரைப் பார்த்து இந்த வசனத்தை என்னால் பேசமுடியவில்லை.

"தங்கச்சி நீங்கதான் அடுத்தது" என்று ஞாபகப்படுத்தினார் தயாரிப்பாளர் சானா.

நாடகப்பிரதியில் நான் வாசிக்க வேண்டிய இடத்தை விட்டு விட்டேனோ என்று அவர் நினைத்துவிட்டார். ஆனால், சோதிநாதன் மாஸ்டருக்குப் புரிந்துவிட்டது.

அவர் சிரிக்கத் தொடங்கி விட்டார். அவர் சிரித்தால் சத்தம் வெளியே வராது. அவரது உடம்புதான் சிரிக்கும். அங்கிருந்தவர்கள் அவரை ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

மாஸ்டர் சிரித்துக் கொண்டே, சானாவிடம் கூறினார். "சானா உங்களுக்கு விளங்கவில்லையே. அவ என்ட மாணவி. என்னைப் பார்த்து அந்த வசனத்தைப் பேசுறதுக்கு யோசிக்கிறா. வேறொண்டுமில்லை" என்றார். சானாவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன தங்கச்சி அருமையான சந்தர்ப்பம் கிடச்சிருக்கு மாஸ்டரைப் பழிவாங்கிறதுக்கு அவரிட்ட வாங்கின அடிக்கும் பேச்சுக்கும் திருப்பிக் குடுக்கிற மாதிரி வசனத்தை நல்லா இறுக்கிக் சொல்லிவிடும்" என்றார் நகைச்சுவையாக. அங்கிருந்தவர்கள் எல்லோரும் சிரித்து வீட்டார்கள்.

அப்போதெல்லாம் வாரம் ஒரு அரைமணி நேர நாடகம் ஞாயிற்றுக்கிமைகளில் இரவு 9.30க்கு ஒலிபரப்பாகும். மாதத்தின் கடைசி ஞாயிறு ஒரு மணி நேர நாடகம். 15 நிமிட நேர தொடர் நாடகமும் நகைச்சுவை நாடகங்களும் வார நாட்களில் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பதினைந்து நிமிட நேர நாடகங்கள் அனேகமாக நேரடியாகவே ஒலிபரப்பாகும். நேரத்திற்கு நாடகம் நிறைவு பெறவேண்டும். இந்த விஷயத்தில் சானாவின் திறமையை பாராட்டாமல் எவரும் இருக்க மாட்டார்கள். ஒலிபரப்பு நேரத்திற்கு முன்னால் ஒத்திகை பார்ப்போம்.

முதலில் சாதாரணமாக வாசிக்கச் சொல்வார். அப்போதே நாடகப் பிரதியில் நேரத்தைக் குறித்துக் கொண்டே போவார். அடுத்த கட்டம் எடிட்டிங். எந்தெந்த வசனங்கள் வெட்டப்பட வேண்டும் என்பதைக் கூறுவார். வெட்டிய பின்னர் நடிப்புடன் கூடிய ஒத்திகை. அந்த ஒத்திகையின் பின்னர் நடிக நடிகர்களின் நடிப்பை பற்றிய அவரது கருத்தையும் அவர் எதிர்பார்க்கும் திருத்தங்களையும் விளக்குவார்.

அவ்வப்போது சானா கூறும் திருத்தங்களை உடனுக்குடன் அவரவர் பிரதியில் அடையாளமிட்டுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், திருத்தங்களின் பின்னர் மூன்றாவது முறையான ஒத்திகையில் தவறு விடும்போது அந்த நடிகரோ நடிகையோ வசமாக மாட்டிக் கொள்வார். ஒத்திகை நேரங்களில் அவரவர் நாடகப் பிரதிகளில் திருத்தங்கள் செய்துகொள்வதற்குப் பேனா கொண்டுவராமல் யாராவது மற்றவரிடம் சைகையால் பேனா இரவல் கேட்பாரானால் சானாவுக்கு உடனே கோபம் வந்துவிடும்.

"அவருடைய பேனையை உமக்குத தந்து விட்டு அவர் என்ன விரலாலேயா அவருடைய ஸ்கிரிப்ட்ல திருத்தம் செய்யிறது." என்று சத்தம்போடுவார். அதற்குப் பிறகு அந்த நடிகர் அடுத்த முறை வரும்போது ஒன்றுக்கு இரண்டு பேனாவாகக் கொண்டுவந்து விடுவார்.

நாடகம் நேரடி ஒலிபரப்பின்போது ஒத்திகை நேரத்தில் நடித்ததைவிட சிறிது கூடுதலாக உணர்ச்சி வசப்பட்டு நடித்து சில விநாடிகளை அல்லது நிமிஷங்களை கூடுதலாக எடுத்துக் கொள்ளும் நடிகர்களும் இருக்கிறார்கள். அப்படியான சமயங்களில் அடுத்து வரும் கதாபாத்திரங்கள் அந்த நேரத்தை சமப்படுத்த வேண்டும்.

கட்டுப்பாட்டு அறையில் இருந்து சானா நடிகர்களுக்கு சைகை மூலம் ஒவ்வொன்றாகச் சொல்லுவார். அவரது சைகைகளைப் புரிந்து கொண்டு கலையத்திற்குள்ளே இருக்கும் நடிகர்கள் நாடகத்தை சரியான நேரத்திற்கு முடிவுக்குக் கொண்டு வருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் குறி இசையோடு அறிவிப்பாளர் நாடகத்தில் பங்குபற்றியவர்களின் பெயர்களைக் கூறி முடிக்கும்பொது ஒரு வினாடியும் பிசகாமல் ஒலிபரப்பினை அடுத்த நிகழ்ச்சிக்குக் கையளிக்கும்போதும் சானாவின் சாதனையை இதுவரை எவரும் தொட்டதில்லை என்று துணிவாகக் கூறலாம்.

அவரிடம் பயிற்சி பெற்றவர்களில் இந்தியத் திரைப்படத்துறையில் சிறந்த இயக்குனர்களில் ஒருவரும் ஒளிப்பதிவாளருமான பாலு மகேந்திராவும் ஒருவர் என்பதில் நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டும். அதேபோல் தென்னிந்திய திரைப்பட நடிகரும் இலங்கையின் பொப் இசைச் சக்கரவர்த்தியுமான

A.E.மனோகரனும் சானாவிடம் நடிப்புப் பயிற்சி பெற்றவர் தான்.

வானொலி நாடகங்கள் மூன்று வகையான தமிழ் பேச்சு வழக்கில் ஒலிபரப்பப்பட்டு வந்தன. யாழ்ப்பாணத் தமிழ், இந்தியதமிழ், மற்றது சுத்தமான செந்தமிழ், சரித்திர நாடகங்கள் தான் செந்தமிழில் பேசப்பட்டு நடிக்கப்பட்டது. இந்தியத் தமிழ் நன்றாகப் பேசக் கூடியவர்கள், ரோசாய்ரோ பீரிஸ், பஞ்சவர்ணம் லட்சுமணன் (இவர்கள் நகைச்சுவை ஜோடி) பிச்சையப்பா, பிலோமின சொலமன் (குணசித்திர கதாநாயகன் நாயகி) எஸ்.எம்.ஏ.ஜப்பார், ராஜேஸ்வரி (சரித்திர நாயகன் நாயகி) இப்படி பிரதான கதாபாத்தரங்களுக்கு இவர்கள் தான் என்று முத்திரை பதித்தவர்கள்.

யாழ்ப்பாணத் தமிழில் நாடகமென்றால், அதற்கான நடிக, நடிகைகள் வேறு. நவரத்தினம், தர்மலிங்கம், மார்க்கண்டு, கணேசபிள்ளை, வசந்தா அப்பாத்துரை, சோதிநாதன் மாஸ்டர், பரிமளாதேவி விவேகானந்தா போன்றவர்கள் நடிப்பார்கள்.

வானொலி நாடகத்துறையில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த அத்தனை கலைஞர்களுடனும் நானும் நடித்திருக்கிறேன் என்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது. அதைவிடப் பொருமைப்படக் கூடிய விஷயம். அன்றைய தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் அதிகாரியும் கவிஞருமான கலாநிதி கே.எஸ். நடராஜா எழுதி சானா அவர்கள் தயாரித்து வழங்கிய ஒரு மணி நேரக் கவிதை நாடகம்

அந்தக் கவிதை நாடகத்தில் இருந்த ஒரேயொரு பெண் கதாபாத்திரத்தில் நான் நடித்தேன். அந்தக் கவிதை நாடகத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்தோன்றிக்கவிராயர் சில்லையூர் செல்வராஜன் பிரதியை எழுதிய கவிஞர் கலாநிதி கே.எஸ்.நடராஜா அவர்கள்.

இவர்களோடு சேர்ந்து இனிய கவிதைத் தமிழில் நானும் பேசி நடித்து. அந்த மூவரினதும் பாராட்டையும் பெற்ற பெருமை இருக்கிறதே. அது என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு இனிய அனுபவம். அந்த அரிய சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த சானா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். என்னுள் ஒளிந்திருக்கும் எனது திறமைகளை வெளிக்கொணர்ந்து இனம் காட்டியவர் சானா அவர்கள்.

அந்த நாளில் ராஜா ராணி திரைப்படத்தில் வெளிவந்த சேரன் செங்குட்டுவன், சோக்ரடீஸ் போன்ற நாடகங்களின் வசனங்களையும் இல்லற ஜோதி திரைப்படத்தில் அனார்க்கலி நாடக வசனங்களையும் பாடமாக்கி ரசித்து ரசித்துப் பேசிப் பழகிப்பார்த்து மகிழ்ந்த எனக்கு வானொலியில் அப்படியான ஒரு கவிதை நாடகத்தில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தையும் எனக்களித்த சானாவை இன்றும் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

நான் பாடுவேன் என்று தெரிந்ததும் பிரபல மேடைநாடகக் கலைஞர்களான யாழ்ப்பாணம் வி.வி.வைரமுத்து குழுவினரோடு கோவலன் கண்ணகி நாடகம் வானொலியில் ஒலிபரப்பாகும்போது கண்ணகியாகப் பாடி நடிக்கும் சந்தர்ப்பத்தை சானா எனக்கு வழங்கினார்.

ஒரு முறை ஒரு வானொலி நாடகத்தில் நானும் ஐபாரும் நகரசுத்தித் தொழிலாளிகளாக நடித்தோம். அந்த நாடகத்தின் பெயர் ஞாபகம் இல்லை. ஆனால் அந்த நாடகத்தில் நாங்கள் இருவரும் பாடிய பாடல் ஞாபகம் இருக்கிறது. "ஆத்தோரம் கொடிக்காலம் அரும்பரும்பா வெத்தலயாம் என்று நான் துவங்க போட்டாச்செவக்குதில்ல பொன்மயிலெ ஓம் மயக்கம்" என்று ஐபார் பாடலைத் தொடர்ந்து பாடுவார். கிராமத்துப் பாணியில் நாம் பாடியதைப் பார்த்து சானா அன்று வெகுவாக ரசித்தார்.

ஆனால் சானா அவர்கள் அத்தோடு என்னை விட்டுவிடவில்லை. என்னுள்ளே இன்னொரு திறமையும் இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார். அதைப்பற்றி நான் ஒருபோதும் சிந்தித்ததும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பற்றி என்னைக் கேட்டபோது ஒரே வார்த்தையில் மறந்துவிட்டேன். அதுதான் மேடை நாடகம்.

"சானா! எனக்கு மேடையில் நடிக்க வராது"

"அதை நானல்லோ சொல்ல வேணும் உமக்கு நடிக்க வருமா வராதாஎண்டு"

"இல்லை சானா எனக்கு ஓடியன்சைக் கண்டால் பயத்தில் நடிக்க வராது"

"அது நாங்க ஓடியன்ஸ் பக்கம் இருட்டாக்கிப் போடுவம். அப்போ உமக்கு ஆக்களை விளங்காது"

"ரேடியோவில் ஸ்கிரிப்டப் பார்த்து நடித்துவிட்டுப் போய்விடுவோம். இது நேரடியாக முகத்தைப் பார்ததுப் பேசவேண்டும். அதுவும் தெரியாத ஆக்களொடை."

"உமக்குத் தெரியாத ஆக்கள் ஒருவருமில்லை. உமக்குத்தான் மெயின் ரோல். நீர்தான் பதியூர்ராணியாக நடிக்கிறீர். அரசனாக வாறவர் மிகவும் கவுரவமான ஒரு மனிதர். யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியின் அதிபர் ஏ.ரி.பொன்னுத்துரை. மற்ற நடிகர்கள் எல்லோரும் உமக்குத் தெரிந்தவர்கள்தான."

'கல்லூரி அதிபரா ஐயோ வேண்டாம் சானா அவரோட நான் எப்படி வசனம் பேசி நடிப்பேன்?"

'அவரோட உமக்கு பேசுறதுக்கு வசனமொண்டும் இல்லை. உமக்கு உம்முடைய காதலனாக வாற ஜபாரோடதான் பேசுறதுக்கு வசனம் இருக்கு".

மேலும் என்ன சொல்லி மறுக்கலாம் என்று யோசித்தேன் உடனே ஞாபகம் வந்தது.

"என் வீட்டில் நிச்சயம் இதற்கு சம்மதிக்க மாட்டார்கள்" என்றேன்.

'"நானே வந்து உம்முடைய தகப்பானார்ட்ட பேசி அனுமதி எடுக்கிறன். அந்தப் பொறுப்பு என்னட்ட விட்டுவிடும்" என்றார்.

இதற்கு மேல் நான் என்ன சொல்வது? "சரி" என்று கூறிவிட்டேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சானா சொன்னபடியே அன்று மாலையே வீட்டுக்கு வந்துவிட்டார். அவர் மாத்திரமல்ல அவரோடு ரேடியோ மாமா சரவணமுத்து, வரணியூரான் கணேசபிள்ளை ஆகியோரையும் அழைத்து வந்திருந்தார். என்ன கேட்கப் போகிறார்களோ, அப்பா என்ன சொல்லப் போகிறாரோ, வானொலி நாடகங்களில் நடிப்பதையே அப்பா விரும்புவதில்லை. மேடையில் நடிப்பதற்கு என்ன சொல்லப் போகிறாரோ என்ற பயத்தில் இதயம் படபடக்க அவர்களை வரவேற்றேன். அப்பாவுக்கு அவர்களை அறிமுகப்படுத்தினேன்.

1960 ஆம் ஆண்டு இது நடந்தது. என் தந்தையார் மாநகரசபை கட்டிட மேற்பார்வையாளராக இருந்து தனது 55 வது வயதில் ஓய்வு பெற்றவர். அதன் பின்னர் அவருக்கு நடக்கமுடியாமல் பக்கவாதம் வந்துவிட்டது. என் தந்தையாரிடம் சானா "இந்த நாடகத்தில் நடிப்பவர்கள் எல்லோரும் மிகவும் உயர்ந்த பதவியிலிருப்பவர்கள். கௌரவமானவர்கள் உங்கள் மகளின் ஆசிரியர் கூட இதில் நடிக்கிறார். இதோ இவர் சரவணமுத்து பாராளுமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராக இருக்கிறார். நீங்கள் உங்கள் மகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நாங்கள் இருக்கிறோம். பாதுகாப்பாகக் கொண்டு வந்து விட்டுவிடுகிறோம" என்று விவரமாக விளக்கிக் கூறினார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு அப்பா நிதானமாகப் பேசத் தொடங்கினார். நீங்கள் எல்லோரும் நல்லவர்கள்தான். கௌரவமானவர்கள் எனக்கு உங்கள் மீது முழு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் சமூகம் என்று ஒன்று இருக்கிறதே. நாடகத்தில் நடிப்பவர்களைக் கூத்தாடிகள் என்றுதான் முத்திரை, குத்துவார்கள். அவள் ஒரு நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டுச் செல்ல வேண்டியவள். அவளது எதிர்காலம் பாதிப்படைந்து விடுமோ என்றுதான் பயப்படுகிறேன் என்றார். என்றாலும் சானா விடவில்லை. "இந்த நாடகத்தில் நடிப்பவர்களும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். .இந்த ஒரே ஒரு நாடகம் மட்டும் செய்யட்டும். இந்த நாடகத்தில் அவவுக்கு நல்ல கதாபாத்தரம் உங்கள் மகளின் எதிர்காலத்தை எந்த வகையிலும் பாதிக்காது. நான் உறுதி அளிக்கிறேன்." என்று கூறி எனது தந்தையாரின் அரை மனதான சம்மதத்தைப் பெற்றுக் கொண்டார்.

நாடகத்தின் பெயர் பதியூர்ராணி. ஓஸ்கார் வைல்ட் எழுதிய நாடகம் Dutches of Paduwa ஆங்கில நாடகத்தை தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்த்து எழுதியவர் ஈழத்தின் பிரபல நாடக எழுத்தாளர் இ.ரத்தினம் அவர்கள். ஒரே ஒரு பெண் கதாபாத்திரம் அவள்தான் பதியூர்ராணி. மற்றவர்கள் எல்லோரும் ஆண்கள். அரசனாக நடித்தவர் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மஹாஜனக் கல்லூரியின் அதிபர் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள். எனது காதலனாக எஸ்.எம்.எம்.ஜப்பார், ராஜதந்திரியாக வில்லனாக சி.பி.எம்.காசிம், மற்றும் நீதிபதியாக ரேடியோமாமா சரவணமுத்து இப்படி ஒரு பெரிய நடிகர்கள் பட்டியல். ராஜகுருவாக எனது பள்ளி ஆசிரியர் ஆர்.எஸ்.சோதிநாதன் மாஸ்டரும் நடித்தார்.



தயாரிப்பாளர் சானாவுடன் பதியூர் ராணி நாடகக் கலைஞர்கள் தாசன் பெர்னாண்டோ / உமா சண்முகநாதன் / சுபத்ரா சந்திர மோகன் / பிரின்ஸ்வாஸ் / கணேஷபிள்ளை / சீ.பி.எம்.காசீம் / ஏ.ரி.பொன்னுத்துரை / சரவணமுத்து மாமா / விசாலாட்சி / ஆர்.எஸ்.சோதிநாதன் / ஜபார் / சோமு ஆகியோர்.

ஒரு பொம்மலாட்டத்தைப் போல ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரெ அப்படியே ஆடினேன். பார்வையாளர்கள் பக்கம் சானா ஏற்கனவே கூறியபடி விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததால், என்னால் மேடைப்பயம் இல்லாமல் நடிக்க முடிந்தது. ஒவ்வொரு காட்சி முடிவிலும் கைதட்டல்கள் கேட்டது. சானா எனக்குத் தைரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டி மேலும் உற்சாகப்படுத்தினார். கொழும்பில் லயன்ல் வென்ட் தியேட்டர் கட்டப்பட்டு மேடை ஏற்றப்பட்ட முதல் தமிழ் நாடகமும் அதுதான். அதன் பின் இரண்டாம் நாள் நிதியெல்லாம் நீயே சமூக நாடகம். பீரபல நகைச்சுவை சமூக வானொலி நாடக எழுத்தாளர் எம்.நஸ்ரூதீன் எழுதியது.

இந்த நாடகத்திலும் எனக்கு ஒரு வயாதான தாயார் கதாபாத்திரம், இந்த நாடகத்தில் என்னோடு எதிர்வீட்டுத் தோழி மேரி ஜோஸ்பின், எஸ்.எம்.ஏ.ஜப்பார், எஸ்.ஆறுமுகம், சுகிர்தாதேவி எம்.ஏ.ஹமீட் ஆகியோரும் நடித்தனர். இந்த நாடகத்தில் ஒரு சிறு கதாபாத்திரமேற்று நடித்த எம்.ஏ.ஹமீட்தான் பின்னர் என் வாழ்க்கை என்னும் நிஜமான நாடகத்தில் கணவனாக வரப்போகிறார் என்பதை நான் அப்போது கனவிலும் நினைத்திருக்க மாட்டேன். நாடக விழாவில் மேடை அமைப்பு நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றிருந்தார். அந்த நேரத்தில் தற்செயலாக அமைந்ததுதான். நீதியெல்லாம் நீயே நாடகத்தில் அந்த சிறு கதாபாத்திரம்.



எஸ் ஆறுமுகம் விசாலாட்சி
நிதியெல்லாம் நீயே நாடகத்தில் ஒரு காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகவிழாவின் மூன்றாவது நாடகம்தான் ஒரு மின்னல் மலைநாட்டு எழுத்தளாரான என்.எஸ்.எம்.ராமையாவின் புதுமைப்படைப்பு. அண்ணன், தங்கை, காதலன் மூன்றுபேரைக் கொண்ட கதை. கதை காண்பிக்கப்படுவது நாயகியின் வீட்டில், வானொலியில் ஒரு மணித்தியால நாடகமாக ஒலிபரப்பாகிய நாடகம். மேடைக்குச் சில காட்சி அமைப்புக்களோடு இரண்டு மணித்தியால நாடகமாக்கப்பட்டது. அண்ணனாக ரோசாரியோ பீரிஸும், காதலனாக எஸ்.எம்.ஏ.ஜப்பாரும், தங்கையாக நானும், அந்தக் நாடகத்தில் நடித்தோம். ஒரே காட்சி வீட்டின் வரவேற்பறை பாத்திரம்தான். கதாபாத்திரங்களும் மூன்று பேர்தான்

அந்த நேரத்தில் கொழும்பு நகரின் தியேட்டரில் நெஞ்சில் ஓர் ஆலயம் படம் ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் படத்தின் கதையும் கூட மூன்று கதாபாத்திரங்களைப் பிரதான கதாபாத்தரங்களாகவும், ஒரே செட்டாக ஆஸ்பத்திரியிலும் தான் கதை எடுக்கப்பட்டிருந்தது. படம் நன்றாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அது பிரபல இயக்குனரான ஸ்ரீதரின் புதுமைப்படைப்பு. இது ஒரு சாதாரண மேடை நாடகம்.

வானொலியில் சிறப்புச் சத்தம் (Sound effects) மூலமாக இடி, மழை, மின்னல் காற்று இவைகளைப் போட்டு நாடகம் ஒலிபரப்பாகியது. அதேபோல் மேடையிலும் அந்தச் சூழலை எப்படிக் காண்பிக்கப் போகிறார்களோ என்று எதிர்பார்ப்புடன் இருந்த எனக்கு அந்த மேடை அமைப்பு என்னை பிரமிக்க வைத்தது.

'சோ" என்ற இரைச்சலுடன் மழை பெய்வதாகவும், மின்னல் ஒளியைத் தொடர்ந்து பயங்கரமான இடிச்சத்தமும் ஆரம்பக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்களை அப்படியே அசர வைத்துவிட்டது.

மழை பெய்வதை காண்பிக்க செட்டின் வெளிப்புறத்தில் ஜன்னலின் வெளியே வெள்ளிச் சரிகைப் பேப்பரால் நீளத்தில் தொங்கவிடப்பட்டிருந்த விதம் நிஜமாகவே மழை கொட்டுவதைப் போலவே

அந்தக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. செட்டில் நான் தனியாக அமர்ந்து புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகன் ஜப்பார் கதவை தட்ட நான் கதவைத் திறக்க அவர் உள்ளே வரவேண்டும்.

கதவைத் திறந்தவுடன் ஜப்பார் உண்மையிலேயே சொட்டச் சொட்ட நனைந்து வந்து நிற்கிறார். ஒத்திகையின்போது எவருமே அதைப் பற்றி யோசிக்கவில்லை. நானும் அவரை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு மீண்டும் வெளியே ஒருமுறை எட்டிப் எட்டிப் பார்க்கிறேன். இந்த மனுஷன் எப்படி இந்த அளவுக்கு நனைந்து போய் வந்திருக்கிறார். எதிர்பாராத ஆச்சரியம், எதிர்பாராத வகையில் எனது நடிப்பும் இயற்கையாகவே அமைந்துவிட்டது. பிறகுதான் தெரியவந்தது கடைசி நிமிஷத்தில் ஜப்பார் குளியலறைக்குச் சென்று தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு வந்திருக்கிறார் என்று. ஒரு வசனம் கூட பேசாமலே அந்தக் காட்சியில் கைத்தட்டல்கள் அரங்கத்தை அதிர வைத்தது.

அதேபோல் நாடகத்தின் இறுதிக் காட்சியிலும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. காதலன் ஒரு கடிதத்தை எழுதி மேசையில் வைத்து விட்டு ஊரைவிட்டே சென்று விடுகிறான். அந்தக் கடிதத்தில் எழுதியிருப்பதை ஏற்கனவே ஜபாரின் குரலில் ஒலிப்பதிவு செய்துவைத்திருந்தார்கள். மேடையில் நான் கடிதத்தைப் பார்த்து அழ வேண்டியது மாத்திரம்தான்.

பின்னணியில் பதிவு செய்யப்பட்டிருந்த ஜப்பாரின் குரலில் அந்தக் கடிதம் வாசிக்கப்பட வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் டேப்ரெக்கோர்டர் வேலை செய்யவில்லை. கையில் கடிதத்தை வைத்துக் கொண்டு நான் அழுகிறேன்.

ஆனால், கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயம் என்னவென்று பார்வையாளர்களுக்கு அறிய வாய்ப்பில்லை. எதிர்பார்த்த குரல் ஒலிக்கவில்லை. நல்லவேளை என் கையில் இருந்தது நாடகப் பிரதியில் கடிதம் உள்ள பக்கம்.

கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயமும் அதில் இருந்தது. நானே அந்தக் கடிதத்தை அழுது அழுது வாசித்தேன். எதிர்பார்த்ததை விட சிறப்பாக அமைந்து விட்டது அந்தக் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமென்னும் நாடகமேடையில் ஒருவனுக்கு ஒரு பிறவியில் ஒரு வேஷம்தான். ஆனால் இந்த நாடக மேடையில் ஒரு நடிகனுக்குத்தான் ஒரே பிறவியில் எத்தனை வேஷங்கள் ஒருநாள் ராஜா ஒருநாள் பிச்சைக்காரன் ஒருநாள் டொக்டர் ஒருநாள் குஷ்டரோகி ஒருநாள் பொலீஸ் ஒருநாள் கொள்ளைக்காரன் ஒருநாள் நீதிபதி ஒருநாள் குற்றவாளி அந்தந்தப் பாத்திரங்களை ஏற்று நடிக்கும்போது அவர்கள் அந்தப் பாத்திரங்களாகவே மாறி விடுகிறார்கள்.

எனது தாய்மொழி மலையாளமாக இருந்தபோதும் நான் படித்தது தமிழ்மொழி மூலம்தான். கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும்போதே கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திரைக் கதை வசனப் புத்தகங்களை வாசித்து மகிழ்வேன் இத்தனைக்கும் நான் திரைப்படங்கள் பார்ப்பது மிகவும் குறைவு. என் தந்தையாருக்குப் பிடிக்காது. பக்திப் படமென்றால் மாத்திரம் என் அண்ணனுடனும் அம்மாவுடனும் சென்று பார்க்க அனுமதிப்பார். படிக்கும் நேரம் தவிர எனது முழுநேரமும் வானொலியோடுதான். திரைப்படப் பாடல்கள் என்றால் எனக்கு உணவுகூடத் தேவைப்படாது. திரைக்கதை வசனங்களை வானொலியில் கேட்டு ரசித்த அனுபவம் மாத்திரம்தான்.

வானொலி நாடகங்களில் நடித்து நான் சம்பாதித்த பணத்தை சேமிப்பில் இட்டு வந்தேன். அம்மாவின் வற்புறுத்தலுக்காக சிறிது சிறிதாக நகைகள் வாங்கி சேர்த்துக் கொண்டேன். தங்கத்தின் விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போவதால் அதுவும் ஒரு நல்ல சேமிப்பாக எனக்குப்பட்டது. ஆனால் நகைகள் அணிந்து நான் ஒருபோதும் அழகு பார்க்க விரும்புவதில்லை.

தந்தையார் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவரது ஓய்வூதியப் பணம் மாதம் மாதம் கிடைத்துக் கொண்டிருந்தது. எனது மூத்த சகோதரும் அரச நிறுவனமான இலங்கை றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் எழுதுவினைஞராக வேலை பார்த்துவந்தார். அதனால் குடும்பம் ஓரளவு கஷ்டமில்லாமல் சென்றது.

எனது இளைய சகோதரன் படித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தையார் அவர் ஏற்கனவே ஜோதிடம், வானசாஸ்திரம் இவைகளில் தேர்ந்தவராதலால், அவரைத் தேடி நண்பர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள்.

கைகால் விளங்காத நிலையிலும் ஜோதிடம் பார்ப்பதை அவர் நிறுத்தவில்லை. அவருக்கு உதவியாக எழுதுவதற்கும் பஞ்சாங்கம் பார்ப்பதற்கும் நான் அவ்வப்போது உதவி வந்தேன். ஜோதிடம் பார்ப்பதற்கு எந்தக்காலத்திலும்

என் தந்தையார் எவரிடமும் பணம் வாங்கியதில்லை. அதனால் உதவியாளராக இருக்கும் எனக்குத்தான் ஏதாவது அன்பளிப்புப் பொருட்களாகக் கொண்டு வந்து தருவார்கள். என் தந்தையின் உற்ற நண்பர்களில் ஒருவர்தான் "தேசபந்து" V.T.V. ஐயா அவர்கள். இன்றும் என் மீது அன்பும் பாசமும் வைத்திருக்கிறார்.

எனக்கு என் சுகயீனமுற்ற தந்தையை விட்டுப் பிரிவதற்கு மனமில்லை. எனவே என்னை விரும்பும் ஒருவரை அதேநேரம் என் குடும்பத்திலிருந்து என்னைப் பிரிக்காத ஒருவரைத்தான் திருமணம் செய்து கொள்வதென்று தீர்மானமாக இருந்தேன்.

பணமும், நகையும் எவ்வளவு தேறும் என்று கணக்குப் பார்த்தவர்களைத் தவிர பண்பையும் மனித நேயத்தையும் கொண்ட மனிதரை நான் சந்திக்கவே இல்லை. அதுமட்டுமல்ல திருமணமான பிறகு நான் வானொலியில் நடிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று ஒரு நிபந்தனை வேறு.

இறைவன் எனக்குக் கொடுத்த வரம். இந்தக் குரல் வளமும், நடிப்புத் திறனும், அதைக்கூடாது என்று சொல்ல இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது.

"நான் உங்களுடனேயே இருந்து விடுகிறேன். எனக்குத் திருமணம் வேண்டாம்"

என்று நான் எனது தந்தையிடம் கூறிவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் கந்தையா நாடகத்தில் ஒரு காட்சி.
ஜோஸபின் ரொசாரியோ பீரிஸ் விசாலாட்சி சானா ஜபார்

என்னை அறிந்திலன் இத்தனை காலமும்
என்னை அறிந்த பின் ஏதும் அறிந்திலன்
என்னை அறிந்திட்டிருத்தலும் கைவிடாது
என்னையிட்டு என்னை உசாவுகின்றானே.

எனது பெற்றோரின் உறவினர்கள் கேரளத்தில் இருந்தார்கள். அங்கு தங்கியிருந்து அங்குள்ள சூழ்நிலையில் என்னை சிறிது பழகிப் பார்க்கும்படி என் தந்தை அனுப்பி வைத்தார். அழகான கிராமம். அமைதியான சூழ்நிலை. அங்கு சென்றால் என் மனம் இலங்கை வானொலியை முற்றாக ஒதுக்கி விடக்கூடும் என்பது அவரது எண்ணம். எனக்கும் ஆசையாகத் தான் இருந்தது. உறவினர்களைச் சென்று பார்ப்பதற்கு எனது பெரியப்பா மகன் ஒருவர் கொழும்பில் இருந்தார். அவருடன் என் கிராமத்திற்குப் புறப்பட்டேன்.

கொழும்பிலிருந்து கொச்சின் பயணமானேன் தரை மார்க்கமாக கொழும்பிலிருந்து தலைமன்னார்வரை ரயில் பின்னர் இடையில் 2 மணி நேரம் கப்பல் பயணம் வேறு. அதன் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுஷ்கோடியிலிருந்து மீண்டும் ரயில் பயணம். மிக உற்காசமாக இருந்து. ஊர்போய்ச் சேர்வதற்கு மூன்று நாட்கள் எடுத்தன.

எனது கிராமம், நான் பிறந்து தவழ்ந்து விளையாடிய வீடு, எனது உறவினர்கள் எல்லோரையும் கண்டவுடன் எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் ஒரே ஒரு பிரச்சினை, அப்போது எனக்கு என் தாய்மொழியான மலையாளம் கொஞ்சமும் தெரியாது. என்றாலும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது புரிந்தது. பதில் சொல்லத் தெரியவில்லை. எப்படியோ கைகளால் சைகை பாதி, வார்த்தை பாதி என்று சமாளித்தேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடங்களுக்கு என்னை அழைத்துச் செல்வார்கள். ஒவ்வொரு வீட்டிலும் மொழிப் பிரச்சனை பெரும் பிரச்சனையாக இருந்தது. தாய்மொழியைப் பேசுவதற்காவது பழக்கவில்லையே இந்தக் குட்டிக்கு, என்று எனது பெற்றோரைக் குறை கூறினார்கள்.

நாளிகேரத்தின்டெ நாடு என்று கேரளத்தைக் கூறுவாகள் நாளிகேரம் எனறால் தேங்காய். தென்னைமரங்கள் அதிகமாகக் காணப்படும மாநிலம். தென்னையிலும் இரண்டு வகை இங்கே காணப்படுகின்றன. உயரமாக வளர்ந்து தேங்காயாகத் தருவதற்கு ஒருவகை இன்னொரு வகை கைக்கெட்டும் உயரத்தில் எட்டிப்பறிக்கும் விதத்தில் இளநீர்க்குலைகளை ஏந்திநிற்கும் பதினாலாம்பட்டை என்று சொல்லப்படும் சிறிய வகைத்தென்னை.

தென்னங்கன்று அதன் பதினான்காவது மடலில் இருந்தே காய்க்கத் தொடங்கிவிடும். அதனால் அந்தச்சிறிய தென்னைக்குப் பதினாலாம்பட்டை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இளநீருக்கென்றே வீடுகளில் இதனை வளர்க்கிறாகள். திடீரென எவராவது மயங்கிவிழுந்துவிட்டால் அல்லது சுகயீனமுற்றால் உடனடியாகப் பறிப்பதற்கு ஏதுவாக வீட்டு முற்றத்தில் வளர்ப்பார்கள். தென்னைக்குத்தான் எத்தனை இளகியமனது பாருங்கள். உடனடித்தேவைக்கு உயரத்தில் ஏறிக்கஷ்டப்பட வேண்டாமே என்று கைக்கெட்டும்படியாக இளநீரைத்தருவதற்குத் தன் இனத்தில் இன்னொரு வகை.

ஒரு நாள் உறவினர் வீடொன்றுக்குச் சென்றிருந்தபோது குடிப்பதற்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள். நடந்த களைப்பினால் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது. என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன்னே சிறிய தென்னைமரம் கைக்கெட்டும் தூரத்தில் இளநீர்குலைகள் தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்டதும் ஒன்றைப் பறித்து அதில் உள்ள வழுக்கையைத் தின்ன வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.

அவர்களாகவே கேட்கிறார்களே என்று. ஒரு குரும்பை வெட்டித் தாருங்கள் என்றேன். எல்லோரும் சிரித்து விட்டார்கள். ஐயோ தவறாக ஏதும் கேட்டுவிட்டேனோ என்று பயந்து கையால் மரத்தில் இருக்கும் இளநீரை சுட்டிக்காட்டினேன்.

உடனே புரிந்து கொண்டு "ஆ கருக்கு வேணோ? வெட்டித்தராம்" என்று கூறி இளநீரை வெட்டி எனக்கு தந்தார்கள். அவர்கள் சிரித்ததற்கு காரணம் கேட்டேன். பக்கத்தில் நின்ற ஒரு பெண்ணைக் காட்டி "இவள்தான் குரும்பக்குட்டி. இவளை வெட்டிக் கேட்டால் எங்ஙனெ தாரது" என்று தமிழும் மலையாளமும் கலந்த மொழியில் கூறக் கேட்டதும் எனக்கு வெட்கமாகிப் போய்விட்டது. அந்த நிமிஷமே தீர்மானம் எடுத்தேன் மலையாள மொழியைக் கற்றுக்கொள்ளாமல் இந்த ஊரை விட்டுப் போகப்போவதில்லை என்று.

எனது தாயார் திருணமாகிக் கொழும்பு வந்தபோது அவர்களும் தமிழ் தெரியாமல் மிகவும் கஷ்டப்பட்டதாக என்னிடம் கூறியிருக்கிறார். அக்கம் பக்கத்து வீடுகளில் தமிழ்க் குடும்பங்களோடு பழகித்தான் அவரும் தமிழ் பேசக் கற்றுக் கொண்டார். எனது தாய் தந்தை இருவருமே என்னோடு தமிழில்தான் பேசுவார்கள். அதனால் மலையாள மொழி பழக்கமில்லாது போய்விட்டது.

இப்போது கேரளத்தில் எனது நிலை பெரிதும் தர்மசங்கடமாகிப் போய்விட்டது. நான் தங்கியிருந்த எனது தாய்மாமன் வீட்டில். அவருக்கு எட்டுக் குழந்தைகள்.

பாலர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்கள் இருந்தார்கள். எனக்கு அது மிகவும் இலகுவாகப் போய்விட்டது. அவர்களிடம் இருந்தே பாடப் புத்தகங்களை கேட்டு வாங்கி வாசித்துப் பழகினேன். அவர்களோடு பேசிப் பழகினேன் மூன்றே மாதத்தில் நன்றாகப் பேசவும், வாசிக்கவும் கற்றுக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தாய்மொழி எனக்குள்ளேயே மறைந்து இருந்திருக்கின்றது. அந்த மண்ணில் கால் வைத்ததும் தானாக வெளி வரத் தொடங்கிவிட்டது.

கேரளத்தில் ஐந்து மாதங்கள் இருந்தேன். திருவிழாக்கள். பண்டிகைகள், கொண்டாட்டங்கள், திருமணங்கள் இவைகளைப் பார்த்தும் பங்கு கொண்டும் மகிழ்ந்தேன். கேரளத்தில் திருமணங்களைப் பார்த்தபோது என்னுள் வேதனையே உண்டாகியது.

தமிழ் நாட்டைப் போலவே இங்கும் பெண்ணைப்பெற்றவர்கள், பெரும் பாவத்தைச் செய்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

பெண்ணைப் பெற்றுவிட்டால் அவளுக்கு சிறுவயதில் இருந்தே தங்க ஆபரணங்களை ஒவ்வொன்றாகச் சேர்க்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

அத்தோடு நின்றுவிட்டால் போதாது கல்வியிலும் பெண் பட்டப்படிப்பு வரை சென்றிருக்க வேண்டும். அழகாகவும் இருக்க வேண்டும்.

இந்தியாவிலேயே கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமான கேரளத்தில் பெணகளுக்கு இந்த நிலைமை என்றால் ஏனைய பகுதிகளில் பெண்களின் நிலைமை எப்படியானது எனபதை கூறத்தேவையில்லை.

மாப்பிள்ளைகளின் விலைப்பட்டியலோடு இடத்திற்கு இடம் பேரம் பேசுவதற்கு திருமணத்தரகர்கள இருக்கிறார்கள். இந்த விலைபேசுதலுக்கு ஸ்ரீதனம் என்று ஒரு கௌரவமான பெயர் வைத்திருக்கிறார்கள். விலை பேசப்பட்ட பின்னர்தான் பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாகும். பெண்ணின் விருப்பு வெறுப்பு இங்கு பேசப்படுவதில்லை. ஆனால் நல்ல உழைப்பாளிகள் அநேகமான ஆண்கள் வெளிநாடுகளில் வேலை பார்ப்பவர்களாகவே இருக்கிறார்கள். திரைகடலோடியும் திரவியம் தேடு என்கின்ற தமிழ்ப் பழமொழியைக் கடைப்பிடிப்பவர்கள் கேரளத்தில்தான் அதிகம் காணப்படுகிறார்கள்.

இவையெல்லாம் இப்போது கால மாற்றத்தால் மாறி இருக்கலாம் அல்லது மாற்றப்பட்டிருக்கலாம். நான் இந்தக் காட்சிகளைக் கண்டு வேதனைப்பட்டது. 1961 ஆம் ஆண்டு. எல்லாச் சடங்குகளும் முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமான பெண் கணவன் வீடு செல்லும் காட்சி, மனதை உருக வைக்கும் காட்சி.

இந்திய சம்பிரதாயப்படி பெண் பார்ப்பது பேரம் பேசுவது திருமணம் முடித்து கணவன் வீடு செல்வது, அதன் பின்னர் கணவன் வீடும். கணவனைச் சார்ந்த உறவினர்கள் மட்டுமே, அவளது சொந்தங்களாகி விடுவது, கணவனது குடும்பத்திற்கே தன்னை அர்ப்பணிப்பது இவைகள் காலகாலமாக நடந்து வரும் நிகழ்ச்சிகள்.

பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணைப் வளர்ப்பதே இன்னொரு வீட்டுக்குப் போக வேண்டியவள் என்ற எண்ணத்தில்தான் வளர்க்கிறார்கள். இந்தப் பரிதாப நிலையை என்னவென்று சொல்வது.? ஒரு தாய் ஆண்பிள்ளையைப் பத்து மாதம் சுமந்து கஷ்டப்பட்டுப் பெறுவதைப் போலவேதான் பெண்பிள்ளையையும் பெற்றெடுக்கிறாள்.

ஆனால் ஆண் பிள்ளை கடைசிவரை தங்களோடு இருக்கப்போகிறவன் என்றும் பெண்பிள்ளை வேறொரு குடும்பத்தில் போய் வாழப்போகிறவள் என்றும் வித்தியாசம் காட்டியே வளர்க்கப்படுகிறாள்.

அந்தக் காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை கிடையாது. எல்லாம் ஆண் வாரிசுகளுக்கு மாத்திரம் தான். கேரளத்தில் மாத்திரமல்ல முழு பாரத்திலும், ஏன் இலங்கையிலும் அப்படித்தான் இருந்தது.

இப்போது அந்தச் சட்டம் மாற்றப்பட்டிருக்கிறது. பெண்களுக்கும் சொத்தில் சரிசமமான பங்கு கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இந்த உரிமை வந்த பிறகும் கூட சீதனம் என்ற வழக்கம் இன்னும் மாறாமல் இருக்கின்றது. காரணம் ஆண் பெண் விகிதாசாரத்தில் ஆண்களை விடப் பெண்கள் கூடுதலாக இருப்பதுதான்.

ஆனால இப்போதுதான் இந்த விகிதாசாரம் தலைகீழாகப் போய்விட்டதே.

அப்படியானால் அடுத்த தலைமுறைக்கு எல்லாமே தலைகீழாக மாறுமா? ஸ்ரீதனம் பெண்ணுக்குப் புருஷனிடமிருந்து கிடைக்கவேண்டியது என்றாகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரளத்தில் என்னைக் கவர்ந்தவை இரண்டே விஷயங்கள்தான். ஒன்று பசுமையான இயற்கை அழகு நிறைந்த காட்சிகள், மற்றது சுவையான உணவு.

விதிவழி அல்ல திவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி நித்தலுஞ் சோதிப்பிரானும்
பதிவழி காட்டும் பகலவனாமே

கேரளாவில் இருந்து வந்த பின்னர் மீண்டும் வழமைபோல் வானொலி நாடகங்களில் பங்கு பற்றத் தொடங்கி விட்டேன். இந்தக் காலப்பகுதியில் ஒரு நாள், பதியூர்ராணி மேடை நாடகத்தில் என்னோடு நடித்த சி.பி.எம்.காசிமை, எழுத்தாளர் மானா மக்கீன் அவர்களின் திருமண வரவேற்பு வைபவத்தின் போது சந்திக்க நேர்ந்தது.

நானும் மேரி ஜொஸபினும் அந்தத் திருமணத்திற்குச் சென்றிருந்தோம். சீ.பீ.எம்.காசீம் அவரது நண்பருடன் வந்திருந்தார். எங்கள் இருவரையும் கண்ட காசீம் எங்களுக்கு அவரது நண்பரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவரைத் தெரியுமா? நாடகவிழாவிலே பாத்திருப்பீங்க மேடை அமைப்பு நிர்வாகம் இவர்தான் செய்தார"

"ஆமாம் நிதியெல்லாம் நீயே நாடகத்திலும் நடித்தாரே".

மேரி ஜொஸ்பின் அவரை அடையாளம் கண்டு கொண்டார்.

"ஆமாம் அவரேதான்.

'உங்க ரெண்டுபேரையும் இங்கே பாத்ததும் அறிமுகம் செய்து வைக்கச்சொல்லி என்னைக் கேட்டார். ஆனா ஜொஸபின் நல்லா ஞாபகம் வச்சிருக்காங்க."

'மேடைநாடகங்களுக்கு செட்டிங் அமைச்சுக் கொடுப்பது தொழிலாகச் செய்து வருகிறீர்களா?" ஜொஸபின் கேட்டாள்.

'இல்லை இல்லை அது சானாவுக்கு உதவியாக இருந்து அந்த வேலையைச் செய்து கொடுத்தார். தொழில் வேற இருக்கு ஒரு இரும்புக்கடையில் சேல்ஸ் மேனாக வேலை பார்க்கிறார் இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் பத்திரிகையில் புரூப் ரீடராகவும் இருக்கிறார்" காசீம்தான் இதற்கும் பதில் கூறினார்.

"மனுசனுக்கு வேலை கிடைக்கிறதே கஷ்டமான இந்தக் காலத்தில ஒருவர் இரண்டு வேலை பார்ப்பதா?" ஜோஸபினின் குறுக்கு விசாரணை தொடர்ந்தது.

"ஒன்று வேலை. ஒன்று பொழுதுபோக்கு. பத்திரிகையில் புரூப் ரீடர் வேலை பொழுதுபோக்கு. அது இரவு நேர வேலை". காசிமின் நண்பர் இப்போதுதான் வாயைத் திறந்தார்

'அப்படி இரவு பகலாக கஷ்டப்பட்டு யாருக்காக சம்பாதிக்கிறீங்க".

வேடிக்கையாகத் தான் கேட்டாள் மேரி ஜோஸ்பின்.

அதற்கு பதில் கூறாமல் தலையை குனிந்து கொண்டார். காசிம்தான் அதற்குப் பதில் கூறினார்.

" சின்ன வயசிலேயே சிலோனுக்கு வந்துவிட்டார். வேலை பாத்துக் கொண்டே கொழும்பு ஸாஹிராகக் கல்லூரியில் இரவு நேர வகுப்பில் சேர்ந்து எஸ்.எஸ்.சி வரை படித்து பரீட்சை எழுதியிருக்கிறார். வாங்கிற சம்பளம் புத்தகங்கள் வாங்கிறதுக்கே சரியாப்போயிடும். நிறையப் புத்தகங்கள், நாவல்கள் வாங்கி வாசிப்பார். இப்ப கூடப் பாருங்களேன் கையிலே புத்தகத்தோடதான் கலியாண வீட்டுக்கு வந்திருக்கிறார்.

"அப்படியா. எனக்கும் புத்தகங்கள் வாசிப்பதென்றால் ரொம்பவும் பிடிக்கும். கையில் என்ன புத்தகம் அது. வாசித்து முடித்து விட்டீர்களா?" என்று ஆவலோடு கேட்டேன்.

'இவளைப் பாருங்களேன் இவ்வளவு நேரமும் வாயைத் திறக்காம இருந்தவ புத்தகம் என்றதும் என்னமா வாயப் பொளக்கிறா? ஏய்! அது அவர் பணம் கொடுத்து வாங்கினது உனக்குத் தாறதுக்கு இல்ல" ஜோஸபின் குறுக்கிட்டாள்

'நான் வாசித்து விட்டேன். வேண்டுமானால் நீங்கள் வாசித்துவிட்டுப் பிறகு தாருங்கள்" என்று கையில் இருந்த அந்தப் புத்தகத்தை நீட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதை எப்படித் திருப்பிக் கொடுப்பது" என்று கேட்டேன்.

"பரவாயில்லை. நீங்கள் அடுத்த முறை ரேடியோ சிலோனுக்கு வரும்போது கொண்டு வாருங்கள் நடிகர் தேர்வில் நானும் தெரிவாகி இருக்கிறேன் அடுத்த வாரம் எனக்கு நாடகம் இருக்கிறது. அங்கே வந்து நான் வாங்கிக் கொள்கிறேன்" என்று மறுபடியும் புத்தகத்தை நீட்டினார்.

புத்தகத்தை வாங்கினேன். அது நா.பார்த்தசாரதியின் குறிஞ்சிமலர் நாவல்.

முதல் பக்கத்தை புரட்டினேன். அந்தப் புத்தகம் வாங்கிய திகதி அதன் கீழ் எம்.ஏ.அமீது என்று பெயர் எழுதப்பட்டிருந்தது. நானும் ஜொஸபினும் விடைபெற்றுக் கொண்டோம்.

வீட்டிற்கு வந்து ஆறுதலாக புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு பக்கமாக் தட்டிக் கொண்டு போனேன். ஆங்காங்கே சில வரிகளை, கோடிட்டு வேறுபடுத்திக் காட்டியிருந்தார்.

*மின்சார விசிறி ஓடத் தொடங்கிவிட்டால் அதில் உள்ள பிளவுகள் மறைந்து ஒரே சுழற்சி வட்டம்தான் தெரிகிறது. நிற்கும்போதுதான் பிளவுகள் தெரிகின்றன. ஒரு செயலுமின்றி உழைப்பு முடங்கிக்கிடக்கும் போதுதான் உலகம் பெரிய துன்பங்களும் கவலைகளும் மிகுந்த இடமாகப் பிளவு பட்டுத் தெரிகிறது.*

*உழைப்பு ஒரு நல்ல மருந்து. அதில் மனப்புண்களும் கவலைகளும் ஆறுகின்றன. சோர்வும் தளர்வும் ஒடுங்கிவிடுகின்றன.*

இப்படியாகப் பல இடங்களில் இது போன்று கோடுகள். வாழ்க்கையில் அதிகமான துன்பங்களை அனுபவித்த ஒருவனுக்கு ஆறுதல் தரக்கூடிய, எதிர்கால நம்பிக்கையை ஊட்டக்கூடிய வாசகங்களைக் கோடிட்டு அடையாளம் காட்டி இருந்தார்.

அந்த வரிகளைப் பார்த்த எனக்கு ஒன்று விளங்கியது. வாழ்க்கையிலே வேதனைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்து வாழ்ந்து வருகிறவர் என்பது புரிந்தது. நாவலை விட அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்காங்கே கோடிட்டுக் காட்டியிருந்த வாசகங்கள் என்னைக் கவர்ந்தன.

இரவும் பகலும் ஓய்வின்றி இந்த மனிதர் ஏன் உழைக்கின்றார் என்பதற்கு விடை அங்கு தெரிந்து விட்டது. இந்த வரிகளோடு அவரது வாழ்க்கையை ஒப்பிட்டு பார்த்தேன். பகல் முழுவதும் உழைத்து இரவு கண் விழித்துக் கல்வி கற்று கல்விப் பொதுத் தராதர சாதரண தரப் பரீட்சையும் எழுதி இருக்கிறார். அவரது கடுமையான உழைப்பு என்னை வியப்பில் ஆழ்த்தியது.

நாவலை முழுமையாக வாசித்து முடித்து விட்டேன். கடைசிப் பக்கத்தில் அவர் வாசித்து முடித்த திகதி அதன் கீழ் கிறுக்கலான கையெழுத்து.

மீண்டும் மீண்டும் அவரிடம் புத்தகங்கள் கேட்டு வாங்கி வாசிக்க வேண்டும் என்ற ஒரு ஆர்வம் என்னுள் எழுந்தது. அவரது அறிவுப் பசிக்கும் இலக்கியத் தாகத்திற்குமான தேடல்கள் என்னை ஆச்சரியப்பட வைத்தன. "புரூப் ரீடராகப்" பணியாற்றிய பழக்கம். அச்சுப் பிழைகள் எழுத்துப் பிழைகள் இவைகளைக் கூட அடையாளமிட்டுத் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. தமிழ்மொழி மேல் அவர் கொண்டிருக்கும் பற்று என்னை வியக்க வைத்தது.

தொடர்ந்து அவரிடமிருந்து புத்தகங்கள் வாங்கி வாசித்தேன்.

ஒவ்வொரு புத்தகத்திலும் வாங்கிய திகதி., வாசித்து முடிந்த திகதி இவை நிச்சயம் இருக்கும். கோடிட்ட பகுதிகள் அவரது கொள்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் சுட்டிக்காட்டியது. மதவேறுபாடுகள் இன்றி எல்லா மதங்களைச் சேர்ந்த நூல்களையும் வாங்கிப் படித்து மதங்களைப் பற்றிய ஒரு ஆராய்ச்சியே பண்ணியிருக்கிறார் என்றே எனக்குத் தோன்றியது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று உறவு முரசு முழங்கினான் கனியன் பூங்குன்றன். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று திருமூலரின் திருமந்திரம் கூறுகிறது. நல்லவை எவையெவையோ அவை எல்லாம் உனக்கு வேண்டுவனவே என்று அறிவுறுத்தியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. சமரச சன்மார்கமே சிறந்த மார்க்கம் என்று வலியுறத்தியிருக்கிறார் வேதநாயகர். ஒளிவடிவானவன் இறைவன் என்று பாடியிருக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுமானவர். இவையெல்லாம் தமிழரின் பொது இறையுணர்வுக்குப் பொய்யாத சான்றுகளாக இருந்து வந்திருக்கின்றன.

ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் மற்றச் சமய இலக்கியங்களை விரும்பி படித்து மனம் திறந்து பாராட்டும் ஒரு நிலைமை உண்டாகுமேயானால் உண்மையான ஒருமைப்பாட்டை மக்கள் உள்ளங்களிலே உருவாக்க முடியும் என்கிறார் சமய இலக்கியங்கள் என்ற நூலின் ஆசிரியர் மணவை முஸ்தபா அவர்கள்.

அது போல் அந்த நூலிலே சமண இலக்கியம் பற்றிக் கவிஞர் மு. மேத்தா ஆராய்ந்திருக்கிறார். பௌத்த இலக்கியம் பற்றி பேராசிரியர் கிளெரன்ஸ் ஆராய்ந்து எழுதியிருக்கிறார். கிறிஸ்தவ இலக்கியம் பற்றி டொக்டர் அறவாணன் ஆராய்ச்சி செய்திருக்கிறார். இஸ்லாமிய இலக்கியத்தை சிலம்பொலி செல்லப்பனார் ஆராய்ச்சிக்கட்டுரை வரைந்திருக்கிறார்.

இவர்களின் வரிசையிலே அத்தனை சமய நூல்களையும் படித்தறிந்த இவரும் ஒரு சிறந்த இலக்கியவாதி என்றே எனக்குத் தோன்றியது.

ஆன சமயம் அது இது நன்றெனும்
மாய மனிதர் மயக்கமது வொழி
கானங்கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த வுருவது மாமே

இவையெல்லாவற்றையும் தனிமையில் இருந்து சிந்தித்துப் பார்த்தேன்.

குறிஞ்சிமலர் கதாநாயகி பூரணியின் கதாபாத்திரம் என் கண்முன்னே வந்து நின்றது.

வாழ்க்கை வெள்ளத்தோடு இழுபட்டுக் கொண்டு போகும் கோடி கோடிப் பெண்களில் ஒருத்தி அல்ல நீ. பெண்ணில் ஒரு தனி வாழ்க்கை நீ. வாழ்க்கையில் ஒரு தனிப்பெண் நீ.

எதிர்நீச்சல் போடுவதற்கு நானும் துணிந்து விட்டேன். இது நடந்தது 1963 ஆம் ஆண்டு. இப்படி ஒரு திருமணப் புரட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எப்படித் துணிந்து சாதித்தேன் என்று இப்போது நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கின்றது.

கடிதங்கள் பரிமாறிக் கொள்ளாமலேயே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்..

தாதி தூதோ தீது தத்தை தூதோதாது
தூதிதோ தொத்தித்த தூதிதே என்று

வெறும் கோடுகளை மாத்திரம் சுமந்து கொண்டு தூதாகச் சென்று வந்தாள் ஒரு தாதி. அவள் தான் குறிஞ்சிமலர்.

கலப்புத் திருமணங்களுக்கு சமூகம் இடந்தராத போதிலும் சட்டத்தில் இடம் இருந்தது. நண்பர்களும் எங்களுக்கு முழு ஆதரவு தந்தார்கள். எனவே முதலில் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்ட பின்னர் காலம் பார்த்துப் பெற்றோரிடம் தெரிவிக்கலாம் என்று நண்பர்கள் ஆலோசனை கூறினார்கள்.

அவர் பக்கம் எதிர்ப்புத் தெரிவிக்க உறவினர் எவரும் இல்லாததால், சமாளிக்க வேண்டியது என் பக்கம் மாத்திரம்தான். ஆனாலும் இது பெரிய போராட்டமாகவே அமைந்தது.

நண்பர்களின் உதவியோடு பதிவும் திருமணம் செய்து விட்டு அவர், அவரது இடத்திற்கும் நான் எனது வீட்டிற்கும் திரும்பி விட்டோம். இந்தப் பதிவுத் திருணத்தை முன்னின்று நடத்திய என் கணவரது உயிர் நண்பரான சிங்கரும் அவரது மனைவியும் சிரமப்பட்டு ஒத்துழைத்தார்கள்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களது உடன் பிறந்த சகோதரிதான் சிங்கரின் மனைவி என்று பின்னர்தான் தெரிய வந்தது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்களும் புதிதாக திருமணம் முடித்து புதுமணத் தம்பதிகளாக கொழும்பு வந்திருந்த சமயம் அது. எனவே அவர்களும் சேர்ந்து எங்கள் திருமணத்தை மனமகிழ்ச்சியோடு நடத்திக் கொடுத்தார்கள். ஆனால் வாழ்க்கையைத் தொடங்குவது நிச்சயமாக எனது தாய் தந்தையரின் ஆசீர்வாதத்தோடுதான் என்பதில் பிடிவாதமாக இருந்துவிட்டேன்.

பின்னர் ஒருநாள் சிங்கரும் அவரது மனைவியும் என் வீட்டுக்கு வந்து நிதானமாக என் பெற்றோரிடம் நடந்தவற்றை விவரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கூறி அவர்களைச் சமாதானப்படுத்தினார்கள். என் தாய் மிகவும் வேதனைப்பட்டாள். என் தந்தையிடம் கேட்டாள் "யார் யாருக்கோ சாதகம் பார்த்து அவர்களது எதிர்காலத்தைப் பற்றி யெல்லாம் கூறுகிறீர்களே உங்கள் மகளின் ஜாதகத்தைப் பார்க்க மறந்துவிட்டீர்களே" என்று கதறி அழுதாள்.

அதற்கு என் தந்தை கூறிய பதில் என்னை அதிர்ச்சியடைய வைத்து விட்டது. "அடி பைத்தியக்காரி, எல்லாம் விதிப்படிதான் நடக்கும். விதியை வெல்ல எவராலும் முடியாது. அவளது ஜாதகத்தை அவள் பிறந்தபோதே நான் பார்த்து விட்டேன். அவள் ஒரு கைவிளக்கு எவன் கையில் கிடைக்கிறதோ அவனுக்கு வழிகாட்டியாக விளங்குவாள். எங்கு சென்றாலும் யாரைத் திருமணம் செய்தாலும் அவளது ஜாதகப்படி உயர்ந்த நிலைக்கு வருவாள். நீ கவலைப்படாதே உன் மனதைத் தேற்றிக் கொள்" என்று ஆறுதல் கூறினார். நான் ஓடிச் சென்று அப்பாவின் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதேன். அப்பா தன் நடுங்கும் கைகளால் என் தலையை தடவி என்னை ஆசீர்வதித்தார். என்றாலும் அம்மாவின் உள்ளம் ஆறுதல் அடையவில்லை.

எனது கணவர் தங்கியிருந்த இடமும் என் வீடும் அருகாமையில் நடந்து செல்லும் தூரத்தில்தான் இருந்தது. அவர் தங்கி இருந்த அறையில் தளபாடங்களோ. சமையலறைக்கு வேண்டிய பொருட்களோ எதுமே இல்லை. எங்கு பார்த்தாலும் புத்தகங்கள்தான் இருந்தன. ஒரு குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் எல்லாம் இனிமேல்தான் வாங்க வேண்டும். என் கணவர் வழமைபோல் வேலைக்குச் செல்ல நான் மறுநாளே என் பெற்றோரைப் பார்த்து வரப் புறப்பட்டேன்.

அங்கே என் வீட்டில் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லோரும் கூடி இருந்து துக்கம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள் நேற்றுப் போனாள் இன்று வந்திருக்கிறாள். "என்ன பிள்ளை இப்படி உன்ட அம்மாவையும், சுகமில்லாத அப்பாவையும் விட்டிட்டுப் போயிட்டியே."

"நான் எங்கே அவங்களை விட்டிட்டுப் போனேன். இதோ இங்கேதானே நிக்கிறேன" என்று பதில் கூறிவிட்டு வழமைபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வேலைகளைப் கவனிக்க ஆரம்பித்தேன். என் கணவர் வீட்டுக்குத் தேவையான, சமையலுக்குத் தேவையான பொருட்கள் ஒவ்வொன்றாக வாங்கிச் சேர்க்கும் வரை எனது பெற்றோரின் வீட்டிருந்துதான் தினசரி சாப்பாடு எடுத்துச் செல்வேன். அதனால் என் பெற்றோரைத் தினமும் வந்து பார்த்துப் போகும் சந்தர்ப்பம் அமைந்தது. அதுவே அவர்களுககு என் மீது கொண்டிருந்த கோபத்தையும் தணிய வைத்தது.

காலத்தால் மாற்ற முடியாத காயங்களே இல்லை
அதுபோல்
காலம் என் பெற்றோரின் காயங்களையும் மாற்றியது.

எமது நாடகத் தந்தையான சானா அவர்களிடம் ஒரு நாள் சென்று எங்கள் திருமண விஷயம் பற்றிக் கூறினோம். முதலில் அவர் நம்பவே இல்லை.

"சும்மா பகிடிவிடாதேயும்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். "உண்மைதான் சானா பகிடி இல்ல நாங்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம்". என்று மீண்டும் கூறினேன். அதிர்ச்சி அடைந்து விட்டார். "அதெப்படி? உங்கள் இருவரையும் ஒன்றாக நான் ஒரு போதும் கண்டதில்லையே. நடிக்க வந்தாலும் ஒருவருக்கொருவர் பேசிக்கூட நான் பார்த்ததில்லையே. எப்படி?" என்று வியந்தார்.

உடனே என் கணவரிடம் சானா கேட்ட முதல் கேள்வியே "அப்ப அவவுட பேரை மாத்திப் போட்டீரோ" என்பது தான். "இல்லை சானா அவங்க அதே பேரிலேயே, அதே மதத்திலேயேதான் இருக்கிறாங்க. பேரை நான் மாற்றச் சொல்ல மாட்டேன் என்றார்".

"அதை மட்டும் செய்யாதீர். இதுவரை அவ சம்பாதித்த பேர் புகழ், எல்லாமே அதோட போயிடும்" என்று கேட்டுக் கொண்டார். சானா என்மீது வைத்திருக்கும் அன்பையும் நம்பிக்கையும் பார்த்து என் கணவர் அசந்து போயிவிட்டார்.

"அவங்க எவ்வளவு காலம் நடிக்க வேணும் என்று ஆசைப்பட்டாலும் நான் அதற்கு தடை சொல்லமாட்டேன். விசாலாட்சி குகதாசன் என்று பழைய பெயரிலேயே நடிக்கட்டும்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை சானா அவருடைய பெயரை நான் பெருமையோடு என் பெயருக்குப் பக்கத்தில் சேர்த்துக் கொள்வேன். இதற்குப் பிறகு என் பெயரை விசாலாட்சி ஹமீட் என்றே சொல்ல விரும்புகிறேன்" என்று சானாவிடம் கூறிவிட்டேன்.

எப்படியான விமர்சனங்களுக்கும் நான் முகம் கொடுக்கத் தயார். சமூகத்திற்குப் பயந்து நான் போலியான வாழ்க்கை வாழப் போவதில்லை என்று உறுதியாகக் கூறினேன் சானாவிடம்.

எதிர்பார்த்த மாதிரியே பல கோணங்களில் இருந்தும் எங்களுக்கு எதிர்ப்புகள் வந்து சேர்ந்தன. மொட்டைக் கடிதங்கள், பயமுறுத்தல் கடிதங்கள், மோசமான வார்த்தைகளால் திட்டி எழுதப்பட்ட கடிதங்கள் இப்படியாக பல விதத்திலும் எதிர்ப்புக்கள் கிளம்பியது. எல்லாவற்றையும் தைரியமாக நின்று சமாளித்தோம்.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடனம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூடனம்
தன்னை மறைத்தது தன் கரணங்களாம்
தன்னில் மறைந்தது தன் கரணங்களே.

இந்தச் சமூகத்திற்கு நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். அதற்குப் பணம் சம்பாதிக்க வேண்டும். பணத்தை வைத்துத்தான் இந்த உலகத்தின் வாயை மூடவேண்டும் என்று தீர்மானித்தோம். இந்த உலகில் மதிப்பும், மரியாதையும் எல்லாம் மனிதனது பண பலத்தை வைத்துத்தானே தீர்மானிக்கப்படுகிறது.

தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசை எல்லாம் காசு முன் செல்லாது

நல்லவரானாலும் இல்லாதவரை நாடு மதிக்காது

எனவே நாம் இனி பணம் சம்பாதிக்கும் முயற்சியில் முழுமூச்சாக இறங்க வேண்டும். அதற்கு ஒரேயொரு வழி சொந்த வியாபாரம்தான். என்ற தீர்மானத்திற்கு வந்தோம்.

அதற்கு மூலதனமாகப் பணம் வேண்டும் நாணயமானவன், நேர்மையானவன், நல்லவன் என்ற பெயரையெல்லாம் என் கணவர் நிறையவே சம்பாதித்து வைத்திருக்கிறார். ஆனால், அவை மாத்திரம் போதாதே. பணம் என்கின்ற முக்கியமான மூலதனம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சேர்த்து வைத்திருக்கும் நகைகள் சேமிப்பில் உள்ள பணம் இவை எல்லாம் சேர்த்தாலும் சொந்தத் தொழிலுக்குப் போதாது. யாரிடமாவது கடன் பெற்றுத்தான் வேண்டும்.

யாரைக் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் என் அண்ணன் எனக்கு உதவ முன்வந்தார். தங்கைக்கு அண்ணன் தரும் சீதனமாக பெற்றுக் கொள்ளும்படி கூறினார். சீதனம் என்ற சொல்லையே வெறுப்பவள் நான். "சீதனமாக ஒன்றும் நீங்கள் தர வேண்டாம். கடனாக தருவதானால் தாருங்கள். ஒரு வருடத்தில் திருப்பித் தந்துவிடுகிறோம்" என்றேன்.

சரி என்று ஒப்புக்கொண்டு 40 ஆயிரம் ரூபாய் பணமாகத் தந்துதவினார். அன்று அந்த 40 ஆயிரம் இன்றைய 40 இலட்சத்திற்கு சமன். அப்போது எனது கணவருக்கு இலங்கை பிரஜாவுரிமை இல்லாததால் எனது பெயரிலேயே இரும்புக் கடை ஒன்றைத் தொடங்கினோம். ஒரு வருடத்தில் நகைகளைத் திருப்பிக் கொண்டோம், கடனையும் திருப்பிச் செலுத்தி விட்டோம்.

400 ரூபாய் மாத ஊதியம் பெற்று வாழ்க்கையை ஆரம்பித்தோம். வருடத்திற்கு நான்கு இலட்சம் வருமான வரி செலுத்தும் அளவுக்கு படிப்படியாக உயர்ந்தோம் என்றால் அத்தனைக்கும் காரணம் தன்னம்பிக்கையும் கடுமையான உழைப்பும் மாத்திரமே. அந்த உழைப்பின் வெற்றியைக் கூற வேண்டுமானால் அதற்கு தனியாக இன்னொரு புத்தகம் எழுதலாம். அதையும் எழுதுவேன். வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் வாலிபர்களுக்கு அது வழிகாட்டும்.

1965ம் ஆண்டு பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு சுகயீனமாகக் கிடந்த என் தந்தை காலமானார். அதன் பிறகு என் தயாரையும் என் தம்பியையும் எங்களுடனேயே வந்து இருக்கும்படி என் கணவர் கேட்டுக் கொண்டார். 10 வயதான என் தம்பி படித்துக் கொண்டிருந்தான். எனது தாயாரையும் எனது தம்பியையும் தனது தாயைப் போலவும் தனது உடன் பிறந்த சகோதரனைப் போலவும் கவனித்து அவர்களுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். என் தம்பி வளர்ந்து SSC பரீட்சை எடுத்ததும் நமது நிறுவனத்திலேயே வேலையும் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தாயின் கனவு என்னை ஒரு டொக்டராக்க வேண்டும் என்பது. அந்த அளவுக்குப் பொருளாதார வசதி இல்லாத காரணத்தினால், ஹோமியோபதி வைத்தியம் கற்றுக் கொள்ளும்படி என்னைக் கேட்டார். அப்போது இந்தியாவில் கும்பகோணத்தில் ஹோமியோபதி மருத்துவக் கல்வி நிலையம் ஒன்று டொக்டர் மூர்த்தி அவர்களினால் நடத்தப்பட்டு வந்தது. அந்த ஸ்தாபனத்துக்குக் கடிதம் எழுதினேன்.

இலகுவான முறையில் வெளிநாட்டிலிருப்பவர்களும் கற்றுக் கொள்வதற்கு வசதியாக தபால் மூலக் கல்வியை ஆரம்பித்திருப்பதாகவும், பாடங்களைத் தபாலில் அனுப்பி வைப்பதாகவும் வருட முடிவில் பரீட்சைக்கு மாத்திரம் இந்தியா வந்தால் போதும் என்று பதில் அளித்திருந்தார்கள். அதன்படி தபாலில் பணம் கட்டிப் பாடங்களைப் வரவழைத்துப் படித்தேன். ஆனால் பரீட்சை எழுதுவதற்கு இந்தியா போகவில்லை. அதனால் பாதியில் நின்றது ஹோமியோபதி.

எனது புத்தகக் குவியலுக்குள் வைத்தியம் சம்பந்தமான புத்தகங்களைப் பார்த்த என் கணவரிடம் அது பற்றிய விவரங்களைக் கூறவேண்டியதாகிவிட்டது.

'நீ ஏன் அந்தப் பரீட்சையை இந்தியாவுக்குச் சென்று எழுதக்கூடாது" என்று கேட்டார். இது நடந்தது 1968 ல் "இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிவிட்டேன். இனி என்ன பரீட்சையும், பாஸாவதும் விட்டு விடுங்கள்" என்றேன்.

"இல்லை பரீட்சை எழுதுகிறாய். நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

"எனது பெற்றோர் உறவினர்கள் எல்லோரும் தஞ்சையில் கும்பகோணத்திற்குப் பக்கத்தில் தான் இருக்கிறார்கள். அவர்களையும் பார்த்த மாதிரி இருக்கும். பரீட்சையும் எழுதிவிட்டு வரலாம்" என்று ஆலோசனை கூறினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் போக்குவரத்திற்கு கடவுச் சீட்டு தேவைப்படாத ஒரு காலம் இருந்தது. அது பிரித்தானியரின் ஆட்சிக்காலம். 1947 ல் சுதந்திரம் பெற்ற பின்னரே இரு நாடுகளுக்கும் கடவுச்சீட்டு முறை கொண்டு வரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வாழ்ந்துவந்த இந்தியப் பிரஜைகளுக்கு இலங்கைப் பிரஜா உரிமையும் வழங்கப்பட்டது. விண்ணப்பித்தவர்களுக்கே கிடைத்தது. என் கணவர் சிறுவயதிலேயே வந்தபடியால் பிரஜாவுரிமை பற்றி அவர் சிந்திக்கவில்லை.

அவருக்குக் கடவுச்சீட்டு பெறுவதிலும் பிரச்சனை. எனவே அவரது உறவினர்களைப் பார்க்க முடியாத சூழ்நிலையில் என்னைப் போய்ப்பார்த்து வரும்படி கூறினார்.

"சரி போகிறேன். ஆனால் திருச்சி விமான நிலையத்திற்கு என்னைக் கூட்டிச்செல்ல யார் வருவார்கள்?

"உன் மாமனாரே உன்னை வரவேற்க வந்து நிற்பார் போதுமா?

என்னால் நம்ப முடியவில்லை. "எப்படி அவருக்கு நான் யார் என்பதெல்லாம் தெரியுமா? இந்தத் திருமணத்தை ஏற்றுக் கொண்டு விட்டாரா? ஏன்று, கேள்வி மேல் கேள்வியாகத் தொடுத்தேன்.

எல்லாவற்றையும் எனது தந்தையாரிடம் கேட்டுக் கொள். அவரை நீ சந்திக்கத்தானே போகிறாய்" என்றார் .

பிள்ளைகளை என் தாயிடம் விட்டு விட்டுத் திருச்சிக்குப் பயணமானேன். விமான நிலையத்திற்கு எனது மாமனார் வந்திருந்தார். இலகுவாக அடையாளம் கண்டு கொண்டேன். சிரித்த முகத்தோடு காணப்பட்டார்.

எனவே என்மீது அவருக்குக் கோபமில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். முதலில் என்னை அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். உணவை வரவழைத்து இருவரும் சாப்பிட்டோம். முதலில் அவர் விசாரித்தது அவரது பேரப்பிள்ளைகளைப் பற்றித்தான். பின்னர் தான் மகனைப்பற்றி விசாரித்தார்.

"எல்லா விஷயத்தையும் எனக்கு எழுதியிருந்தான். படம் கூட அனுப்பியிருக்கிறான்.

"இப்பத்தான் ஒரு வருஷமா வீட்டுக்குப் பணம் அனுப்புறான்" என்றார். பிள்ளைகளின் படங்களை அவருக்குக் காட்டினேன். மிகவும் சந்தோஷப்பட்டார். பிள்ளைங்களுக்கு என்ன பேரு வச்சிருக்கீக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டார். "பொண்ணுக்கு யஸ்மின் தேவஸ்ரீ பையனுக்கு ஷிராஜ் ஸ்ரீராஜ் என்று வைத்திருக்கிறோம்." என்றேன்.

"ரெண்டு மதத்துக்குமே ஏத்துக்கிறாப்பிலதான் பேரு வச்சிருக்கீங்க. ஆனா

"வீட்டில் மத்தவங்களுக்கு இன்னும் நான் எதுவும் சொல்லல்ல. கொஞ்சநாள் போகட்டும் என்று பார்க்கிறேன். அதற்காக ஒன்னும் வருத்தப்படாதே. எல்லாம் சரியாப் போயிடும்" என்று சமாதானம் சொன்னார்.

என் கணவரின் உறவினர்களுக்குக் கொடுப்பதற்காகக் கொண்டு வந்த பொருட்களை அவரிடம் ஒப்படைத்தேன்.



கும்பகோணத்தில் ஹோமியோபதி டாக்டர் வீ. மூர்த்தி அவர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்ற போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பகோணம் செல்வதற்கு இன்னும் அரைமணி நேரத்தில் ஒரு பஸ் இருக்கு. அதுல நாம் புறப்பட்டுப் போவோம். ஹோமியோபதி கல்வி நிலையத்தில் உன்னை விட்டு விட்டு நான் அங்கிருந்து ஊர் போய்ச் சேர்ந்து விடுவேன் என்றார். கும்பகோணத்தில் இருந்து எவ்வளவு தூரம் உங்க ஊர் என்று கேட்டேன். ரொம்ப பக்கம்தான். அரை மணி நேரத்திலே நான் போயிடுவேன்.

எனக்குக் கடுதாசி போடுங்க. பரீட்சை முடிஞ்சதும் நானே வந்து அழைச்சுட்டுப் போய் ஏயர்போர்ட்டில விட்டிடுறேன் என்றார். அதே போல் ஒரு மாத பயிற்சி வகுப்புகளுக்குப் பின், பரீட்சையும் முடிந்து அத்தாட்சிப் பத்திரமும் கையில் தந்தார்கள். என் மாமனாரே என்னை வந்து அழைத்துச் சென்று விமான நிலையத்தில் விட்டார். கூடிய சீக்கிரம் பிரஜாவுரிமை எடுத்துகிட்டு தம்பியை ஒரு முறை ஊருக்கு வரச் சொல்லுங்க என்று கேட்டுக் கொண்டார்.

உறவுகள் நம்மோடு உறவாக இருக்க வேண்டுமானால் பணம் என்கிற சக்திவாய்ந்த தொடர்புச் சாதனம் முக்கியமாகத் தேவைப்படுகிறது. அவரும் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். அவருக்கு அந்த உரிமை கிடைப்பதற்கு மேலும் ஐந்து வருடங்கள் எடுத்தன.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே.

1972 ல் பகுதிநேர அறிவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்று பத்திரிகை விளம்பரத்தை பார்த்தேன். அவர்கள் கேட்டிருந்த கல்வித்தகைமை, அனுபவம் எல்லாம் என்னிடம் இருந்ததால் விண்ணப்பித்துப் பாக்கலாமா என்று கணவரிடம் கேட்டேன். பொழுதுபோக்கே ஒருவனுக்குத் தொழிலாக அமையும் என்றால் அவனைவிட அதிஷ்டசாலி எவருமில்லை. அறிஞர் பெர்னாட்ஷாவே கூறியிருக்கிறார். முயற்சித்துப்பார் ஆனால் கிடைக்கவில்லை என்றால் அதற்காக மனம் வருந்தக்கூடாது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் மாத்திரம் இல்லை. யாருக்கு என்ன சொல்வதானாலும் தான் வாசித்த புத்தங்களிலிருந்து மேற்கோள்காட்டித்தான் பேசுவார். பட்டென்று எப்படித்தான் அந்தந்த நேரத்தில் ஞாபகம் வருகிறதோ?

பகுதிநேர அறிவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்தேன். நான் பிறந்தது இந்தியாவாக இருந்தாலும் 1951 ஆம் ஆண்டு என் தந்தை, என் தாய், எனது சகோதரன், நான் நான்கு பேரும் இலங்கையில் பதிவுப் பிரஜைகளாக பதிந்து கொண்ட அத்தாட்சிப் பத்திரம் இருந்தது. எஸ்.எஸ்.சி சித்தியடைந்த அத்தாட்சிப் பத்திரத்தையும் இணைத்து அனுப்பி வைத்தேன்.

நேர்முகப் பரீட்சையும், குரல் தேர்வும் ஒரே நாளில் நடைபெற்றது. நேர்முகப் பரீட்சையின்போது அப்போது தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்த கலாநிதி கே.எஸ்.நடராஜா அவர்களும் கல்விச் சேவை அதிகாரியான திருமதி.ஞானம் இரத்தினமும் இருந்தார். எனது கல்வித் தகைமைப் பத்திரத்தைப் பார்த்து விட்டு தமிழ்மொழியிலும், சைவசித்தாந்தத்திலும் விசேட சித்தி. ஆனால் தாய்மொழி மலையாளம். திருமணம் முடித்திருப்பது ஒரு இஸ்லாமிய மதத்தவரை. என்று கூறிவிட்டு மெதுவாக என்னைப் பார்த்து புன்னகைத்தார் கே.எஸ்.நடராஜா.

1972ல் பகுதி நேர அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். மூன்று வாரங்கள், பயிற்சி வகுப்புகள் நடத்தினார்கள். அதன் பின்னர் நிகழ்ச்சிகளைத் தொடுக்கப் பழகவேண்டும். அப்போதெல்லாம் 15 நிமிட நேர நிகழ்ச்சிகளாக பல தரப்பட்ட நிகழ்ச்சிகள், திரைப்படப்பாடல்களைக் கொண்டு ஒலிபரப்பாகி வந்தன. இலங்கை வானொலியின் சிறப்பும் பெருமையும் இன்றும் பேசப்படுகிறதென்றால் வகை வகையான நிகழ்ச்சிகளின் தலைப்புகளும், தலைப்புகளுக்கேற்ற பாடல் தொகுப்புகளும்தான் காரணம்.

எனவே ஒலிவாங்கியின் முன்னால் இருந்து அறிவிப்பு செய்து பழகுவதற்கு முன் முதலில் இசைத்தட்டுக் களஞ்சியத்தில் இருந்து நிகழ்ச்சிகளைத் தொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

1931ல் முதன்முதல் வெளிவந்த தமிழ்ப் பேசும்படமான காளிதாஸ் திரைபடத்திலிருந்து அன்றைய புதிய திரைப்படங்கள் வரையிலான பாடல்கள் எமது இசைத்தட்டுக் களஞ்சியத்தில் இலக்கங்களின் வரிசைப்படி அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் எனக்குத் தரப்பட்ட நிகழ்ச்சிகள் இன்றைய நட்சத்திரம், இசைக்களஞ்சியம் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகள். இன்றைய நட்சத்திரம் பானுமதி.

15 நிமிடங்களுக்கு ஐந்து பாடல்கள் தொகுக்கப்பட வேண்டும். பானுமதி பாடிய பாடல்கள் ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்திக் கொண்டேன். அவற்றில் மிகச் சிறந்த பாடல்கள் ஐந்தை மனதில் நினைத்துக் கொண்டு, இசைத்தட்டுக்களின் இலக்கத்தைத் தெரிந்து கொள்ள இன்டெக்ஸ் என்படும் பெரிய புத்தகத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட ஒவ்வொரு புத்தகமும் ஒரு அம்மிக்கல்லின் பாரத்தைக் கொண்டது.

திரைப்படங்களின் பெயர்களும், பாடல் விவரங்களும் பாடல்கள் கொண்ட இசைத்தட்டு இலக்கங்களும் A to Z வரை பட்டியலிடப்பட்டு வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. நமக்குத் தேவையான திரைப்படத்தின் பெயரின் முதலெழுத்து எந்தப் புத்தகத்தில் இருக்கிறதோ அந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துத்தான். இசைத்தட்டுக்களின் இலக்கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பழகிக் கொள்ளும் வரையில் இந்தத் தேடல் விஷயம் கொஞ்சம் பாடாய் படுத்தும். பின்னர் இலகுவாக இருக்கும். இலக்கத்தைத் தேடிக்கண்டுபிடித்தால் மட்டும் போதாது. அந்த இலக்கத்திற்குரிய இசைத்தட்டுக்களையும் களஞ்சியத்தில் இருந்து தேடி எடுத்து ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் தலைப்பை எழுதி அவற்றோடு சேர்த்து வைக்க வேண்டும். வானொலியில் பாடல்களைக் கேட்டு ரசிப்பது எத்தனை சுகமானது. பாடல்களைத் தேடி எடுத்துத் தொகுத்து ஒலிபரப்புவது என்பது எத்தனை சிரமமானது. என்பதை அன்றுதான் உணர்ந்தேன்.

இலக்கங்களைத் தேடிக் கண்டுகொண்டாலும் இசைத்தட்டுக்கள் எங்கே இருக்கிறது என்பதையும் தேட வேண்டும். ஆயிரக்கணக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இசைத்தட்டுக் களஞ்சியத்தில் என் கையில் இருக்கும். இலக்கம் கொண்ட இசைத்தட்டு எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறது என்று நான் கண்டு பிடிக்க வேண்டும்.

எப்படியோ ஒருவிதமாக மிகவும் கஷ்டப்பட்டு நான்கு பாடல்களைத் தேடி எடுத்து ஒரு புறம் வைத்துவிட்டு இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு இசைத்தட்டு அதையும் தேடி எடுத்து விட்டால் இன்றைய நட்சத்திரம் பானுமதியை ஜொலிக்க வைத்துவிடலாம் என்று, இதுவரை கால்கடுக்க நின்று தேடி எடுத்த பாடல்களை ரசித்தபடி மனதில் அசைபோட்டுக்கொண்டே ஐந்தாவது பாடலையும் தேடி எடுத்துவிட்டேன். அப்பாடா என்று ஆறுதல் அடையும் வேளையில் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஏற்கனவே எடுத்து வைத்த நான்கு இசைத்தட்டுக்களும் வைத்த இடத்தில் இல்லை. யார் எடுத்திருப்பார்கள். அங்கே இருந்தவர்கள் ஒரு சில அறிவிப்பாளர்களும், டைப்பிஸட் விக்டோரியாவும் மாத்திரம்தான். அவர்களைக் கேட்போம் என்றால் அவர்கள் தங்கள் வேலைகளில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

அவர்கள் ஏன் நான் எடுத்து வைத்த இசைத்தட்டுக்களை எடுக்கப் போகிறார்கள்.

ஒருவேளை டைப்பிஸ்ட் எடுத்திருப்பாரோ, நிகழ்ச்சிப்படிவம் டைப்பண்ணுவது அவர்தான்.

"இங்கே வைத்திருந்த இசைத்தட்டுக்களை காணவில்லை நீங்கள் பார்த்தீர்களா? என்று தயங்கித் தயங்கிக் கேட்டேன். "அப்படியா? நான் பார்க்கவில்லையே." அவரே அங்கிருந்த மற்றவர்களிடமும் கேட்டார். அவர்களும் நாங்களும் பார்க்கவில்லை என்று கூறிவிட்டார்கள்.

எனக்கு அழுகையே வந்துவிட்டது. அப்படியே அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து விட்டேன். உடனே டைப்பிஸ்ட் மற்றவர்களிடம் "ஐயோ பாவம் முதல்நாளும் அதுவுமா நீங்க எல்லோருமா சேர்ந்து அவளை அழவைச்சுட்டீங்க போதும் இனிக் கொடுத்து விடுங்கள்" என்றார். எல்லோரும் சிரித்துவிட்டார்கள். புதியவரான என்னைப் பகிடி வதை செய்திருக்கிறார்கள் என்று பின்னர்தான் எனக்கு விளங்கியது.

"பாடல்களைத் தொகுப்பதற்கு இன்னொரு இலகுவான வழி இருக்கிறது. இசைத்தட்டுக்களின் வகைகளைக் கொண்டு தனித்தனியாக புத்தகங்கள் பாடல்களின் விபரங்களோடு இருக்கின்றன. அதில் தட்டிக் கொண்டு போனால் நமக்குத் தேவையான பாடல்களை இலகுவாகத் தெரிவு செய்யலாம்" என்று பின்னர் சொல்லிக் கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒன்று நாம் மனதில் நினைத்த பாடல்களைத் தேடுவது சிரமமானது. கிடைத்த பாடல்களில் பிடித்த பாடல்களைத் தெரிவு செய்வது இலகுவானது என்பதை அன்று பாடமாகப் கற்றுக் கொண்டேன். விரும்பியது அடைய வேண்டுமானால் கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தானே ஆக வேண்டும். எனவே நிகழ்ச்சிகளைத் தொகுப்பது எப்படி என்று எனக்கு அன்று கொடுக்கப்பட்டது பயிற்சி அல்ல பரீட்சை. ஆனால் இப்போது வரும் புதிய அறிவிப்பாளர்களுக்குப் பழைய அறிவிப்பாளர்களின் ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

பயிற்சி அறிவிப்பாளராக ஒலிவாங்கியின் முன்னே முதல்நாள் அனுபவம் மறக்கமுடியாத ஒன்று. அன்று ராஜகுருசேனாதிபதி கனகரட்ணம் கடமையிலிருந்தார். நான் ஒலிவாங்கியின் முன்னால் உட்கார்ந்திருக்கிறேன். என் முன்னால் மேசையில் இரண்டு keys அடுத்தடுத்து ஒரு விரல் இடைவெளிக்குள் இருந்தது. ஒன்று கறுப்பு நிறம். மற்றது சிவப்பு நிறம். சிவப்பு ஸ்விட்ச்சைப் போட்டு அறிவிப்புச் செய்ய வேண்டும். மறுபக்கத்தில் இருக்கும் ஒலிபரப்பு உதவியாளரிடம் பேசுவதனால் கறுப்பு ஸ்விட்சைப் போட்டுப் பேச வேண்டும்.

என்னைக் கண்டதும் ஒலிபரப்பு உதவியாளர் துரையப்பா கேட்டார். "நீங்கள் இன்றைக்கு air ல வருவீங்க என்று உங்கட friends க்கெல்லாம் சொன்னீங்களா?" என்று கேட்டார். நான் அவருக்கு மறுமொழி கூறுவதற்காக ஸ்விட்சைப் போட்டு, "இல்லை ஒருவருக்கும் நான் சொல்லவில்லை" என்று தலையை ஆட்டிக்கொண்டெ கூறினேன். இல்லையா இப்போ நீங்க சொன்னதெல்வாம் air ல போட்டுதே" என்றார்.

அப்போதுதான் நான் கவனித்தேன் நான் தவறுதலாக அறிவிப்புச் செய்யும் ஸ்விட்சைப் போட்டு பேசியிருக்கின்றேன் என்று. நான் பயந்தேவிட்டேன். எனக்குப் பயிற்சி அளிக்கும் ராஜகுரு சேனாதிபதிகனகரட்ணம் என்னைப் பார்ததுச் சிரித்துக் கொண்டிருந்தார்.

"உண்மையாகவே, நான் பேசியது பாடலோடு பாடலாக இடையில் ஒலிபரப்பாகிவிட்டதா"?, என்று பயத்தோடு கேட்டேன்.

உடனே ஒலிபரப்பு உதவியாளர் துரையப்பா "நல்ல வேளை நீங்கள் அங்கே ஸ்விட்சைப் போடும்போதே தவறான ஸ்விட்சைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுகிறீர்கள் என்று தெரிந்து இந்தப் பக்கம் வெட்டி விட்டேன். இல்லாவிட்டால் எல்லாம் போயிருக்கும். இண்டைக்கே வீட்டுக்கு அனுப்பி இருப்பாங்க" என்று அவர் சொன்ன பிறகுதான் எனக்கு உயிரே வந்தது.

என்னைப் பயமுறுத்திப் பார்ப்பதற்குத்தான் அந்த விளையாட்டை அவர்கள் செய்தார்கள் என்று பின்னர் கூறி சமாதானப்படுத்தினார்கள்.

ஒலிவாங்கியின் முன்னால் முதல் நாள் அனுபவம் என்று கேட்டால். ஒவ்வொரு அறிவிப்பாளரும் ஒவ்வொரு சுவையான சம்பவத்தைச் சொல்வார்கள். அது எந்த மொழி அறிவிப்பாளர்களானாலும் சரி. உதாரணத்திற்காக ஒரு சில சம்பவங்கள். ஆனால் அறிவிப்பாளர்கள் யாரென்று குறிப்பிடமாட்டேன்.

முதல் நாள் ஒலிவாங்கியின் முன்னால் இருந்து அறிவித்தல் செய்தார் ஒரு ஆங்கில அறிவிப்பாளர். வானொலியில் நேரம் சொல்வதற்கு முன்னால் "பிப்ஸ்" ஆறு முறை ஒலிக்கும். அதன் பின் "The time is nine o'clock"; என்று கூற வாயெடுத்தவர், "The nine is time o'clock" என்றாரே பார்க்கலாம். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சிரிக்காமல் இருந்திருப்பார்களா? இந்த இடத்தில் நிச்சயமாக ஒலிபரப்பு உதவியாளரால் காப்பாற்றியிருக்க முடியாது.

இன்னொரு சம்பவம். அதிகாலை 5 மணிக்கு ஒலிபரப்பு ஆரம்பமாகப் போகிறது. ஆரம்ப இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. அது முடிந்ததும் நேரத்தின் அடையாளமான பிப்பிஸ் ஆறுமுறை ஒலிக்கும். உடனே அறிவிப்பாளர் மைக்கைத் திறந்து "நேயர்களுக்கு வணக்கம். நேரம் 5 மணி" என்று கூற வேண்டும். மைக்கைத் திறந்து "நேயர்களுக்கு அச்சு" என்றார். ஆமாம் திடீரென்று தும்மல் வந்து விட்டது. மைக்கை மூடிவிட்டு தும்மியிருக்கலாம். அவருக்கு அந்த நேரத்தில் ஒன்றுமே ஓடவில்லை. இதுவும் திடீரென்று எதிர்பாராமல் நடந்ததால் ஒலிபரப்பு உதவியாளரால் அதைத் தவிர்க்க முடியவில்லை.

அந்த நாட்களில் அறிவிப்பாளர்களுக்கு ஒலிபரப்பு உதவியாளர்களின் பங்களிப்பு நிறையவே இருந்தது. நமது தமிழ் மக்கள் இந்த நாட்டிலிருந்து எப்போது வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து செல்லத் தொடங்கினார்களோ அப்போதே நமது தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்பு உதவியாளர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறிவிட்டார்கள்.

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதென்பது ஒரு சுவாராஸ்யமான கலை. அதுவும் திரைப்படப் பாடல்களைக் கொண்டு விதம் விதமான நிகழ்ச்சிகளை, அதன் தலைப்புக்கேற்பத் தொகுப்பதற்கு பாடல்களைப் பற்றிய முழு அறிவும் வேண்டும். நல்ல குரல்வளம், நல்ல உச்சரிப்பு மாத்திரம் ஒரு அறிவிப்பாளரை புகழடையச் செய்து விடாது. அவர் தொகுத்து வழங்கும் ஒவ்வொரு நிகழ்சிகளும் நேயர்களை அவர்களது. வேலைப்பளுக்களின் சுமைகளைக் குறைத்துச் சோர்வடையச் செய்யாமல் உற்சாகப் படுத்திக்கொண்டே இருக்கவேண்டும்.

இருபத்தையாயிரம் இசைத் தட்டுக்களுக்கு மேல் நமது இசைத்தட்டுக் களஞ்சியத்தில் இருக்கின்றன. பத்தாயிரத்திற்கு மேல் பாடல்கள் ஒலி நாடாவில் ஒலிபதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. ஆயிரத்திற்கு மேல் CDக்களும் இருக்கின்றன. எந்த நேரத்தில், எப்படியான நிகழ்ச்சிகளில் என்னென்ன பாடல்களை ஒலிபரப்பினால் பொருத்தமாக இருக்கும் என்பதை ஒவ்வொரு அறிவிப்பாளரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்

பாடகர்கள் தங்கள் குரல்வளத்தால் திறமையாகப் பாடிப்புகழ் சம்பாதித்துக் கொள்கிறார்கள். இசையமைப்பாளர்கள் நல்ல இனிமையான இசைக் கோலங்களை வழங்கி புகழ் பெற்றுவிடுகிறார்கள். கவிஞர்கள் நல்ல கருத்தாழம் கொண்ட பாடல்களை எழுதி புகழ் சம்பாதிக்கிறார்கள். தயாரிப்பாளர்கள் நல்ல ஜனரஞ்சகமான படங்களை தயாரித்து புகழ் சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

"யாரோ எழுதிய யாரொ பாடிய யாரோ இசையமைத்த பாடல்களை ஒலிபரப்புவதன் மூலம் அவர்களுக்கு ஈடான புகழை சம்பாதித்து விடுகிறார்கள். அறிவிப்பாளர்கள்"

இது எப்படி என்று ஆச்சரியமாக இருக்கலாம்.

திரை இசைப் பாடல்களை வைத்து விதம் விதமான நிகழ்ச்சிளாக்கி அந்தத் தலைப்புக்கேற்றவாறு பாடல்களைத் தெரிவு செய்து தொகுத்து வழங்கும் போது, ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பாளனுக்குள்ளேயும் ஒரு இசையமைப்பாளன் வெளிப்படுகின்றன. ஒரு கவிஞன் தோன்றுகிறான். ஒரு தயாரிப்பாளன் இனம் காணப்படுகிறான். ஒரு பாடகன் உருவாகிறான்.

எந்தப்பாடலில் என்னென்ன வரிகள் வருகின்றன என்பதை மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார்கள் எமது அறிவிப்பாளர்கள். பாடலை எழுதிய கவிஞர் அவர் எழுதிய வரிகளை மறந்தாலும மறக்கலாம். ஆனால் எங்கள் அறிவிப்பாளர்கள் எத்தனை ஆண்டுகள் பழமை வாய்ந்த பாடல் என்றாலும் பாடல் வரிகளை அப்படியே மனப்பாடம் செய்து வைத்திருக்கிறாகள்.

கவிஞர்கள் பாடல்களை எழுதுகிறாகள் என்றால்
அறிவிப்பாளர்கள் பாடல்களிலே வாழ்கிறார்கள்.

எப்படியான நேரங்களில் சூழ்நிலைகளில் எப்படியான பாடல்கள் ஒலிபரப்புவதற்கு உகந்தவை என்றும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். காலை புலரும் பொழுது அதற்கேற்ற பாடல்கள் மாலையில் அந்தி மயங்கும் வேளையில் அதற்கேற்ற பாடல்கள். இரவில் உறங்க மறுக்கும் விழிகளைத் தாலாட்டி உறங்க வைக்கும் அமைதியான இசையில் இனிமையான பாடல்கள். இவ்வாறு பாடல்களை வகை வகையாகப் பிரித்து பொருத்தமான நேரங்களில் பொருத்தமான பாடல்களை ஒலிபரப்புகிறார்கள்.

ஒலிபரப்பும் முதல்பாடலுக்கும் அடுத்த பாடலுக்கும் இசையில் ஒற்றுமை இருக்கும். கருத்தில் ஒற்றுமை இருக்கும்.

ஒரு நிகழ்ச்சியை அமைதியான பாடலோடு ஆரம்பிக்கும் அறிவிப்பாளர் தொடர்ந்து அப்படியான பாடல்களையே தெரிவுசெய்து ஒலிபரப்பி ஒரு நிகழ்ச்சியை நிறைவு செய்யும்போது அறிவிப்பாளரின் இசை அறிவு அங்கே வெளிப்படுகிறது.


தென் இந்திய திரைப்படத்துறையைப் பொறுத்த மட்டில் நமது வர்த்தக சேவையின் தந்தை மயில்வாகனம் காலந்தொட்டு இன்றைய அறிவிப்பாளர்கள் வரை அந்தத்துறை அவர்களுக்கு பெருமதிப்பும் மரியாதையும் வழங்கி வருகிறது. நான் கண்ட சொர்க்கம் என்ற திரைப்படத்தில் வரும் தங்கவேலுவின் நகைச்சுவைக் காட்சியில் நமது இலங்கை வானொலியின் ஒலிபரப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நமது வர்த்தக சேவையின் அறிவிப்பாளரின் குரல் சொர்க்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தும் கூட கேட்கிறதாக இந்திரசபையில் வைத்துத் தங்கவேலு கூறுவார்.

திரைப்படத்துறைக்கும் வானொலிக்கும் அன்று முதல் இன்று வரை நெருங்கிய கலைத்தொடர்பு இருந்து கொண்டு தான் வருகிறது.



தேசிய சேவையில் அறிவிப்பாளராக கடமையாற்றும் போது அன்று இசைத்தட்டுக்களை அறிவிப்பாளரே ஒலிபரப்புச் செய்ய வேண்டும்.

இலங்கை வானொலி வர்த்தகசேவை ஆரம்பிக்கப்பட்டபோது காலை அரைமணி நேரம் 10 முதல் 10.30 வரை மாத்திரம்தான் ஒலிபரப்பாகியது. இதனை ஆரம்பித்தவர் மூத்த அறிவிப்பாளர்களில் ஒருவரான எஸ்.பி.மயில்வாகனம். வர்த்தகசேவையின் தந்தை என்ற கௌரவம் அறிவிப்பாளர் எஸ்.பி.மயில்வாகனத்தையே சாரும். வர்த்தக சேவையின் அப்போது ஆரம்பக்குறி இசைப்பாடலாக P.U. சின்னப்பாவும், T.R. ராஜகுமாரியும் பாடிய நமஸ்த்தே நமஸ்த்தே நல்ல நாளிதே நமோ நமஸ்த்தே நமஸ்த்தே என்று ஆரம்பிக்கும் பாடல் ஒலிபரப்பட்டது. ஜிங்கிள் (jingle) என்று அழைக்கப்படும் முதல் விளம்பரப் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லு வலி வந்திரிச்சி மச்சானே என்று கோபால் பல்பொடி விளம்பரப்பாடலாகும். இந்த ஜிங்கிள் நேயர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

விளம்பரங்கள் சேரச் சேர வர்த்தக சேவையின் வளர்ச்சியும் உயர்ந்து கொண்டே சென்றது. இலங்கை வானொலி வர்த்தகசேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இந்தியாவில் விவிதபாரதி என்று வானொலி விளம்பரச் சேவை தோன்றியது. என்றாலும் இலங்கை வானொலியையே இந்திய நேயர்கள் விரும்பிக் கேட்டார்கள். வர்த்தக சேவை அறிவிப்பாளர்களைக் காண்பதற்காகவே இந்தியவிலிருந்து நேயர்கள் இலங்கைக்கு வருவார்கள். அந்த அளவிற்கு இலங்கை வானொலி பிரபல்யம் பெற்றிருந்தது.

இந்தியாவில் கடைகளில் வானொலிப் பெட்டி வாங்குபவர்கள் முதலில் கேட்பது "சிலோன் றேடியோ பிடிக்குமா இதுலே" என்று கேட்டு, அந்த அலைவரிசையைப் பிடித்துக் காண்பித்தால்தான் அந்த வானொலிப்பெட்டி விற்பனையாகும்.

தமிழ்மொழியின் இனிமையைத் தேனாய் அள்ளிச் சொரிந்தன அன்றைய திரைப்படங்கள். படிப்பறிவில்லாத பாமரனையும் தமிழ் படிக்க வைத்தது அன்றைய திரைப்படங்களின் இனிமையான வசனங்கள்.

1977ல் நானும் என் கணவரும் திரையுலகத்தோடு தொடர்புடைய பிரஸ் போட்டோகிராபரான மில்டன் என்பவரும், கோடம்பாக்கத்தைச் சுற்றிப் பார்க்க சென்றோம். மில்டன்தான் எம்மை அழைத்துச் சென்றார். அப்போது AVM நிறுவனத்தையும் அதன் பிரமாண்டமான படப்பிடிப்புத் தளங்களையும் ஷூட்டிங் செய்யும் முறையையும் கண்டு பரவசப்பட்டோம். அப்படியே AVM. ரெக்கோடிங் தியேட்டரில் இளையராஜா அவர்களின் பாடல் ஒலிப்பதிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அன்று ஒரேமுத்தம் திரைப்படத்திற்காக SPB யும் S..ஜானகியும் பாடும் பாடலுக்னான ஒத்திகை நடந்து கொண்டிருந்தது.

அந்த ஒலிப்பதிவை இருந்து பார்த்துவிட்டுச் செல்லுமாறு இளையராஜா அவர்கள் எங்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கே இருந்து ஒத்திகையைப் பார்த்து ரசித்தோம். அப்போது என் கையில் ஒரு சிறிய டேப் ரெக்கோர்டர் வைத்திருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஒத்திகையை நான் எனது டேப்ரெக்கோர்டரில் பதிவு செய்து கொள்ள ஆசைப்பட்டு. இளையராஜா அவர்களிடம் அனுமதி கேட்டேன். அவர் மிகவும் சந்தோஷப்பட்டு. இங்கே தாருங்கள். நானே இந்தப் பாடல் ஒத்திகையையும், ஒலிப்பதிவையும், உங்கள் டேப் ரெக்கோர்டரில் ஒலிப்பதிவு செய்து தருகிறேன் என்று வாங்கி கொண்டார்.

ஒரு பாடல் எப்படி உருவாகிறது என்று அந்த ஒலிப்பதிவைக் கேட்டால் முழுமையாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அத்தனை அற்புதமாகச் செய்து கொடுத்தார் இளையராஜா அவர்கள்.

ஆரம்பத்தில் SPB.க்கு பாடலின் மெட்டை ஆர்மோனியத்தோடு பாடிக்காட்டி அவரையும் பாட வைக்கிறார். அதனை ஒரு நகைச்சுவையாகச் செய்ய வேண்டுமென்று இருவரும் உரையாடிக் கொண்டே பாட்லின் மெட்டைச் சொல்லிக் கொடுக்கும்போதே SPB "அது ஏன் அப்படி? ஏன் ஒரே மாதிரியாக இரண்டு வரிகளும் வருகின்றன" என்றெல்லாம் சீண்டுவார். அதற்கு இளையராஜா, "ஏய்! சொல்லிக் கொடுக்கிற மாதிரி பாடீட்டு போவியா. ஏன் எதற்கு என்றெல்லாம் கேள்வி கேட்காதே" என்று சிரித்துக் கொண்டே சொல்வார். இந்த உரையாடலைக் கூட எனது டேப்ரெக்கார்டரில் பதிவு செய்து கொடுத்தார்.

ஒத்திக்கைக்குப் பின், வாத்தியக் கலைஞர்களுக்கு அவ்வப்போது சொல்ல வேண்டிய அறிவுறுத்தல்களையும் ஒலிப்பதிவுக்குத் தயாரானதும், ஒலிப்பதிவு செய்யப்படுகிறது என்பதை "டேப் ரண்ணிங்" என்று உதவி இசையமைப்பாளர் குரல் கொடுப்பதையும். பாடல் திருப்தியாக வருமட்டும் பல தடவைகள் டேக் எடுக்கப்படுவதையும், அத்தனை நிகழ்ச்சிகளையும் ஒன்று விடாமல் தனது ஒலிப்பதிவு வேலைகளையும் செய்து கொண்டே எனக்கும் ஒலிப்பதிவு செய்து கொடுத்தார். இளையராஜா அவர்கள். மிகவும் சுவாரஸ்யமான முறையில் ஒரு நிகழ்ச்சியைச் செய்வது போல் ஆர்வத்துடன் எனக்குச் செய்து கொடுத்தார்.

இந்த ஒரு பாடல் ஒலிப்பதிவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம் கிட்டத்தட்ட 6 மணி நேரம். "ஒரு பாடல் உருவாகிறது" என்ற தலைப்பிலே ஒரு நிகழ்ச்சி எனக்குக் கிடைத்து விட்ட சந்தோஷத்தில் அங்கிருந்து பிரிய மனமில்லாமல் பிரிந்தோம். என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவருக்கு இளையராஜாவை மிகவும் பிடித்துவிட்டது. இலங்கைக்கு ஒரு முறை வருமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த பாடல் ஒத்திகையை வர்த்தகசேவையில் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளும்படி தமிழ் நிகழ்ச்சி அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினேன். "அதெப்படி? பாடல்கள் மாத்திரம் தான் வானொலியில் ஒலிப்பரப்புவது வழக்கம். ஒத்திகையை யாராவது நிகழ்ச்சியாக ஒலிபரப்புவார்களா? வேண்டாம்!" என்று அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டார் அந்த அதிகாரி.

நான், சகோதரர் பி.எச்.அப்துல் ஹமீட் அவர்களிடம் அந்த கெஸட்டைக் கொடுத்துக் கேட்டுப் பார்க்கச் சொன்னேன். அவருக்கு அந்த நிகழ்ச்சி மிகவும் பிடித்துப் போய்விட்டது. அப்துல் ஹமீட் அப்போது ஒலிமஞ்சரி என்ற சஞ்சிகை நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தார். அந்த ஒத்திகை நிகழ்ச்சியை ஒலிமஞ்சரியில் தனது விளக்கத்தோடு ஒலிபரப்புச் செய்தார். எனது குரலில் அந்த நிகழ்ச்சியைச் செய்ய வேண்டும் என்று மிகவும் ஆவலாக இருந்தேன். ஆனால் எனக்கு அனுமதியும் மறுக்கப்பட்டது ஏனென்றால் நான் வர்த்தக சேவையிலிருந்து தேசீய சேவைக்கு மாற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதனால் எனது அந்த ஆசை நிறைவேறாமல் போனது. என்றாலும் எப்படியோ நாம் நினைத்தது. யார் மூலமாகவோ நடந்தேறிவிட்டது என்று மனத்திருப்தியடைந்தேன்.

என்னதான் திரைபடப் பாடல்களைப் பற்றிய அறிவும், ஞாபசக்தியும் இருந்தாலும் இந்த விஷயத்தில் பயிற்சியும் அனுபவமும் நிச்சயம் தேவை. முதல்நாள் பெற்ற அனுபவம். அடுத்தநாள் எப்படி செய்ய வேண்டுமென்பதைக் கற்றுக் கொடுத்தது இசைத்தட்டுக்களின் இலக்கங்களை வரிசையாகக் கொண்ட பாடல்களின் தொகுப்பு புத்தக வடிவில் இருந்தது. அவற்றிலிருந்து மிகச்சிறந்த பாடல்களை எனக்குப் பிடித்த பாடல்களை தேர்ந்தெடுத்து, ஜோடி மாற்றம், புலரும்பொழுது, அந்தாதி, இருவர் பாடியது, இன்பமும் துன்பமும், பெண்குரல், ஆண்குரல், தத்துவப்பாடல்கள் பாட்டுக்கென்ன பதில் இவ்வாறு நிகழ்ச்சியின் தலைப்புகளுக்கு ஏற்றவாறு அந்தந்தப் பாடல்களை, அந்தத் தலைப்புக்களின் கீழ் எழுதி எனக்கென்று ஒரு நிகழ்ச்சிப் படிவத் தொகுப்பினைப் புத்தகமாகத் தயாரித்து வைத்திருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம் இனி அந்த அம்மிக்கல் Index புத்தகத்தை அடிக்கடி புரட்டத் தேவையில்லை. இனி எந்த நிகழ்ச்சியானாலும் ஒரு சில நிமிடங்களில் பாடல்களைத் தொகுத்து நேரத்தையும் வேலையையும் எளிதாக்கிக் கொள்ளும் வகையில் அதனைத் தயாரித்து வைத்திருந்தேன்.

ஆனால், அத்தனையும் பயனற்றுப் போகுமென்று நான் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை அறிவிப்பாளர்களை தேசிய சேவைக்கு ஒரு பகுதியினரையும், வர்த்தக சேவைக்கு ஒரு பகுதியினரையும் வேறு வேறாகப் பிரித்ததில் நான் தேசிய சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டேன். தேசிய சேவையில் திரைப்படப்பாடல்கள் ஒலிபரப்புப்படுவதில்லை. அறிவிப்பாளராக வேண்டுமென்று எந்த ஆர்வத்தில் வந்தேனோ, முழு முயற்சி எடுத்து எல்லாவற்றையும் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டேனோ அவை எல்லாம் வீணாகி விட்டது.

வேண்டாம் எனக்கு இந்த வேலை என்று நின்றுவிடத் தோன்றியது. அந்த நேரத்தில் என் கணவர்தான் ஆறுதல் சொன்னார். எல்லாமே மாறும். எதுவும் நிரந்தரமானதல்ல. பொறுமையாக இரு எனக்கு நம்பிக்கை ஊட்டினார்.

பொதுவாக கலைத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஏற்படக் கூடிய, நன்மை தீமைகள், பாதிப்புகள் என்னென்ன என்று தெரிந்தவர் ஆதலால் எதுவானாலும் ஏற்றுக் கொண்டு, மனச் சந்தோஷத்தோடு கடமையைச் செய் என்றார். கடமையாற்றினேன். அதே நேரம் வர்த்தக சேவைக்கு மீண்டும் நான் மாறி அதில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் எனது முயற்சிகளையும் கைவிடவில்லை.

அறிவிப்பாளரான பிறகும் வானொலி நாடகங்களில் பங்குபற்றிவந்தேன். சானா ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் இசைச் சித்திரங்கள் உரைச் சித்திரங்கள் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வந்தேன். அப்போது இசைப்பகுதியில் தயாரிப்பாளர்களாக இருந்தவர்கள் நவராஜகுலம் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் ஆகியோர். இருவருமே எனது திறமை அறிந்து தங்கள் நிகழ்ச்சிகளில் எனக்குச் சந்தர்ப்பம் வழங்கினார்கள். அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவரது பக்திப்பாடல்கள் இசைத்தொகுதியில் ஒரு பாடல் அவருடன் சேர்ந்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979ம் ஆண்டு மெல்லிசைத் தேர்வில் பாடகியாகத் தெரிவு செய்யப்பட்டேன்.

பிரபல இந்திய வயலின் இசைமேதை டி.என். கிருஷ்ணன் அவர்கள் அந்த மெல்லிசைத் தேர்வுக்கு நடுவராக அழைக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் நான் இலங்கை வானொலியில் பாடிய மெல்லிசைப் பாடல்களில் அறிவிப்பாளர் ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் இயற்றிய ஒரு பாடல் இசைத்தட்டில் பதியப்பட்டது.

அதுவும் பாடலை இயற்றியரின் முயற்சியால்தான் அது நடந்தது.

இந்தக் காலப்பகுதியில்தான் நான் என் கணவரோடு சென்னை சென்றிருந்தபோது இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் இரட்டையர்களைச் சந்திக்க நேர்ந்தது.

இலங்கையின் பிரபல திருத்தலங்களில் ஒன்றான நல்லூர் முருகன் பாடல்கள் ஈழத்துக் கவிஞர் நல்லைக்குமரனால் இயற்றப்பட்ட பாடல்கள் என்னிடம் இருந்தது.

அவற்றை சங்கர் கணேஷ் அவர்களிடம் கொடுத்து இசையமைத்துத் தரும்படி கேட்டேன். அவற்றில் கணேஷ் நான்கு பாடல்களைத் தேர்தெடுத்து அவற்றிற்கு அற்புதமாக இசையமைத்து அவரே ஒலிப்பதிவு ட்றெக்கில் பாடியும் கொடுத்தார்.

அந்த ஒலிப்பதிவு நாடாவில் குரல் தனியாக பதியப்பட்டிருந்தது. அப்போதுதான் இலங்கைக்குக கொண்டுவந்து வேறு குரலில் அந்தப் பாடல்களை மீண்டும் பாடி ஒலிப்பதிவு செய்யலாம். ஆனால் இசையமப்பாளர் கணேஷ் என்னை அங்கேயே ட்றெக் எடுக்கும்போதே அவருடன் ஒரு பாடலைப் பாடவைத்தார். மற்ற மூன்று பாடல்களையும் இலங்கை வந்து அறிவிப்பாளர் ஜோஸப் ராஜேந்திரனுடன் ஒரு பாடலும் நான் தனியாக இரண்டு பாடல்களும் பாடி ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

ஆனால் அந்தப் பாடல்கள் அத்தனையும் ஒலிபரப்பிற்குத் தகுதியற்றது என அப்போதிருந்த தமிழ் நிகழ்ச்சி அதிகாரியினால் தடைவிதிக்கப்பட்டது.

சிறிது காலத்திற்குப் பின் பகுதிநேர அறிவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. நானும் மீண்டும் விண்ணப்பித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் தேர்வின்போது சில விளம்பரங்கள் வாசிக்கத் தந்திருந்தார்கள். சிறப்பாகச் செய்தேன். தேர்வில் நான் வர்த்தக சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகப் பதவியிலிருந்தார் திரு. வி.ஏ.திருஞானசுந்தரம் அவர்கள்.

அதிகாரிகள் ஆலோசனைக் குழுவினரில் ஒருவர் என்னைக் கேட்டார். வர்த்தகசேவையில் அப்படி என்ன இருக்கிறது. விளம்பரங்களில் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கமா? அல்லது அறிவிப்பாளர்கள் இறுதியில் தங்கள் பெயர்களைக் கூறி விடைபெறுகிறார்களே. அந்தக் காரணத்திற்காகவா? என்று கேட்டார். அதற்கு நான் கூறினேன் 'என் கணவர் ஒரு வர்த்தகர் அதனால் பணம் சம்பாதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. என் பெயரைக் கூறி என்னைப் பிரபலப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை. ஏனென்றால் வானொலி நேயர்களுக்கு ஏற்கனவே நாடகங்கள் மூலம் நான் மிகவும் பரிச்சியமானவள் சிறு வயதில் இருந்தே திரைப்படப் பாடல்களில் எனக்கு உள்ள மோகம். என்னை இந்தத் துறைக்கு இழுத்தது. வர்த்தக சேவையின் தீவிர ரசிகை நான்." என்று அவரிடம் கூறினேன்.

அங்கே வி.ஏ.திருஞானசுந்தரமும் இருந்தார். அவர் என்னிடம் ஒன்றுமே கேட்கவில்லை. ஆனால், அப்போது நான் கூறியதை நன்றாகப் புரிந்து கொண்டார் என்பதை என்னால் உணர முடிந்தது. தடை செய்யப்பட்டிருந்த எனது பாடல்களை மீண்டும் ஒலிபரப்புவதற்கு ஆவன செய்தார். நன்றியுடன் இன்றும் அவரை நினைவு கூர்கிறேன்.

பத்து வருடங்களின் பின்னர் 1982 ல் மீண்டும் வர்த்தகசேவையில் நான் ஏற்கனவே தொகுத்து வைத்திருந்த எனது அபிமானப் பாடல்களைக் கொண்ட நிகழ்ச்சித் தொகுப்பு அட்டவணையின் துணையோடு ஐக்கியமாகிவிட்டேன். எனது மகிழ்ச்சி, எதிர்பார்ப்பு எல்லாம் பத்து வருடப் போராட்டத்தின் பின்னர் பெற்றுக் கொண்டேன்.

அந்த அறிவிப்பாளரின் ஆசனம் எனக்கு ஒரு அரியாசனமாகவே காட்சியளித்தது.

ஆனாலும், இடையூறுகளும், தடங்கல்களும், ஏமாற்றங்களும் என்னை அவ்வப்போது தாக்கிக் கொண்டுதான் இருந்தன. இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது. கவிஞர் வைத்துமுத்துவின ஒரு கவிதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு காலத்தில் பெற்றே ஆக வேண்டும் என்று பிரம்மபிரயத்தனம் செய்து இடையூறுகளை வென்று, எதிர்ப்புக்களைச் சமாளித்து சாதித்த சில காரியங்களை இப்போது நினைக்கும்போது, இதற்குப் போய் இத்தனை போராட்டம், ஆர்ப்பாட்டம் செய்திருக்க வேண்டியதில்லை என்று தோன்றும்.

அதுவோ இதுவோ எதுவோ என்றே ஆசை வளர்த்ததும்
ஒரு காலம்
இதற்குத்தானா இவ்வளவென்றே இடுப்பைப் பிடித்ததும்
ஒரு காலம்.

இலங்கை வானொலியில் அறிவிப்பாளர்கள் இரண்டு வகையினர். ஒன்று நிரந்தர அறிவிப்பாளர்கள், மற்றது பகுதிநேர அறிவிப்பாளர்கள், நிரந்தர அறிவிப்பாளர்களுக்கு வாரத்தில் ஆறு நாட்கள் வேலை. ஒரு நாள் ஓய்வு. நிரந்தர அறிவிப்பாளர்கள் லீவு எடுக்கும் தினங்களிலும், அவர்களது ஓய்வு தினங்களிலும்தான் பகுதிநேர அறிவிப்பாளர்களுக்கு வேலை இருக்கும். அதாவது ஒலிபரப்பப்பு பாஷையில் சொல்வதானால் இடைவெளி நிரப்புபவர்கள் Filer. அதாவது ஒரு நிகழ்ச்சிக்கும் அடுத்த நிகழ்ச்சிக்கும் இடையில் நேரத்தை நிரப்பும வாத்திய இசை போன்றவர்கள்.

முன்பெல்லாம் நிரந்தர அறிவிப்பாளர்கள் நிறையப் பேர் இருந்தார்கள். அதனால் பகுதிநேர அறிவிப்பாளர்களுக்கு ஒலி அலையில் கடமையாற்ற சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே அமைந்தது. அப்படியே சந்தர்ப்பம் கிடைத்து விட்டாலும், அந்தக் குறிப்பிட்ட நிரந்தர அறிவிப்பாளரால் ஏற்கனவே தொகுக்கப்பட்டிருந்த பாடல்களைத்தான் அவருக்காக பணியாற்றும் பகுதிநேர அறிவிப்பாளரும் ஒலிபரப்பி ஆகவேண்டும். தன்னுடைய விருப்பங்களோ, தெரிவுகளோ, ரசனைகளோ எதுவும் கிடையாது. அதேநேரம், குறிப்பிட்ட அந்த நிரந்தர அறிப்பாளருக்கான அடுத்தவார நிகழ்ச்சிக்கு, அவருக்காக வேலை செய்த அந்த பகுதிநேர அறிவிப்பாளர், பாடல்களைத் தொகுத்து வைத்துவிட வேண்டும். அப்போதும் அங்கே அந்த நிரந்தர அறிவிப்பாளரின் ரசனைக்கேற்றவாறே பாடல்கள் தொகுக்கப்பட வேண்டும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிநேர அறிவிப்பாளர்கள் நேயர்களிடையே பிரபலம் அடையக் காலம் பிடித்தது.

அதனால் சஞ்சிகை நிகழ்ச்சிகளில் உதாரணமாக ஒலிமஞ்சரி, இசையும் கதையும், நாடகம், மங்கையர் மஞ்சரி போன்றவற்றில் பங்குபற்றித் தங்களை இனம் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்த வகையில் அன்புச் சகோதரர் அப்துல் ஹமீட் அவர்கள், தனது நிகழ்ச்சிகளிலே எனக்கு பங்குபற்றும் சந்தர்ப்பத்தை நிறையவே வழங்கினார். அதில்கூட. நிகழ்ச்சியின் இறுதியிலே என் பெயரைக் கூறும்போது நேயர்களின் சந்தேகத்தைத் தீர்க்கும் விதத்தில் சகோதரி விசாலாட்சி ஹமீட் என்று அழுத்தமாகவே கூறிவிடுவார்.

வர்த்தக சேவை என்றாலே, விளம்பரத்திற்குத்தான் அங்கே முக்கியத்துவம், விளம்பரம் இல்லையென்றால் ஒலிபரப்பே இல்லை இலங்கை வானொலி இயங்குவதே விளம்பரங்களால்தான். அந்த நாளில் வர்த்தக சேவை அரைமணிநேரம் தனது சேவையை நடத்திவந்த போதிலும் வானொலிக் கலைஞர்கள் தகுந்த முறையில் சன்மானம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

எந்த ஒரு கலைஞனும் தனக்குக் கிடைக்கும் மிகப்பெரிய சன்மானமாகக் கருதுவது ரசிகர்களின் பாராட்டுதல்களையும் கைதட்டல்களையும்தான். இதனை நன்றாகப் புரிந்து வைத்திருக்கும் சிலர் இப்போது கலைஞர்களைக் கருவியாக வைத்துப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இப்போது பல தனியார் வானொலிகளோடு போட்டி போட வேண்டிய நிலையில் இலங்கை வானொலி இருந்தாலும் விளம்பரங்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இலங்கை வானொலியை உதாரணங் காட்டிப் பேசக்கூடிய விதத்தில் அமைந்திருப்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. அதற்குக் காரணம் எமது அறிவிப்பாளாகளின் பேச்சுத்திறமை.

என்னைப் பொறுத்த வரையில் விளம்பரங்களில் குரல் கொடுப்பதற்கு ஆரம்பத்திலிருந்தே நான் அவ்வளவு அக்கறை காட்டியதில்லை. அப்படியும் சில விளம்பரதாரர்கள் இவருடைய குரல்தான் வேண்டும் என்று முகவர்களிடம் கேட்பார்கள். அப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தில் ஒரு சில விளம்பரங்கள் நான் செய்ய வேண்டிய சூழ் நிலை ஏற் பட் டி ருக் கி றது. நா ன் பெ ரு மை யா க ச் சொல்லிக்கொள்ளலாம் அல்லவா விளம்பரத்திற்காகக்கூட நான் பொய் பேசுவதில்லை என்று.

ஆனால் அதேநேரம் தொடர் விளம்பர நிகழ்ச்சிகள் செய்திருக்கிறேன்.

1979 ல் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் அனுசரணையில் சுகவாழ்வு என்ற ஒரு சஞ்சிகை நிகழ்ச்சி நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக வானொலியில் இடம்பெற்றது. வாரம் ஒருமுறை ஞாயிற்றுக் கிழமைகளில் ஒலிபரப்பான அந்த நிகழ்ச்சி நேயர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. எமது குடும்ப நண்பரான காவலூர் ராஜதுரைதான் விளம்பர முகவராக இருந்தார். அதனால் அவர் மூலமாக அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

அது ஒரு சிறுவர் ஆரோக்கிய நலம் சம்பந்தமான நிகழ்ச்சி என்றபடியால் மிகவும் உற்சாகத்துடன் மகிழ்ச்சியோடு அதனைப் பொறுப்பேற்றுச் செய்து வந்தேன். நிகழ்ச்சிக்கான பிரதியை நானே எழுதினேன். ஹோமியோபதி மருத்துவத்துறையில் பெற்ற அறிவையும் அதனால் பெற்ற பயிற்சியையும் வெளிப்படுத்த இந்த நிகழ்ச்சி மூலம் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது..

நாடகப் பகுதியை மாத்திரம் தயாரிப்பாளர் வாசுதேவன் நெறிப்படுத்தி வழங்கினார். நேயர்களின் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கு வைத்தியர் ஒருவர் ஆலோசனைகள் வழங்கி வந்தார்.

ஆரம்பத்தில் டொக்டர் இந்திரகுமார் நிகழ்ச்சியில் பங்குபற்றிவந்தார் அவர் வெளிநாடு சென்ற பின் டொக்டர் சசிதரன் சிறிது காலம் எங்களுடன் நிகழ்ச்சியில் இணைந்து கொண்டார். அவர் இப்போது லண்டனில் வசிக்கிறார். அதன்பிறகு தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் நிகழ்ச்சியில் வைத்திய ஆலோசனை வழங்கி வந்தார் டொக்டர் எஸ்.எப்.எல்.அக்பர் அவர்கள். இப்போதும் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வைத்திய ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இப்போது அவர் பெண் மருத்துவ மகப்பேற்று சத்திர சிகிச்சை நிபுணராக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பர நிகழ்ச்சிகளில் ஒரு தரமான பயனள்ள நிகழ்ச்சியை நான்கு வருடங்கள் தொடர்ந்து நடத்தச் சந்தர்ப்பத்தினை வழங்கிய காவலூர் ராஜதுரையை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. நிகழ்ச்சியின் தலைப்புப் பாடலைக் கூட நானும் எஸ்.கே.பரராஜசிங்கமும்தான் பாடியிருந்தோம்.

அறிவிப்பாளர்களுக்கு நல்ல குரல் வளமும் அழகான உச்சரிப்புத் திறனும் இருந்தால் மாத்திரம் போதாது. எல்லாத் துறைகளிலும் பொதுவான அறிவு இருத்தல் அவசியம். அறிவிப்பாளர்கள் என்றால் அறிவுள்ளவர்களாக எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களாக இருத்தல அவசியம். தேடல் என்பதும் பாடல் போலவே சுகமான அனுபவம்தான். அது நிகழ்ச்சிகளானாலும் செய்திகளானாலும் நாளும் தேடல்கள் நடந்து கொண்டே இருக்கவேண்டும்.

செய்தி வாசிப்பாளர்களும், நாட்டு நடப்பு, அரசியல், உலகத் தலைவர்கள் பற்றிய விபரங்கள் அவர்களின் பெயர்களை சரியான முறையில் உச்சரிப்பது இவைகளை அறிந்திருக்காவிட்டால் அவர்களால் செய்திகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் வாசிக்க முடியாது. முதலில் வாசிப்பவர் செய்திகளைப் புரிந்து கொண்டால்தான் கேட்பவர்களுக்கு அவற்றைப் புரியவைக்க முடியும். அதற்கு வெளிநாட்டுச் செய்திகளை ஏனைய வானொலிகள் ஒலிபரப்பும்போது அவற்றைக் கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு செய்தி வாசிப்பாளரால் இப்படி ஒரு செய்தி வாசிக்கப்பட்டது.

'திடீரென்று கொரில்லாக்கள் மறைந்திருந்து தாக்கியதால் ராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டார்கள்."

கெரில்லாக்கள் என்பதற்குப் பதிலாக கொரில்லாக்கள் என்று வாசித்துவிட்டார். அதைத் தவறென்றும் அவர் உணரவில்லை. ஏனென்றால் கொரில்லாவுக்கும், கெரில்லாவுக்கும் உள்ள வித்தியாசம் அவர் அறிந்திருக்கவில்லை.

செய்தியை வாசித்துவிட்டு வெளியே வந்தவர் என்னைக் கண்டதும் தேனீர் அருந்தி விட்டுவரலாம் என்று என்னை அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் உணவுச்சாலைக்கு சென்று தேனீர் அருந்திக் கொண்டே

'இன்று செய்தியில் என்ன விசேஷம்" என்று நான் கேட்டேன.

'கொரில்லாக்கள் மறைந்திருந்து தாக்கியதில் இராணுவத்தினர் இறந்திருக்கிறார்கள்" என்றார். 'என்ன கொரில்லாக்கள் தாக்கினார்களா? குரங்குப்பட்டாளம் எங்கே அங்கு வந்தது" என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

'அதைத்தான் நானும் யோசித்தேன். எனக்கும் புரியவில்லை. என்ன இருந்ததோ அப்படியே வாசித்துவிட்டு வந்துவிட்டேன்" என்றார்.

'அடப்பாவமே அது கொரில்லாக்கள் இல்லை கெரில்லாக்கள்" என்று அவருக்கு விளங்கப்படுத்தினேன்..

செய்தி வாசிப்பாளாகள் முதலிலேயே வாசித்துப் பார்த்துத் திருத்தங்களைச் செய்து கொண்டுதான் வாசிப்பதற்குத் தயாராகிறார்கள். சில சமயங்களில் வாசித்துக் கொண்டு இருக்கும்போதுகூட அவசரச் செய்திகள் வரும். அவற்றை வாசித்துப் பார்க்காமலேயே நேரடியாகவே ஒலி அலையில் வாசிக்க வேண்டியும் வரும். அப்போதும் பிழைகள் இருந்தால் வாசித்துக்கொண்டு போகும்போதே திருத்தி வாசிப்பதற்குப் பயிற்சி செய்து கொள்ள வேண்டும். செய்தி வாசிப்பாளர்கள் செய்தி ஆசிரியருடன் கலந்து வசனங்களைத் தங்கள் வசதிக்கேற்றவாறு மாற்றிக் கொள்வதும் உண்டு. ஒரு சமயம் ஒரு அறிவிப்பாளர் செய்திவாசிக்கும்போது ஒரு செய்தியில் "இளவரசி மார்கரட்டின் மணச்சடங்கு கோலாகலமாக நடந்தேறியது" என்று சொல்வதற்குப் பதிலாக, இளவரசி மார்கரட்டின் மரணச்சடங்கு கோலாகலமாக நடந்தேறியது. என்று வாய்த்தடுமாறிக் கூறிவிட்டார்.

உடனே அவர் மன்னிப்புக் கேட்டாரென்றாலும், அரச குடும்பத்தில் நடந்த ஒரு மங்களகரமான வைபவம் அமங்கலமான ஒரு வார்த்தைப் பிரயோகத்தினால் மிகப் பாரதூரமான தவறாக அமைந்துவிட்டது.

ஆனால் செய்தி வாசிப்பாளர், முன்னரே சிறிது யோசித்து அந்த இடத்தில் மணச்சடங்கு என்பதற்கு பதிலாக திருமணச்சடங்கு என்று திருத்தி வாசித்திருப்பாரானால் அத்தகைய தடுமாற்றத்தினைத் தவிர்த்திருக்கலாம். அதற்கு செய்தி வாசிப்பாளருக்கு மொழி அறிவு மிகமிக அவசியம். ஆசிரியர் வேற்று மொழியிலிருந்து செய்திகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்க்கும்போது வார்த்தைகள் உடனடியாக அவருக்குத் ஞாபக்த்திற்கு வராது. இதே போன்று வார்த்தை அனர்த்தங்கள் பல தடவைகள் எற்பட்டிருக்கின்றன. சில செய்திகள் பதற்றத்தோடு வாசிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு.

நாட்டில் எங்கோ ஒரு இடத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்திருந்தால் அந்தச் செய்தியை வாசிப்பவரும் ஓரளவு பதற்றத்தில்தான் இருப்பார்.

அப்படியான நேரங்களிலும் வாய்த்தடுமாற்றங்கள் ஏற்படச் சந்தர்ப்பங்கள் உண்டு. இன்று மாலை மூன்று மணியளவில் மருதானைச் சந்தியில் குண்டு வெடித்ததால் பலர் கொல்லப்பட்டார்கள் என்று வாசிப்பதற்குப் பதிலாக வாய்த்தடுமாற்றத்தில் குண்டி வெடித்ததால் என்று தவறுதலாகக் கூறிவிட்டார். அந்த இடத்தில் குண்டு வெடிப்பு இரண்டு சொற்களும் அடுத்தடுத்து வந்ததால் அந்தத் தடுமாற்றம் ஏற்பட்டது. அங்கே அந்த வசனத்தை மருதானைச் சந்தியில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தினால் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டார்கள். என்று மாற்றியிருந்திருப்பாரானால் அறிவிப்பாளருக்கு அந்த இடத்தில் நிச்சயம் தடுமாற்றம் ஏற்பட்டிருக்காது. இவ்வாறு ஒரெழுத்து பேதங்களால் அர்த்தங்கள் மாறி அனர்த்தங்களான சம்பவங்கள் பல சந்தர்ப்பங்களில் நடந்திருக்கின்றன.

எனவே ஒவ்வொரு அறிவிப்பாளருக்கும் மொழி அறிவும், பொது அறிவும் மிக மிக அவசியமான ஒன்று. நான் செய்தி வாசிப்பாளராக இருந்த காலத்தில் மூத்த அறிவிப்பாளரும், செய்தி வாசிப்பாளருமான வி.ஏ.கபூர் அவர்கள் செய்தி ஆசிரியராகப் பணியாற்றும்போது, தயாரித்து வைத்திருக்கும் செய்திகளை முதலில் வாசித்துப் பார்க்கச் சொல்லுவார். வாசித்துக்கொண்டு போகும்போது எங்காவது தடுமாறினார் என்றால், உடனே அந்த வாக்கியத்தை வேறு விதத்தில் மாற்றிக் கொடுத்துவிடுவார். ஒரே கருத்தை உணர்த்தும் பல வார்த்தைகளைத் தனக்குள் கொண்டிருக்கும் பெருமை தன்னிகரில்லாத் தமிழ்மொழிக்கு மாத்திரமே உள்ள சிறப்பு. வளைவு நெளிவுகள் கொண்ட ஒரு பாதையில் வாகனத்தைச் செலுத்திக்கொண்டு போகும் ஒருவன் மிக அவதானமாக மெதுவாகச்செல்லவேண்டும். அல்லது வேறு நல்ல பாதை இருந்தால் அந்தப்பாதையை உபயோகப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி வாசிப்பும் அப்படியான ஒன்றுதான். வளைவு சுழிவுகள் கொண்ட வார்த்தைகளை நிறுத்தி நிதானமாக வாசிக்கவேண்டும். அல்லது வேறு வாக்கியங்களை அவற்றிற்குப் பதிலாக உபயோகப்படுத்த வேண்டும்.

அதேபோல் ஒரு பாடலை நிகழ்ச்சிக்குத் தொகுக்கும்போதும் அநதப் பாடலின் முதல் வரியை மாத்திரம் தெரிந்து கொண்டால் போதாது. அந்தப் பாடலைப பற்றிய முழு அறிவும் வேண்டும். உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

பெண் அறிவிப்பாளர் ஒருவருக்கு அன்று திருமணம் அவருக்கு வாழ்த்துச் சொல்ல நினைத்த அவருடைய தோழியான புதிய அறிவிப்பாளர் அன்றைய தினம் பின் வரும் பாடலை ஒலிபரப்பினார். மாலையிட்டு பூமுடித்து மணமகளாக உடல் மௌனமாகப் போகுதம்மா ஊர்வலமாக. இரண்டாவது வரியைக் கேட்டதும் பதறிப் போய்வட்டார்.

அவர் பாடலின் முதல் வரியைத்தான் கவனித்திருக்கிறார் அடுத்த வரி என்ன என்பதை அறிந்திருக்க வில்லை. பின்னர் அந்த அறிவிப்பாளரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பொதுவாக பிறந்த நாள் திருமணநாள் வாழ்த்து நிகழ்ச்சிகளில் பாடல்களைத் தெரிவு செய்யும்போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். அதிலும் இப்போது பாடல் காட்சிகள் வேறு சின்னத்திரையில் காண்பிக்கிறார்கள். பாடல் வரிகளை மாத்திரமன்றி பாடலின் சந்தர்ப்பமும் கவனிக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு ஒரு படத்தில் குழந்தைகள் சந்தோஷமாக ஆடிப்பாடி விளையாடிய பின்னர் அந்தக் குழந்தை தவறி விழுந்து இறந்துவிடும் காட்சி வருகிறது. அந்தப் பாடலைத் தங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் வாழ்த்துப் பாடலாக ஒலிபரப்புவதை நேயாகள் விரும்பமாட்டார்கள். எனவே பாடல் வரிகளை மாத்திரம் கவனித்தால் போதாது பாடல் காட்சிகளையும் கவனித்துத்தான் இப்போது பாடல் ஒலிபரப்ப வேண்டியிருக்கிறது.

இன்னொரு படத்தில் ஒரு தாய் தன் குழந்தைக்குத் தன்னை அறியாமலே விஷம் கலந்த பாலை ஊட்டுகிறாள் அப்போது அவள் பாடும் பாடல் எத்தனைதான் அற்புதமான வரிகளானாலும் அதனை ஒரு வாழ்த்துப் பாடலாக நாம் ஒலிபரப்ப முடியாது. எனவே வாழ்த்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள் தொகுக்கும்போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

அறிவிப்பாளர் கணேஷ்வரன் ஒலிபரப்பில் கடமையாற்றும் போது தனக்கேற்பட்ட முதல் நாள் அனுபவத்தை நகைச்சுவையாக ஒரு நாள் என்னிடம் கூறினார். காலை 8 மணிக்கு கடமையிலிருக்கும் அறிவிப்பாளர் விடைபெற கணேஷ்வரன் ஒலிவாங்கியைப் பொறுப்பேற்க வேண்டும். கணேஷ்வரன் பொறுப்பேற்றதும் "நேயர்களுக்கு வணக்கம், நேரம் 8 மணி இலங்கை வானொலி வர்த்தகசேவை" என்றவுடன் வானவில் நிகழ்ச்சிக்கான குறி இசை ஒலிபரப்பப்பட்டது. குறியிசையோடு "வா-ன-வி-ல்" என்று style ஆக அறிவித்தல் செய்தார். அதனைத் தொடர்ந்து ஒலிபரப்பு உதவியாளர் பாடலை ஒலிபரப்ப வேண்டும். பாடல் ஒலிக்கிறது. "நீ ஒரு பைத்தியம், நானொரு பைத்தியம்" என்று. கணேஷ்வரன் கொடுத்த பாடல் "என்னதவம் செய்தேன் உன்னை மணங் கொள்ள" என்ற பாடல், இசைத்தட்டின் மறு பக்கத்தில் உள்ளது. ஒலிபரப்பு உதவியாளர் தவறான பாடலை ஒலிபரப்பிவிட்டார். பதற்றமடைந்த கணேஷ்வரன் ஒலிபரப்பு உதவியாளரிடம் கோபமாக

"என்னடா பைத்தியம் விளையாடுறியா?. சரியான பாட்டைப் போடு" என்று அவரும் தவறுதலாக ஒலிவாங்கிக்கான ஸ்விட்சைப் போட்டு கத்திவிட்டார். அன்றைய வானவில்லுக்கு பைத்தியமே தலைப்பாகிவிட்டது. ஒலிபரப்பு உதவியாளரோடு பேசும் ஸ்விட்சும் ஒலிவாங்கியில் பேசும் ஸ்விட்சும் அடுத்தடுத்து பக்கத்தில் இருந்ததால் கணேஷ்வரன் பதற்றத்தில் மாற்றித் தட்டிவிட்டார். மொழி புரியாத ஒலிபரப்பு உதவியாளர்களால் இப்படியும் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. இலங்கை வானொலி வர்த்தக சேவையின் விதவிதமான நிகழ்ச்சிகளும் அவற்றை சுவைபட தொகுத்து வழங்கும் அறிவிப்பாளர்களின் திறமையும் உலகப்புகழ் பெற்றது. அதேபோல் இலங்கை வானொலியில் பேசப்படும் தமிழ்போல் இனிமையான தமிழ் எந்த நாட்டிலும் பேசப்படுவதில்லை என்பதும். உலகம் முழுவதும் அறிந்த உண்மை. பாரதி கண்ட கனவினை தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்த பெருமை இலங்கைத் தமிழருக்கே சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலி அறிவிப்பாளர்களைக் பற்றிக் கவிப்பேரரசு வைரமுத்து இதுவரை நான் என்ற நூலிலே இவ்வாறு எழுதியிருக்கிறார்.

*கேட்கும் ஒவ்வொரு மனிதனோடும் சில நிமிஷங்களிலேயே சினேகிதம் கொண்டு விடும் அறிவிப்பாளர்களின் வாசனைத் தமிழில் ஒரு வசியம் உண்டு. பாடகர்கள் சங்கீதத்தை பாடுகிறார்கள். அந்த அறிவிப்பாளர்களோ சங்கீதத்தைப் பேசுகிறார்கள். கேட்கும் ஒவ்வொருவனையும் அந்த ஒலிபரப்பு தனக்காகவே ஒலிபரப்புவதாக உணரவைக்கும் உத்தி அவர்களுக்குக் குரலில் வந்த கலை.*

வெகு அற்புதமாக தனது உணர்வுகளை வெளிக்காட்டியிருக்கிறார் கவிஞர்.

இறைவன் மனிதனுக்குக் கொடுத்த இலவச வாத்தியம் என்ற தலைப்பில் தேன்கிண்ணம் நிகழ்ச்சியில் ஒரு முறை இது பற்றிக் கூறியிருக்கிறேன்.

எத்தனையோ விதமான வாத்தியக் கருவிகளை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றின் இனிமையான நாதத்தை கேட்டு ரசித்திருக்கிறோம். ஒவ்வொன்றும், ஒவ்வொரு வடிவத்தில் வெவ்வேறு நாதவித்தியாசத்தில் நமக்கு இசை இன்பத்தை வழங்குகிறது. கேட்பதற்கு இனிமையாகவும், மனதுக்கு இதமாகவும் இருக்கிறது.

இந்த வாத்தியங்களின் வரிசையிலே மிகவும் அற்புதமான உருவத்தில் மிகவும் சிறிய ஒரு வாத்தியக்கருவி இருக்கிறது. ஆனால் அதனை நமது கண்களால் பார்க்க முடியாது. மற்ற வாத்தியக்கருவிகளுக்கும் இதற்கும் இன்னொரு வித்தியாசமும் உண்டு. இந்த வாத்தியம் மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல. இறைவனால் மனிதனுக்கு இலவசமாக வழங்கப்பட்ட வாத்தியம்.

அந்த அற்புதமான வாத்தியம் தான் எமது குரல்வளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் அளித்த வரப்பிரசாதம் இந்தக் குரல்வளம். பேசுவதற்கும் பாடுவதற்கும் மனித இனத்திற்கு மாத்திரமே இறைவனால் வழங்கப்பட்ட அருட்கொடை.

மனிதன் முதன் முதலில் பேசினானா அல்லது பாடினானா என்று ஆராய்ந்தால் அவன் பேசுவதற்கு வார்தைகளைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால் வாயினால் விதவிதமான ஒலிகளை எழுப்பித் தனது எண்ணங்களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தினான். எனவே மனிதன் முதன் முதலாகப் பாடினான் என்பதே உண்மை.

மனிதன் இந்தப் பூமியில் வந்து விழுந்த உடனே முதன் முதலாக இசைக்கப்படும் அழுகை என்னும் இசை அந்த வாத்தியத்தில் இருந்துதான் வெளிவருகிறது. அந்த இசையைக் கொண்டுதான் தன் பசியை தெரிவிக்கக் கற்றுக்கொண்டான் மனிதன். இந்த அதிசய வாத்தியக் கருவியை இறைவன் நமக்குள் பொருத்தி இருக்கும் இடம் மிகவும் நெரிசலான இடம். மூக்கிற்கு கீழே ஒருவாய் அகன்ற பாத்திரத்தைப் போல் தொடங்கி கழுத்துப் பகுதியில் தொண்டையாக முடிகிறது.

ஒரு சிறிய டென்னிஸ் மட்டை போன்ற உருவத்தில் ஒன்றே முக்கால் அங்குல நீளத்திற்கு ஒரு உறுப்பு. அதுதான் குரல்வளை எனப்படுகின்ற வாத்தியக் கருவி சப்தஸ்வரங்களும் இங்கிருந்துதான் புறப்படுகின்றன. இந்த உறுப்பு ஒன்பது சிறு சிறு துண்டுகளாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் கீழே ஒரு அங்குல விட்டமுள்ள உணவுக்குழாய். மூச்சுக் குழாயும், உணவுக் குழாயும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து செல்கிறது. தொண்டை எனப்படும் குரல்வளையில் மென்மையான சதை மடிப்புக்கள் உள்ளன. இந்த சதை மடிப்புக்களில் சிக்கல் ஏற்படும்போதுதான் தொண்டை கட்டிக் கொள்கிறது.

மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட வாத்தியக்கருவிகளைப் போலவே இந்தக் குரல்வளை என்கின்ற வாத்தியக் கருவியிலும் மந்திரஸ்தாயி, மத்தியஸ்தாயி, உச்சஸ்தாயி என்று இருக்கிறது. குரல்வளையில் இருக்கும் மென்மையான சதை மடிப்புக்கள் அங்கிருந்து வரும் காற்றைத் தேவைக்குத் தகுந்தமாதிரி விரிந்தும் சுருங்கியும் அசைந்தும் கொடுப்பதாலேயே விதவிதமான இசை வடிவங்களைக் குரலின் மூலமாக வெளிப்படுத்த முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் கடுமையான பயிற்சி அவசியம். எந்த ஸ்வரஸ்தானத்தைத் தட்டினால் எந்த ஒலி கிடைக்கும் என்று வாத்தியக் கருவிகளில் பயிற்சி செய்வதைப் போலவே குரல் வளையிலும் அந்தந்த ஸ்வரங்களைப் பயிற்சி மூலம் பாடகர்கள் தெரிந்து கொள்கிறார்கள்.

பாடுவதற்கு மாத்திரமல்ல பேசுவதற்கும் குரல் பயிற்சி அவசியம். மிமிக்ரீ என்று அழைக்கப்படும் ஒருவரைப் போல் அவரது குரலிலே பேசிக் காட்டும் திறமை சிலருக்கு கைவந்த கலை. இந்தத் திறமைகூட குரல் பயிற்சியின் மூலம் பெறப்படுவதுதான்.

சுருதி என்று சொல்லப்படுகின்ற ஒலி வடிவம் மனிதனுக்கு மனிதன் வித்தியாசப்படுகின்றது. பாடுவதற்கு எவ்வாறு சுருதி அளவு என்று இருக்கிறதோ. அதே போல் பேசுவதற்கும் சுருதி இருக்கின்றது. மிமிக்ரீ கலையில் வல்லவர்கள் அந்தந்த நபர்களின் சுருதியை அறிந்து கொண்டு அவருடைய ஸ்டைலைப் புரிந்து கொண்டு அதேபோல் பேசிவிடுகிறார்கள்.

மிமிக்ரி கலையில தேர்ந்தவாகள் நடிப்பிலும் பிரகாசிப்பார்கள். அப்படியான திறமையோடு திரையுலகில பிரவேசித்தவர்கள்தான் நடிகர்கள் ஜயராம், விவேக், தாமு, சின்னிஜயந்த் மற்றும் மலையாள நகைச்சுவை நடிகர் கலாபவன் மணி ஆகியோர்.

நமது இலங்கை வானொலி அறிவிப்பாளர் ஜெகன்மோகன் அவர்களும் இந்த மிமிக்ரி கலையில் கைதேர்ந்தவர். இவர் இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும்.

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை.
தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்த பின்
தத்துவன் அங்கே தலைப்படுந்தானே

கவிஞர் வைரமுத்துவின் தீவிர ரசிகை நான். அவரது படைப்புக்கள் அத்தனையும் ஒன்றுவிடாமல் சேகரித்து வைத்திருக்கிறேன். அவரது திரைப்படப்பாடல்களை விட அவரது கவிதைத் தொகுதிகள் என்னை மிகவும் கவர்ந்தவை. சுவாரஸ்யமானவை, சிந்திக்க வைப்பவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு விஷயத்தையும் ஆராய்ச்சிபூர்வமாக எழுதும் ஒரு ஆராயச்சிக் கவிஞர். எந்த ஒரு கவிஞனையும் திரைப்படப்பாடல்களை மாத்திரம் வைத்துக் கொண்டு விமர்சிப்பது தவறு. கவிஞர்களைப் பொறுத்தவரை சுதந்திரமாகச் செயல்படமுடியாத துறை இந்தத் திரைப்படத்துறை. தயாரிப்பாளர்களினதும் இயக்குனர்களினதும் விருப்பத்தின்படி இப்படியான பாடல்கள்தான் தங்கள் படங்களுக்குத் தேவை என்று அவர்கள் பணிக்கப்படுகிறார்கள். என்றாலும் கவிஞர்களுக்குப் புகழ் தேடிக் கொடுப்பதென்னவோ திரைப்படத்துறைதான்.

இன்னொரு தேசியகீதம் என்ற கவிஞர் வைரமுத்துவின் ஒரு கவிதை தொகுப்பிலிருந்து இராமர்களுக்கு இன்று இரத்தமில்லை என்ற கவிதையை பெண்களுக்கான பூவும் பொட்டும் நிகழ்ச்சி ஒன்றிலே ஒலிபரப்பி அந்தக் கவிதைக்கு பதில் கவிதை எழுதும்படி சகோதரிகளிடம் கேட்டிருந்தேன்.

ஏராளமான சகோதரிகள் பதில் கவிதை புனைந்து அனுப்பியிருந்தார்கள். அவற்றில் நான்கு கவிதைகளைத் தெரிவு செய்து நிகழ்ச்சியிலே ஒலிபரப்பி, அந்த நிகழ்ச்சியையும் ஒலிப்பதிவு செய்து கவிஞருக்கு அனுப்பி வைத்தேன. கவிஞர் அதனைக் கேட்டுவிட்டு நிகழ்ச்சியைப் பாராட்டி தனது குரலிலே ஒலிப்பதிவு செய்து எனக்கு அனுப்பி வைத்தார். பாராட்டுரையை பூவும் பொட்டும் நிகழ்ச்சியிலே சேர்த்துக் கொள்ள நான் பட்டபாடு என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி அது. கவிஞரின் இந்தக் கவிதைக் கருத்தரங்கு பற்றிய விமர்சனக் கவிதையை ஒலிபரப்புவதற்கு அப்போதிருந்த தமிழ் நிகழ்ச்சி அதிகாரியிடம் அனுமதி கேட்டேன். அப்போது வைரமுத்துவின் குரல் அனேகம் பேருக்குப் பரிச்சயமில்லாமல் இருந்தது. "இது வைரமுத்துதான் பேசி உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்பதற்கு என்ன ஆதாரம்? வேறு யாராவது அவர் பேசியது போல் பேசி உங்களை ஏமாற்றி இருக்கலாம். பூவும் பொட்டும் நிகழ்ச்சியை கேட்பதாவது. அதற்குப் பதில் எழுதுவதாவது" என்று கூறி அனுமதி தர மறுத்துவிட்டார். இது கவிஞர் வைரமுத்துவினது குரல்தான் என்று நான் நிரூபிக்க வேண்டும். அப்போதுதான் எனக்கு அவரது கவிதையை ஒலிபரப்ப முடியும் என்று கூறிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத்தட்டுக் களஞ்சியத்திற்கு வந்து அவரது குரலில் பதிவான இசைத் தட்டுக்கள் ஏதாவது கிடைக்குமா என்று தேடிப்பார்த்தேன். என் அதிர்ஷ்டம் முதல் மரியாதைத் திரைப்படத்தின் ஒவ்வொரு பாடல் ஆரம்பத்தில் முன்னுரை அவரது குரலில் பதிவாகி இருந்தது. முன்பெல்லாம் பாடல்கள் ஒலிபரப்பும்போது அறிமுக உரைகளைத் தவிர்த்து ஒலிபரப்புவது வழக்கத்தில் இருந்தபடியால் கவிஞரின் குரலை அறியும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதன் பிறகு அந்த இசைத்தட்டில் உள்ள கவிஞரின் குரலும், என்னிடம் இருக்கும் கெஸட்டில் உள்ள குரலும் ஒன்றுதான் என்று நிரூபித்த பின்னர்தான். கவிஞரின் பாராட்டுக் கவிதை ஒலிபரப்புவதற்கு வழங்கப்பட்டது.

இப்படியான தடைகளும், ஏமாற்றங்களும் ஏற்படும்போது மேற்கொண்டு முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் ஆர்வம் குறைந்து விடுகின்றது. எனக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஒன்றுதான். தடைகளைத் தாண்டிச் சென்று வெற்றியை அடையும்போது ஏற்படும் மகிழ்ச்சியே தனிதான். அந்த நிகழ்ச்சிக்கு நேயர்களிடமிருந்து கிடைத்த பாராட்டுக்களைப் பார்த்தபோது மேலும் உற்சாகத்தையே அளித்தது

கவிதைக் கருத்தரங்கில் தங்கள் கவிதைகளை அனுப்பி வைத்தவர்களில் மட்டக்களப்பு Bar வீதி என்.சி.குவாட்டர்ஸ், சசிகலா சுப்பையா. நாவலப்பிட்டியில் பெனிதுடுமுல்ல சுபத்ரா சின்னத்தம்பி, கொக்கல பயாக்கலை திருமதி சிவானந்தி இவர்களின் மூன்று கவிதைகள் சிறந்த கவிதைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கவிஞர் அந்தக் கவிதைகளைப் பாராட்டியிருந்தார்.

வானொலியில் காற்றலையோடு கலந்து போன கவிஞரின் விமர்சனக் கவிதையை வரிவடிவில் இங்கே வெளியிடுவதில் நான் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

*இனியவர்களே உங்களுக்கு என் வணக்கம்.*
*இலங்கை வானொலியே உனக்கு என் நன்றி.*
*இலக்கிய இதயங்களே உங்களுக்கு என் வாழ்த்து.*

*கவிதை பேசுவதென்பதும் கவிதை பற்றிப் பேசுவதென்பதும் சுகமான அனுபவம். புல்வெளிகளில் மழை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுவது மாதிரி மனதுக்குள் ஒரு சத்தமில்லாத சந்தோஷம். அழகு தமிழ் சுமந்து வரும் இலங்கை வானொலியின் எந்த அலை வரிசையை

என் கால்சட்டை நாட்களிலிருந்து காதலித்துக் கிடந்தேனோ அந்த அலைவரிசையில் எனது மெல்லிய கவிதை ஒன்றும் மிதந்து வந்தது கேட்டு மெய்யாகவே மெய் சிலிர்த்தேன்.

புவியெல்லாம் மணக்கும் பூவும் பொட்டும் நிகழ்ச்சியில் ஒரு கவிதைக்கு வெளிச்சம் கிடைத்தது என்பது அல்ல. என் களிப்புக்குக் காரணம். அந்தக் கவிதையின் பின் விளைவாக நூற்றுக்கணக்கான சகோதரிகள் எழுதுகோல்

ஏந்தி எழுந்திருக்கிறார்கள் என்பதையே கவிதைக்குக் கிட்டிய சமூகப்பலன் என்று கருதிக் களிக்கிறேன்.

கதிர் வீச்சுக்களைப் போன்ற சகோதரிகளின் கவிதை வீச்சுக்களைக் கேட்டபோது மெல்லத் தமிழ் இனி வாழும், தமிழோடு சேர்ந்து எங்கள் தாய்க்குலமும் வாழும் என்று ஓசையோடும் ஆசையோடும் உச்சரித்துக் கொண்டேன்.

இராமர்களுக்கு இன்று இரத்தமில்லை என்ற என் கவிதை விளங்கிக் கொள்ளப்பட்டாலும் சரி விமர்சிக்கப்பட்டாலும் சரி திரிகளாகக் கிடக்கும் எங்கள் சமகால் பெண்கள் தீபங்களாகினால் சரி. திரிகள் தீபங்களாகும் என்ற திடமான நம்பிக்கையின் அடையாளங்களைத் தான் பூவும்பொட்டும் பகுதியில் ஒலிபரப்பப்பட்ட சகோதரிகளின் கடிதங்கள் எனக்குச் சாட்சி கூறின.

முதலில் கவிதையின் உள்ளடக்கத்தை விளக்குவது என் கடமையாகிறது. கண்ணுக்குத் தெரியாத சங்கிலிகளைப் பெண்ணுக்குப் பூட்டி இருக்கிறது சமூகம்.

அதில் அவர்களை வாழ்க்கைக்குள் நுழையவிடாமல் தடுப்பது வரதட்சணை சங்கிலி. இந்த சமூகம் பெண்மீது சுமத்தியிருக்கிற அந்த சூடான சுமையால் ஒரு பெண்ணின் பருவத் தேவைகள் எப்படி கருகிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தான் கவிதையின் முற்பகுதி முன் மொழிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மீது இரக்கத்தை ஏற்படுத்தி மனித நேயத்தை ஈட்டுவதே அதன் நோக்கம்.

கவிதையின் பிற்பகுதி பாதிக்கப்பட்டவர்களே தீர்வும் காணவேண்டும் என்ற முடிவைச் சொல்லி முடிகிறது. ஆணாதிக்கம் கொண்ட சமூக அமைப்பில் சுதந்திரம் என்பது வழங்கப்படுவது இல்லை. வாங்கப்படுவது என்ற கருத்தையே அந்தக் கவிதை பின் இருந்து பேசுகிறது.

இந்தக் கருத்தைப் புரிந்து எழுதிய சகோதரிகளின் கவிதைகளையும் இந்தக் கருத்தைப் எரித்து எழுதிய சகோதரிகளின் கவிதைகளையும் உங்கள் நடையில் சொல்லப் போனால் சமமாவே பாதிக்கிறேன்.

மட்டக்களப்பு செல்வி சசிகலா சுப்பையாவின் அழுத்தமான கவிதை அற்புதம். இராமர் என்ன இராவணன் கூட வரமாட்டான் என்று தெரிந்த பின்பு திறந்து வைத்த ஜன்னல்களை எல்லாம் சத்தமில்லாமல் சாத்திக் கொண்டிருக்கிறேன் என்ற வரி வீச்சுக்களோடு வந்து விழுந்து இருக்கிறது. ஆனால் வரிகளின் நயம் என்பது வேறு வாழ்க்கையின் ஞாயம் என்பது வேறு. திறந்த வைத்த ஜன்னல்களை சாத்திக் கொள்வதுதான் தீராத பிரச்சினைகளுக்குத் தீர்வா?.

நாவலப்பிட்டி சுபத்ரா சின்னத்தம்பியின் வினா ஒன்று விலாவைத் துளைக்கிறது. பணம் படைத்த ஜனக மகாராஜாக்கள் வரதட்சணை அள்ளித்தர வரிசையில் நிற்பது ஏன்.?

இந்தச் சிக்கலுக்கும் பெண் குலமும் சேர்ந்துதான் சிக்கெடுக்க வேண்டியிருக்கிறது. பெண்ணுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்ட சமூக அமைப்பில் ஸ்ரீதனம் என்றும் சீதனம் என்றும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த ஏற்பாடு இருப்பவன் இல்லாதவன் இரண்டு பேரின் தலையிலும் ஏறி அமர்ந்து கொண்டது.

வளைகுடாவில் நடந்த போர் வானிலையைப் பாதித்த மாதிரி ஆண்களின் சட்டங்கள் கடைசியில் பெண்களைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கின்றன. சமூக பேதங்கள் களைப்பட்டாலொழிய சமூகத்தில் உற்பத்தி உறவுகளில் பெண்களும் பங்கெடுத்துக் கொண்டாலொழிய இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை நினைத்துப் பார்க்க முடியாது.

பழமையின் சங்கிலிகளை அறுத்துக் கொள்ள முடியாமலும் புதுமையின் சருகுகளைப் பூட்டிக் கொள்ள முடியாமலும் நலிந்து கிடக்கும் எங்கள் சகோதரிகள் நவீன வாழ்க்கைக்குள் நடந்து வர வேண்டும்.

திருமதி. சிவானந்தியின் கவிதையில் இந்தக் குரல் ஓங்கி ஒலிப்பது எனக்கு உற்சாகமாக இருக்கிறது. திறவுங்கள் கவுகளை நடவுங்கள். வெளியினிலே எதிர்காலம் உங்கள் கையில் இந்த நம்பிக்கை வாசகமே நாளையின் தேவை. பெண்களால் முடியம். முடியாதது என்று எதுவுமில்லை.

பெண்களின் மீது போன நூறாண்டு வரை வீசப்பட்ட புழுதிகள் மெல்ல மெல்ல துடைக்கப்பட்டு வருகின்றன. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்பது அழிக்கப்பட்டு விட்டது. பெண் புத்தி பின் புத்தி என்பது பின்னால் வருவதை அறிந்து சொல்லும் புத்தி என்று புரிந்து கொள்ளப்பட்டு இருக்கிறது.

இது மந்திரத்தில் விழுந்த மாங்கனியல்ல. சமூக மாற்றத்தில் பெண்களும் பங்கெடுத்துக் கொண்டதால் வந்த சாதனை.

மழை என்பது வானத்தில் இருந்தல்ல பூமியிலிலுந்துதான் தொடங்கி ஆக வேண்டும். பெண் விடுதலை என்பது ஆணிடம் இருந்தல்ல பெண்ணிடம் இருந்தே தொடங்கி ஆக வேண்டும். இதுதான் அந்தக் கவிதையில் நான் சேமித்து வைத்திருக்கும் சேதி.

இந்தக் கவிதைப் பூங்காவில் கலந்து கொண்ட சிந்தனைச் செல்விகளே. உங்களை வாழ்த்துகிறேன்.

தமிழ் கவிதைக்குக் காற்றையே சிறகாகச் செய்து கொடுத்த இலங்கை வானொலியியே உன்னை வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிகழ்ச்சியை இலக்கிய தாகத்தோடு தயாரித்து வழங்கிய திருமதி விசாலாட்சி ஹமீது அவர்களுக்கு கவிதை உள்ளங்களின் சார்பில்*

*கரம் குவித்து நன்றி சொல்கிறேன். வணக்கம்.*

சிகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சினுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன்று ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண்டாமே

பள்ளிக்கூட நாட்களில் பல விதமான போட்டிகளில் பங்குபற்றியிருப்போம். பலவற்றில் வெற்றியடைந்திருப்போம். சிலவற்றில் தோல்வி கண்டிருப்போம். வெற்றியடைந்தால் சந்தோஷம். தோல்வி அடைந்தால் வருத்தம். ஆனால் அதேநேரம் அடுத்த முறை எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்ற. ஓரு ஆர்வத்தையும் உறுதியையும் மனதில் நிறுத்திக் கொள்வோம்.

பள்ளிக்கூடத்தில் மாத்திரமல்ல வாழும் வாழ்க்கையில் கூட எத்தனையோ விதமான போட்டிகளை நாம் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். போட்டி இல்லையென்றால் விளையாட்டு எப்படி சுவாரஸ்யமில்லையோ. அப்படியே போட்டி இல்லையென்றால் வாழ்க்கையும் சுவாராஸ்யமற்றதாகத்தான் இருக்கும். ஏன் நாம் இந்தப் பூமியில் பிறப்பதற்குக் கூட ஓட்டப்பந்தயத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதால்தான் அன்னையின் கர்ப்பாசயத்தில் நமக்கு இடம் பிடித்துக் கொள்ள முடிந்தது. பத்தாம் மாதம் முழு மனித உருவெடுத்துப் பூமியில் பிறக்க முடிந்தது.

போட்டி என்பது பிறப்பிலேயே மனிதனுக்கு ஆரம்பமாகி விட்டது. அதன் பிறகு ஒவ்வொரு வளர்ச்சியிலும் ஒவ்வொரு விதமான போட்டிகளைவென்று முன்னேற வேண்டியிருக்கிறது. பள்ளியில் சேர வேண்டுமென்றால் அதற்குப் போட்டி. சேர்ந்த பின்பும் நல்ல பெறுபேறுகளைப் பெற வேண்டுமானால் அதற்கும் போட்டி. படித்து முடித்துவிட்டால் தொழில் தேடுவதில் போட்டி. தொழில் அமைந்து விட்ட பின் செய்யும் தொழிலில் கூட போட்டி. ஆனால் எந்தப் போட்டியானாலும் சில விதிமுறைகள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை ஒன்று விலக்கிவிட்டு அழித்துவிட்டு முன்னிற்பது என்றால் அதனை ஒரு வெற்றி என்று கொள்ளவே முடியாது. ஒரு பெரிய கோடு இருந்தால், அதனைச் சிறிய கோடாகச் செய்வதற்கு அதனைவிட பெரிய கோடு ஒன்றைப் போடடால் தானாகவே அந்தக் கோடு சிறியதாகிவிடும்.. கலைத்துறையைப் பொறுத்த வரையில் அநேகமாக ஒன்றை அழித்து ஒன்றை நிலை நிறுத்திக் கொள்வதையே வெற்றி என்று கொள்கிறார்கள்..

வெற்றி என்பது 98 சதவீதம் காரியத்தை எப்படியும் செய்தே முடிப்பது என்ற ஊக்கம். ஒருவனுக்குக் கிடைக்கும் புகழ், செல்வம் மதிப்பு இவையெல்லாம் அவனுடைய புத்திசாலித்தனமான உழைப்பைப் பொறுத்துத்தான் அமையும். இவ்வாறு மனோதத்துவ நிபுணர் டாக்டர். ருத்ரன் கூறுகிறார். உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகளே இல்லாவிட்டால், ஏதாவது பிரச்சினையை உண்டாக்கிக் கொள்ளுங்கள் என்கிறார். ஏன் தெரியுமா எந்த முயற்சியும் செய்யாமல் சும்மா இருப்பவனுக்கு பிரச்சினைகளே தோன்றுவதில்லையே.

கலைஞர்களுக்கு மற்றவர்களைவிட கொஞ்சம் அதிகமாகவே போட்டியும், பொறாமையும் எதிர்ப்பும் இருப்பது சர்வசாதாரணம். ஏனென்றால் அவர்களுக்குப் புகழ் என்று ஒன்று தனியாகக் கிடைப்பதனால தான். ஆனால் எதிர்ப்புக்களைச் சமாளித்து தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து சாதனை படைத்தவர்கள் மறைந்த பின்பும் மறையாத புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணம் கவியரசர் கண்ணதாசன். ஆரம்பகாலத்தில் பலவிதமான எதிர்ப்புகளை எதிர்கொண்டவர். அவருடைய பாடல்கள் யாவும் இலக்கிய நூல்களில் இருந்து திருடியவை, சொந்தக் கற்பனை அல்ல. எனறெல்லாம் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பட்டியல் போட்டு எழுதி வந்தார்கள். கவியரசர் அதற்குப் பதிலடியாக எல்லோரும் வியக்கும் வகையில் ஒரு புத்தகமே வெளியிட்டு விட்டார்.

இந்தப் பாடல் இங்கிருந்துதான் உருவானது. இதன் முதலடியை இன்ன திருவாசகத்தின் ஆரம்ப வரிகளைத்தான் உபயோகித்திருக்கிறேன் என்று

பாடல் பிறந்த விதம் என்று பட்டியல் இட்டு அதற்கான விளக்கமும் அவர் கொடுத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிலிருந்துதான் ஒன்று உருவாக வேண்டும். இது படைப்பின் நியதி. அது மனிதனுக்கும் பொருந்தும். மரங்களுக்கும் பொருந்தும். கலைகளுக்கும், கவிதைகளுக்கும் பொருந்தும்.

அதே போல் இன்று புகழின் உச்சியில் இருக்கும் இசைஞானி, மேஸ்ட்ரோ என்ற கௌரவப் பட்டங்களைப் பெற்ற இளையராஜா ஆரம்பகாலத்தில் திரைப்பட உலகில் பலமான எதிர்ப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டார். கிராமிய நாட்டுப் பாடல்களுக்கு உயிர் கொடுத்து அதனைப் புதிய மெருகுடன் திரையிசையில் அறிமுகப்படுத்தியவர் இளையராஜா.

அவரது பாடல்களை ஏற்கனவே உள்ள பாடல்களை கொப்பியடித்து இசையமைப்பதாக அதே போன்ற மெட்டில் பாடல்களைக் குறிப்பிட்டு விமர்சனம் என்ற பெயரில் பத்திரிகைகளிலும் வானொலியிலும் அக்குவேறு ஆணிவேறாக பிய்த்து எறிந்தார்கள்.

இளையராஜாவும் அவற்றுக்கெல்லாம் பதிலடி கொடுத்துக் கொண்டேதான் இருந்தார். ஒரு இனத்தின் பாரம்பரியக்கலையான நாட்டுப்பாடல்கள் தனிப்பட்ட ஒருவரின் சொத்தாக முடியாது. அது பொதுச் சொத்து. யார் வேண்டுமானாலும் பாடலாம்.

இன்றைய தலைமுறை அறியாமல் தெரியாமல் மண்ணிற்குள் புதைந்து போயிருந்த கலையை துடைத்து, அழகுபடுத்தி, மெருகேற்றி மக்கள் முன் அறிமுகப்படுத்தியது தவறென்றால் அதனை மக்கள் எனக்கு உணர்த்தட்டும்.

எனது பாடல்களை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பதில்தான் எனக்கு அக்கறை. விமர்சனம் செய்பவர்களைப் பற்றி எனக்கு கவலையே இல்லை என்று பத்திரிகை மூலமாகவே அறிக்கை விட்டார். அவரது இசையமைப்புக்கள் மிகப்பெரிய வெற்றிகளை அள்ளிக் குவிக்கத் தொடங்கியதும் தூற்றியவர்களே பின்னர் அவரைத் தூக்கி வைத்துக் கொண்டாடிப் போற்ற ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட மேதைகளுக்கே எதிர்ப்புகளும், போட்டிகளும் இருந்திருக்கின்றன என்றால், மற்றவர்களை விட்டுவைப்பார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்த்த மரத்திற்குத்தான் கல்லடிவிழும். எனவே நீங்கள் காய்த்த மரமாக இருப்பதில் பெருமைப்படுங்கள். கல்லடிபடுவதால் வருத்தப்படாதீர்கள். இந்த உற்சாக வார்த்தைகள் கலைத்துறையில் இருப்பவர்களுக்கு உயிர்சத்து மாத்திரைகளாக அமையும் என்று நம்புகிறேன்.

தேன் கிண்ணம் நிகழ்ச்சியிலே நான் இதனை எனது கருத்தாகத் தெரிவித்திருக்கிறேன்.

தானே படைத்திடும் தானே அழித்திடும்
தானே துடைதிதிடும் தானே மறைத்திடும்
தானே இவைசெய்து தான் முத்தி தந்திடும்
தானே வியாபித்த தலைவனுமாமே

மனிதனால் மனிதனுக்காக மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டவை ஊடகங்கள். இந்தக் கொள்கையை முதன்முதலில் செயலில் காட்டிய பெருமை இலங்கை வானொலிக்கே சாரும். நேயர்களின் பங்களிப்பைக் கூடுதலாக வானொலியில் இணைத்து அவர்களோடு சிநேகமான உறவுகளை வளர்த்து வந்திருகிறது.

அற்புதமான, பாரம்பரியம் மிக்க பரதக்கலை மங்கிமறைந்து போய் ஆபாசமான டாப்பாங்கூத்துக்கள் அளவுக்கு அதிகமாகவே பெருகிவிட்ட காலம் இது.

பாவம், ராகம், தாளம் இவைகள் மறைந்து வெறும், தேகம், மோகம இவைகளைத்தான் நடனங்களில் நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

பரதக் கலையில் கண்கள் பேசும், கால்கள் பேசும், முகபாவங்கள் பேசும், இன்றைய ஆட்டங்களில் இவை மூன்றையும் தவிர மற்ற எல்லாமே பேசுகின்றன. இப்படியான டப்பாங்கூத்துக்கள் அந்தக்காலத்திலும் இருந்தன. ஆனால் இந்த அளவுக்கு இல்லை. இன்றைய தலைமுறையினர் இதைத்தான் ரசிக்கிறார்கள் என்று பழியை இளைஞர்கள் மீது சுமத்தி விடுகிறார்கள். ஆனந்தமாக ஆடிப்பாடுவதில் தவறேயில்லை. அந்த ஆட்டத்திற்காக எழுதப்படும் பாடல் வரிகள் ஆபாசத்தின் எல்லைக்கே போய்விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத்துறையில் ஐம்பதுகளில் கலைவாணர் என.எஸ்.கிருஷ்ணன் செய்து வந்த சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பும் பணிகளை அந்தக்கால ரசிகர்கள் அதாவது இளைஞர்கள் ரசித்தார்கள் அதேபோல் இன்றைய இளைஞர்களும் இன்றைய சின்னக் கலைவாணர் என்று அழைக்கப்படுகின்ற விவேக்கின் சீர்திருத்தக் கருத்துக்களை விரும்பி வரவேற்கவில்லையா?

நல்ல விஷயங்களை நகைச்சுவையோடு எடுத்துச்சொல்லும்போது இளைஞர்கள் மாத்திரமல்ல எவரும் ரசிப்பார்கள். இதே பணியை சின்னத்திரையில் விசு சாதித்து வருகிறார். ஊர் ஊராகச் சென்று சமூகப்பணிகளைச் செய்துவருகிறார். சிந்திக்க வைக்கும் தலைப்புகளைக் கொடுத்து திறமைசாலிகளை உலகிற்கு அறிமுகப்படுத்தி வருவது வரவேற்கப்படவேண்டிய மிகச்சிறந்த பணியாகும். அதேபோல் பெண்களின் பிரச்சினைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து ஆராய்ந்து தீர்வுகளைப் பெற்றுத்தருகிறார் நடிகை லட்சுமி. மனித நேயத்தை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் இவர்களின் சமூகப்பணி பாராட்டப்பட வேண்டியவை.

இப்போதைய திரைப்படங்களில் வரும் நடனக் காட்சிகளைப் பார்க்கும் இளைஞர்கள் தவறான பாதைக்கு இழுத்துச்செல்லப் படுகிறாகள்.

இவையெல்லாம் முற்றிய கலியின் அடையாளங்கள் என்று நாற்பது வருடங்களுக்கு முன் வெளிவந்த தசாவதாரம் திரைப்படத்தில் வரும் ஒரு பாடலில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதுதான் அந்தப் பாடல் வரிகள்.

"மானாட்டம், மயிலாட்டம், கொடியாட்டம், மகிழ்வூட்டும் பரதக்கலை,

கண்களிலே மனம்காட்டும் புனிதக் கலை, மாறி நாயாட்டம், பேயாட்டம்,

நரியாட்டம் அங்கங்களைத் தெளிவாக வெளிக்காட்டும் புதிய கலை தோன்றும். அதுவே முற்றிய கலியின் அடையாளம். அதன் முடிவே கல்கி அவதாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதையின் வாசகங்களை எடுத்து அற்புதமாகப் பாடல் இயற்றியுள்ளார், கவிஞர் மருதகாசி.

அந்தப் பாடலின் ஆரம்பமே இப்படித்தான் தொடங்குகிறது.

சத்தியம் பொய்யாகும். தருமம் தலைசாயும். அறநெறிகள் அலைமோதும்.

அதர்மம் அரசாளும் பருவநிலை மாறும். பசுமைக்குப் பஞ்சம் வரும்.

மண்ணுலகே நரகாகும் அதுவே முற்றிய கலியின் அடையாளம்.

எங்கும் கலப்படம் எதிலும் கலப்படம் என்னும் நிலமை வரும். அது பிஞ்சுக்குழந்தைகள் உண்ணும் உணவிலும் எதிலும் கலந்துவிடும்.

இந்த வரிகள் இப்போது எந்த அளவுக்கு உண்மையாக அமைந்திருக்கிறது என்பதும் எல்லோரும் அறிந்த விஷயம்.

சங்கீதமானது தெய்வீக பாஷை என்று நன்றாகவே சொல்லியிருக்கிறார்கள். நம்முன்னோர்கள். உண்மையில் உள்ளத்தை வெளியிடுவதற்கு மனிதனுக்குக் கொடுத்து வைத்த கருவிகளில் சங்கீதம் போல் தெய்வத் தன்மை வாய்ந்தது வேறொன்றும் கிடையாது. சங்கீதம் ஒரு வழிகாட்டியாக முன் சென்று நம்மைப் பரவச நிலை அடையும்படி செய்கிறது. ஆனால் இன்றைய தலைமுறையிலே சங்கீதமானது பைத்தியம் பிடித்து அலைகிறது. அறிவோடு ஒட்ட வேண்டிய அவசியமில்லை என்கிறது. பொருள் எதற்கு. உண்மை எதற்கு, இனிமை எதற்கு இவையெல்லாம் தேவையெ இல்லை என்கிறது.

இப்படியான வெறித்தனமாக ஆட்டம் போட வைக்கும் சங்கீதம்தான் இன்றைய இளைஞர்களை மகிழச்சிப்படுத்துகிறது. இளைஞர்களை மகிழ்ச்சிப் படுத்தினால்தான் பணம் சம்பாதிக்கலாம் என்று தயாரிப்பாளர்களும் நினைக்கிறார்கள்.

இசை பலவிதமான வடிவங்களைக்கொண்டது பலவிதமான விஷயங்களை உள்ளடக்கியது. இசையால் வியாதிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணப்படுத்தியிருக்கிறார்கள். ஆத்திரம் கொண்ட மனதை அமைதிப்படுத்த வல்லது இசை. மனக்கவலைகளை மறக்கச்செய்வது இசை. இவ்வாறு பல நன்மைகளைச் செய்யும் இசை சில சமயங்களில் தீயசக்திகளை மனதில் உருவாக்கிக் கொலை வெறியைத்தூண்டவும் வன்முறைகளில் ஈடுபடவும்கூடச் செய்யும். அப்படியான வெறித்தனமான இசையைக் கேட்டுப் பழகிய ஒரு இளைஞன் தனது தாய் தந்தையரையும் தடுக்க வந்த குடும்ப நண்பரையும் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் சில வருடங்களுக்கு முன் நடந்தது.

இப்படியான பேயாட்டம் போடவைக்கும் வெறித்தனமான இசையைத் தவிர்த்து இனிமேலாவது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும் நல்ல இசையை நமது இசையமைப்பாளர்கள் தருவதற்கு படத்தயாரிப்பாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவார்
நடுவு நின்றார் சிலர் தேவருமாவார்
நடுவு நின்றார் சிலர் நம்பனு மாவார்
நடுவு நின்றாரோடு யானும் நின்றேனே

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது மிகவும் சரியானது என்று நிருபிக்கும் விதத்தில் ஒரு சம்பவம் நடந்தது. 1986 ல் இனக்கலவரத்தின் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கை வானொலியில் வேலை பார்க்கும் அத்தனை தமிழ் உத்தியோகத்தர்களையும் கட்டாய லீவில் அனுப்பினார்கள். இதில் உயர் பதவிகளிலிருந்தவர்களும் நிர்வாகிகளும் அடக்கம். அது மாத்திரமன்றி தமிழ்- சிங்கள, தமிழ் - முஸ்லிம் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களும் ஸ்தாபனத்திலிருந்து கட்டாய லீவில் அனுப்பப்பட்டார்கள். தமிழ் ஒலிபரப்பு எவ்வாறு நடக்கப் போகிறது அல்லது தமிழ் ஒலிபரப்பையே நிறுத்தப் போகிறார்களா, இவ்வாறு பல கேள்விகள் எழுந்தன.

சரி எல்லோரும்தானே வெளியேறுகிறார்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம் என்று அறிவிப்பாளர்கள், பகுதிநேர அறிவிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் தங்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு ஊதியத்துடனான ஓய்வு, ஆனால் பகுதி நேர அறிவிப்பாளர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அறிவித்தல் கொடுக்கப்பட்டு எல்லோரும் சென்றுவிட்டார்கள். அவர்களோடு நானும் வீட்டிற்கு வந்துவிட்டேன். ஆனால் அடுத்த நாள் காலையில் எனக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது. வேலைக்கு வந்து நிகழ்ச்சிகளை ஏற்று நடத்தும்படி. பேசியவர் புதிதாக தமிழ் ஒலிபரப்பினைப் பொறுப்பேற்றிருந்த ஜமால்தீன் என்பவர். அவரை நான் பார்த்திருக்கிறேன்.

ஆனால் அவரோடு நான் பேசியதில்லை. ஹிந்தி நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருந்தார். அப்போது எனக்கு ஆச்சரியமாப் போய்விட்டது. எப்படி சேர், நானும் ஒரு முஸ்லிமை திருமணம் செய்து கொண்ட தமிழ்ப் பெண் தானே. வெளியேற்றப்பட்டவர்களில் நானும் தானே அடங்குகிறேன் என்று கூறினேன். இல்லையே நீங்கள் மலையாளி என்றல்லவா உங்கள் Personal File காட்டுகிறது. உங்களோடு சேர்த்து இன்னும் ஐந்து பேர் இங்கு வந்து வேலை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே உடனே புறப்பட்டு வாருங்கள் என்று கூறி என் பதிலுக்காகக் காத்திருக்காமல் போனை வைத்துவிட்டார்.

இது என்ன சோதனை இறைவா, நான் போவதா அல்லது நிற்பதா? உடனே கணவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதற்கு என்ன செய்வது என்று கேட்டேன். நிர்வாகம் என்ன சொல்கிறதோ அதை ஒப்புக்கொண்டு வேலைக்குச் செல்வதுதான் நல்லது. அதுவும் நீ பகுதிநேர அறிவிப்பாளர். உனது சேவை அவர்களுக்கும் தேவையானபோது போய்ச் செய்வதுதான். மற்றவர்கள் கட்டாயலீவு முடிந்ததும் வழக்கம் போல் வேலையைப் பொறுப்பேற்க வந்து விடுவார்கள். இறைவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு உன் கடமையை நீ செய் என்றார்.

வானொலி நிலையத்தைச் சுற்றி இராணுவம் காவல் நின்றிருந்தது. அதைப் பார்த்ததுமே எனக்குப் பயம் வந்துவிட்டது. என்றாலும் இன்னும் ஐந்து பேர் அறிவிப்பாளர்கள் என்னோடு இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் உள்ளே சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமால்தீன் எனக்காகக் காத்திருந்தார். ஏனைய அறிவிப்பாளர்கள் தேசிய சேவை அறிவிப்பாளர்கள் பெரொஸ், அஷ்ரப் ஷிஹாப்தீன், மஹ்திஹஸன் இப்ராஹிம், புர்கான் பி இப்திக்கார் மற்றும் தெலுங்கு அறிவிப்பாளர்கள் மீனாட்சி பொன்னுத்துரை, மலையாள அறிவிப்பாளர் கருணாகரன் இவர்கள் மாத்திரமே இருந்தார்கள்.

இவர்களில் தமிழ் வர்த்தகசேவையில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்கள் எவரும் இல்லை. நான் மாத்திரம்தான். அதனால் வர்த்தக சேவையின் அத்தனை நிகழ்ச்சிகளையும் என்னைப் பொறுப்பேற்கும்படி கூறிவிட்டார் ஜமால்தீன். மற்ற அறிவிப்பாளர்களை உதவிக்குச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். இசைத்தட்டுக் களஞ்சியத்தில் உதவியாளராக இனாம் இருந்தார்.

முடிந்தவரை நிகழ்ச்சிகளை அப்படியே மாற்றங்கள் ஏதும் இல்லாமல் கொண்டு செல்லும்படியும் ஒரு வார்த்தையைப் போட்டு விட்டார். என்ன செய்வது பயம் ஒரு புறம், மன வேதனை ஒரு புறம். வெளியே சென்ற அறிவிப்பாளர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள். என் நிலைமையை அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பில்லை. இறைவன் எனக்கிட்ட கட்டளையாக ஏற்றுக் கொண்டு வழமையான நிகழ்ச்சிகளில் எந்தவித மாற்றமும் செய்யாமல் நிகழ்ச்சிகளைச் செய்து வந்தேன். தமிழ் ஒலிபரப்பு வழக்கம்போல் எந்தவிதத் தடங்கலுமின்றி நடைபெற்றது. இதற்கிடையில் பயமுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வேறு. ஆபத்தான கட்டங்களில் நாங்கள் எப்படித் தப்பிக்க முயலவேண்டும் என்றெல்லாம் எங்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். ஒலிபரப்பை நிறுத்தும் நோக்கத்தில் பலர் வெளியில் இருந்து முயற்சி செய்தார்கள்.

ஒரு முறை நிலையத்தின் கட்டிடத்திற்குள் குண்டு வைத்திருப்பதாகவும், அது சரியாக மூன்று மணிக்கு வெடிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அதனால், அனைவரையும் கட்டடத்தைவிட்டு உடனடியாக வெளியேற்றம் செய்யும்படியும் தொலைபேசி அழைப்பு ஒன்று நிலையத்தின் தலைவருக்கு வந்தது. சிங்கள மொழி பேசும் ஸ்தாபன ஊழியர்கள் எல்லோரும் உடனடியாகப் போட்டது போட்டபடி விட்டுவிட்டு வீடு சென்று விட்டார்கள். அன்னைய தினம் காலை ஒலிபரப்பை வேனொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு பகல் 2 மணி அளவில் ஒலிபரப்பைப் பொறுப்பேற்க நிலையத்திற்குச் சென்றேன்.

ஜமால்தீன் அவர்கள் நின்று கொண்டிருந்தார். அப்போதுதான் அவர் என்னிடம் விஷயத்தைக் கூறினார். 'இது வெறும் புரளியாகவும் இருக்கலாம். ஒலிபரப்பை நிறுத்துவதற்கான பயமுறுத்தலாக இருக்கும். ஆண் அறிவிப்பாளர்களும், ஒலிபரப்பு உதவியாளாராகளும் நானும் நிற்கிறேன் ஒலிநாடாக்கள் இருந்தால் அவற்றை ஒலி அலையில் போகவிட்டு நாங்கள் கட்டிடத்திற்கு வெளியில் சென்று நிற்கப்போகிறோம். தைரியமிருந்தால் நீங்கள் நில்லுங்கள். வீட்டுக்குப் போவதென்றால் போங்கள். நான் கட்டாயப்படுத்த மாட்டேன் என்றார். "என்ன சேர் இப்படிச் சொல்லிவிட்டீர்கள்? நீங்கள் எல்லோரும் நிற்பதானால் நானும் நிற்கிறேன்.

எல்லாவற்றுக்கும் அந்த இறைவன் இருக்கின்றான். எது நடந்தாலும் நானும் உங்களுடனே நிற்கிறேன்" என்று கூறி ஓடோடிச் சென்று, நீண்ட நேரம் ஒலிபரப்பக் கூடிய இசைத்தட்டுக்கள், ஒலிச்சித்திரம் (திரைக்கதை வசனம்) இவைகளை இசைத்தட்டுக் களஞ்சியத்தில் இருந்து எடுத்து வந்து ஆசிய சேவை, தேசியசேவை, வர்த்தகசேவை மூன்று சேவைகளிலும் ஒலிபரப்பாக்க விட்டு எல்லோரும் கட்டிடத்தை விட்டு வெளியேறினோம்.

குறிப்பிட்ட 3 மணியும் கடந்து விட்டது. பயந்தவாறு ஒன்றும் நடக்கவில்லை.

3.30 அளவில் எல்லோரும் திரும்பி வந்து வழமையான நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினோம். இவ்வாறு பயத்துடனும், பதற்றத்துடனும் 45 நாட்கள் தொடர்ந்து வானொலியில் பணியாற்றினோம். அதன் பின்னர் கட்டாய லீவில் சென்றவர்கள் மீண்டும் வேலைகளைப் பொறுப்பேற்றார்கள்.

அப்போது தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்தார் என்.சிவராஜா. திரும்பி வந்த தமிழ் ஒலிபரப்பாளர்கள் அத்தனை பேரையும் ஒன்று திரட்டி அவர்கள் முன்னிலையில் என்னையும் எனது துணிச்சலையும் வேலைத் திறமையையும் வெகுவாக பாராட்டினார். அந்த ஆபத்தான கால கட்டத்திலும் ஒலிபரப்பை நிறுத்தாமல் கொண்டு நடத்திய அறிவிப்பாளர்களுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் லிவி விஜயமான அவர்களால் பாராட்டுப் பத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது. என் வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாத அனுபவம் அது.

அந்த ஒன்றரை மாதம் ஓய்வு ஒழிச்சலின்றி ஒலிபரப்பை பொறுப்பேற்று 50 பேர் செய்து வந்த வேலைகளை 5 பேரை வைத்துக் கொண்டு தமிழ் ஒலிபரப்பை எந்தவிதக் காயங்களும் இல்லாமல் எந்த விதக் கறையும் படாமல் பொறுப்பாளர்களிடம் பூப்போல ஒப்படைத்தேன் என்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கின்றது. இத்தனைக்கும் எனக்கு உறுதுணையாய் நின்ற என் கணவருக்கும் எனது தாயாருக்குமே அத்தனை பெருமையும் சேரும்.

எனது அன்னை எங்களுடனேயே அவரது கடைசிக்காலம்வரை வாழ்ந்து வந்தார். 1986ம் ஆண்டு அவரும் எம்மைவிட்டுப் பிரிந்தார். என் தாயின் மரணம் எங்கள் எலலோரையும்விட என் கணவரையே மிகவும் பாதித்தது. அந்த அளவுக்கு அவர்மீது பாசம் வைத்திருநதார்.

45 நாட்கள் விடுமுறையில் இருந்து திரும்பி வந்ததும் சில அறிவிப்பாளர்கள் என்னோடு பேசாமல் இருந்தார்கள். வெறுப்பைக் காட்டினார்கள். அவற்றை எல்லாம் நான் பொருட்படுத்தவே இல்லை. நான் எனக்குப் பணிக்கப்பட்ட வேலையைத் தான் செய்தேன். அன்று நான் முடியாது என்று மறுத்திருந்தால் இன்று நான் வீட்டிலிருந்திருப்பேன். தொடர்ந்து வானொலியில் நின்று பிடித்திருப்பேனா?

பகுதிநேர அறிவிப்பாளரின் வேலையே இடைவெளியை நிரப்புவது தானே. 45 நாட்கள் இடைவெளி ஏற்பட்டது. தமிழ் ஒலிபரப்பிற்கு. ஒரு பகுதி நேர அறிவிப்பாளராக அந்த இடைவெளியை நிரப்பும் பணி எனக்கு அளிக்கப்பட்டது. அதை நான் குறையின்றிப் பிழையின்றிச் செய்து முடித்தேன்.

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவினுமாமே.

பகுதிநேர அறிவிப்பாளராக 32 ஆண்டுகள் தொடர்ந்து இலங்கை வானொலியில் பணியாற்றி இருக்கின்றேன். இந்தியாவில் இருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருந்தும் ஏராளமான நேயர்கள் எனக்கு அவ்வப்போது எனது நிகழ்ச்சிகளை கேட்டுவிட்டு எனக்கு எழுதுவார்கள்.

இத்தனைக்கும் வானொலியில் நிரந்தர அறிவிப்பாளர்களைப் போல் தினமும் நேயர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடையாது. அப்படி இருந்தும் எனது நிகழ்ச்சிகள் எப்போது இடம்பெற்றாலும் அதனை விரும்பிக் கேட்பவர்கள் இருக்கிறார்கள். எனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை பெரும்பாலும், நேயர்களுக்கு பொழுது போக்கு அம்சங்களோடு பயனள்ளதாகவும் அமையும் விதத்திலே ஒலிபரப்புச் செய்வதில் ஆர்வம் காட்டி வந்திருக்கிறேன்.

குறிப்பாக முத்துவிதானம், பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி, தேன்கிண்ணம் போன்ற சஞ்சிகை நிகழ்ச்சிகளில் சிந்திக்கவும் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வகைகளையும் அதற்குப் பொருத்தமான பாடல்களையும் தெரிவுசெய்து நிகழ்ச்சிகளைப் படைக்கும்போது அதன் தாக்கத்தை நேயர்களின் கடிதங்கள் மூலம் தெரிந்து கொள்கிறேன்.

நேயர்களின் ஆக்கங்களை நிகழ்ச்சிகளில் சேர்த்துக் கொள்ளும்போது அவர்கள் தெரிவிக்க விரும்பும் நல்ல கருத்துக்களையே முக்கியமாக கவனிப்பேன்.

இலக்கணப் பிழைகள் இருந்தாலும் அவற்றை திருத்தி வானொலிக்கேற்ற முறையில் மாற்றி எழுதிய பின்னரே ஒலிபரப்புக்குச் சேர்த்துக் கொள்வேன். கவிதைகளும் அப்படியே. சந்தத்திற்கு பொருத்தமாக சரியாக அமையவில்லை என்றால் பொருத்தமான சொல்லை அந்த இடத்தில் சேர்த்துக் கவிதையை ஒலிபரப்புவதுமுண்டு. நிகழ்ச்சிகளைக் கேட்டு விட்டு உடனுக்குடன் விமர்சனக் கடிதங்கள் எழுதும் நேயர்களை நான் நிச்சயம் இந்த நேரத்தில் நினைவுபடுத்தியே தீரவேண்டும்.

எனது நிகழ்ச்சி எப்போது ஒலித்தாலும் தவறாமல் நிகழ்ச்சி பற்றிய தங்களது அபிப்பிராயத்தை எழுதிவருகிறார் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை எஸ்.என்.முத்துகுருசாமி குடும்பத்தினர்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் நாராயணன் கனகவல்லி தம்பதி வாழ்த்துப் பத்திரம் ஒன்றை தயாரித்து அனுப்பியிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் விஜயராம் ஏ.கண்ணன் ஒரு இணைய தளத்தையே இலங்கை வானொலி அறிவிப்பாளர்களுக்காக ஒதுக்கி அறிவிப்பாளர்களின் படங்களோடு தகவல்களையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்.

இன்னும் கன்னியாகுமாரி மாவட்டம் நாகர்கோயில் சர்வதேச லயன்ஸ் சங்கத்தின் மாவட்ட ஆளுனர் வள்ளியூர் லயன் ஏ.பி.எஸ்.ரவீந்திரன் அவர்கள் இலங்கை வானொலி அறிவிப்பாளர்களை அவ்வப்போது உற்சாகப்படுத்தி நிகழ்ச்சிகளுக்கு ஆக்கங்கள் எழுதி ஊக்கம் அளித்து வருகிறார். இன்னும் எத்தனையோ நேயர்களின் நேசக் கடிதங்கள் எங்கள் நெஞ்சங்களை அவ்வப்போது குளிரச் செய்து வருகின்றன.

ஒரு சில கடிதங்களையும், வாழ்த்துக்களையும் இங்கே பதியப்படுவதன் மூலம் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு இதைவிட வேறு சந்தர்ப்பம் இருக்க முடியாது. நேயர்களின் பாசம் நிறைந்த நேசக்கடிதங்கள்

அத்தனையும் உயிர்ச்சத்து மாத்திரைகள் உதாரணத்திற்கு ஒரு சில கடிதங்கள்.

*என் அன்புதாய் அறிவுத்தாய் அருமைத்தாய்*
*இந்திய இலங்கைத் தமிழ் பாலத்தை அமைத்தாய்*
*சிந்தனைக்கு விருந்து படைத்தாய் சிந்தையில் -உயர்*
*எண்ணங்கள் பயிராய் வளர உழைத்தாய்*
*என் தாயின் வடிவாய் வந்தாய்*
*என் தாயன்பை ஊக்குவித்தாய்*
*ஆணவம் அழித்தாய் ஆன்மீகம் வளர்த்தாய்*
*இசையால் உயர்ந்தாய் இயல்பாய் வாழ்ந்தாய்*
*காஞ்சி காமாட்சித்தாய், மதுரை மீனாட்சித்தாய்*
*காசி விசாலாட்சிதாய் கவிதைத்தாய்*
*இனியகானத் தாய் விசாலாட்சி ஹமீட் என் தாய்,*

*எஸ்.என்.முத்துக்குருசாமி*
*அண்ணா நகர் தஞ்சை மாவட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத் தமிழ்த் தென்றல் விசாலாட்சி அமீது

ஆணவம் இல்லாத கலை
தெய்வீகம் ஆகுமென்ற
அடிகளை நான் கண்டதனால்
அபிமானம் மிகக் கொண்டேன்
காற்றின் சுவடுகளில்
கண்டெடுத்த அவ்வடிகள்
கடவுள் பாதையில் நான்
கண்டெடுத்த முத்துக்கள்
கடவுள் உணர்த்திவிட்ட
ஞானமென்றால் மிகையில்லை
குயில் பாட்டில் உறுதி செய்து
கூறியுள்ளேன் கண்டீரோ?
குணங்களில் ஆணவமே
குடம்பாலில் நஞ்சாகும்!
காற்றின் சுவடுகளில்
கவர்ந்திழுத்த அவ்வடிகள்
கண்டதனால் வாழ்த்துகிறேன் சோதரியே – அழகு
தண்டமிழைத் தினம் பேண தவம்- முன்
கொண்டதனால் வாழ்த்துகிறேன்! சோதரியே!

பாவலர் ச. பக்தவத்சலம்
திருநெல்லிக்காவல்
புதூர்

*மனித நேயத்திற்கு மகத்தான பாராட்டுக்கள்*

*பெருமதிப்பிற்குரிய இலங்கை வானொலி அறிவிப்பாளர் விசாலாட்சி அம்மா அவர்களுக்கு,*

*நாகை மாவட்டம் வடக்காலத்தூர் வி.எம்.சிங்காரவேல் எழுதும் மடல் வணக்கம். நலம் வேண்டுவதும் அதுவே. கும்பகோணம் தீ விபத்து பற்றி தாங்கள் தெரிவித்த செய்திகள் பெற்றோர்களுக்கு தெரிவிக்க வேண்டிய கருத்துக்கள் இவையாவும் கேட்கும்போது நாங்கள் மெய்சிலிர்த்து விட்டோம். காரணம் மனித நேயம் எங்கெல்லாம் இருக்கிறது. என்பதற்கு இது ஒரு உதாரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சு மழலைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கு சற்றே ஆறுதல் கிடைக்கும். இலங்கை வானொலிக்கும், உங்களுக்கும் தமிழக மக்கள் சார்பாகவும் இலங்கை வானொலி நேயர்கள் சார்பாகவும் எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி
நாகைமாவட்டம்
வி.எம்.சிங்காரவேல்

மெய்ப் பொருள் காண்பது அறிவு

அன்பும் பாசமும் நிறைந்த விசாலாட்சி அம்மாவுக்கு
என் பேனாவின் தூசுகளை
துடைக்கச் செய்தது- தங்களின்
என் விருப்ப நிகழ்ச்சி
சிரிப்பை ஆராய்ந்தது. அழுகையை ஆராய்ந்தது
அற்புதம் - இந்த தொகுப்பில் உங்களின் பங்கு
எந்த அளவு என்பதை என்னால் உரை முடிகிறது.

அவ்வப்போது கூறும் தத்துவ வார்த்தைகள்
மயிலிறகால் வருடியதுபோல். மனதுக்கு இதம்தரும
நகைச் சுவையால் மூடனைக் கூட சிரிக்க
வைத்துவிடலாம்- ஆனால்
எந்த ஒரு மனிதனையும் சாதாரணமாக
அழவைக்க முடியாது. இருந்தும்
இசையென்னும் யுக்தியால் நீங்கள் அழ வைத்தவர்களில்
நானும் ஒருவன் என்பதை உங்களுக்கு உணர்த்தவே

இக்கடிதத்தை எழுதுகிறேன். 21.01.04 அன்றைய தொகுப்பு தங்களுக்குச் சாதாரண விஷயம். என்றாலும், என்னைப் பொறுத்த மட்டில் எண்ணிலடங்கா இரவின் மடி, நிகழ்ச்சிக்கு சமமானது. இயந்திரமயமான அந்தக் காலைப் பொழுதில் உங்கள் அலைவரிசையில் முக்கால் மணிநேரம். முடங்கிக் கிடந்தேன் என்பதற்கு உங்கள் தொகுப்பே காரணம்..

இமேஜ் ரவி..
ராமேஸ்வரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துப்பா !

ஒவ்வொரு நாளும் ஓங்காரமாய் ஒலிக்கும்
ஒப்பற்ற வானொலியாம் - இலங்கை வானொலி!
அவ்வானொலியின் சிறப்பு மிகு அறிவிப்பாளராம்
அன்புக்குரிய எங்கள் விசாலாட்சி அம்மாவே!

அன்பெனும் பண்பைக் கொண்டு – ஆங்கே
அன்பொழுகத் தமிழதனை அற்புதமாய் உச்சரிக்கும்
உங்கள் தமிழ்ப் பேச்சின் இனிமைக்காக
என் உள்ளம் உவந்து வாழ்த்துகிறேன் !

வங்கக் கடல் கடந்து வருகின்ற
வற்றாத இசை கேட்க காத்திருக்கும்
அன்பான நேயர்களில் நானும் ஒருத்தி
அன்பான மனதுடன் நீவிர் வாழிய – என
பண்புடனே வாழ்த்தும் நான் சுனகுசுப்பு

ஆக்கங்கள் அனைத்திற்கும் ஊக்கங்கள் தந்து
அணுகிவரும் அனைவருக்கும் வாய்ப்பைத் தந்து
தாக்கத்தை விளையவைத்து தமிழை காத்து நிற்கும்
தரணிபுகழ நீவிர் வாழிய வாழியவே !

நன்றி கலந்த பாராட்டு

கனகு சுப்பு
நன்னிலம்
தமிழ்நாடு

நேயர்களின் திறமைகளைப் பாராட்டி உற்சாகப் படுத்தும்
பண்பான உள்ளம் கொண்டவர்
விசாலாட்சி அம்மா

வாழ்க்கை முழுவதும் வற்றாத வசந்தம் எங்கள் அறிவிப்பாளரான திருமதி விசாலாட்சி அம்மாவுக்கே சொந்தம், பாசமுடன், நேசமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியைக் காதலித்து அதனோடு எம் போன்ற நாணல்களையும் ஊக்குவித்து அந்தக் குளிச்சியான பசுமையில் இன்றும் பரவசமாக எம்மோடு இருக்கும் கலைஞர் விசாலாட்சி அம்மாவை என்னவென்று நான் போற்ற?

தன் வாழ்நாளில் பெரும்பகுதியை கலைச்சேவையிலே கழித்த நாயகி இவர். இவரது கலைப் பயணத்தில் பாதைகள் தான் பலமுறை மாறியதேயன்றி பார்வைகள் மாற்றம் ஏதுமின்றி விரிந்தே வந்துள்ளன.

அன்பான பேச்சு, அழகான குரல்வளமும், தமிழைத் தமிழாக உச்சரிக்கும் வல்லமையும் இவரிடம் கூடவே வரும் திறமைகளாகும். எம் போன்ற பல நேயர்களும் ஒப்புக்கொண்டு உள்மனதால் பாராட்டும் விடயம் என்னவென்றால் நேயர்களின் ஆக்கங்களை சுவைபட வாசிப்பதோடு நின்றுவிடாமல் அவர்களது திறமைகளைப் பாராட்டி அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் அறிவிப்பாளர் இவருக்கு நிகராக வேறுயாருமே இல்லை எனலாம்.

மலையாள மொழியில் சிறந்த அறிவும் சிந்தனைத் திறனும் கொண்ட திருமதி.விசாலாட்சி ஹமீட் நடைமுறை வாழ்வோடு. பின்னிப்போன கருத்தாழமிக்கப் பாடல்களை தனது ரசனைக்கு ஏற்றவாறு கருத்துக்கள் பல கூறி அதைத் தொகுத்துத் தரும் விதத்தைப் பாராட்ட வார்த்ததைகளே இல்லை. நேயர்களின் தரமற்ற பிரதிகளைக் கூட குப்பைத் தொட்டிக்குள் எறிந்துவிடாது அதை வானொலிக்கு ஏற்றவாறு தரப்படுத்தும் பெரிய மனசு வேறு யாரிடமும் காணமுடியாது. அவரது வாழ்க்கை அனுபவங்களை சுயசரிதைபோல வாசகர்களுடன் எழுத்துருவில் பகிர்ந்து கொள்ளும் ஒரே பெண் இலக்கியவாதி திருமதி விசாலாட்சி ஹமீட் என்றால் அதுமிகையில்லை.

இன்றும்கூட இவர் குரலைக் கேட்டு ரசிக்கலாம். வொய்சுக்கு வயசில்லை. கலைஞர்களுக்கு ஓய்வு இல்லை. இவரது பணிதொடர நீண்ட ஆயுளுக்கு தினம்தினம் பிரார்த்திக்கின்றேன்

அபிமான நேயர்
குருநாகல் தாரிகா மர்சூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருமுறை சென்னை செல்லும்போதும் நானும் என் கணவரும் திரையுலகையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுத்தான் வருவோம். சந்தர்பம் அமையும்போது இசையமைப்பாளர்கள் கவிஞர்கள் இயக்குனர்கள் இவர்களது பேட்டி நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து கொண்டு வருவோம். அவ்வாறு பேட்டி கண்டவர்களில் இயக்குனர் கே.பாலச்சந்தர் இயக்குனர் மகேந்திரன் இசையமைப்பாளர்கள் இளையராஜாஇ சங்கர் கணேஷ் கவிஞர் பஞ்சு அருணாசலம் மனோரமா ஆச்சி நடிகர் அசோகன் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தமிழ்ச்சேவைப் பணிப்பாளராக கலாநிதி. கே.எஸ்.நடராஜா இருந்த காலத்தில் எனது இந்த முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப ஏற்பாடு செய்தார். அவர் ஓய்வு பெற்றுச் சென்றதும் எனது இந்தப் பேட்டி நிகழ்ச்சிகளை பத்திரிகைக்குக் கொடுத்துவிட்டேன். அப்போது தினகரன் பத்திரிகையில் சினிமாப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த மானா மக்கீன் அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொணடார்.

**1977ம் ஆண்டு இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் அவர்களை எஸ்.வி.சேகரின் ஒலிப்பதிவுக் கூடத்தில் வைத்து எடுத்த சந்திப்பு நிகழ்ச்சி**

புதுமைக்கு இன்னொரு பெயர் பாலச்சந்தர் என்று கூறலாம். இவருடைய படங்கள் என்றால் இலங்கை ரசிகர்கள் புதமையான கதையை எதிர்பார்க்கிறார்கள். இவரது படைப்புகளுக்கு எப்போதுமே தனிமதிப்பு இருந்து வருகிறது. இப்போதும் கூட அபூர்வராகங்கள் ஒரு புதுமைப்படைப்பாக வெற்றிகரமாக இலங்கையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த அபூர்வராகங்களின் மேளகர்த்தா ராகமாக விளங்கும் இயக்குனர் பாலச்சந்தர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறோம்.

விசா: வணக்கம் திரு பாலச்சந்தர் அவர்களே

**சினிமா உலகில் உங்கள் ஆரம்ப கால வாழ்க்கை எப்படி அமைந்தது என்பது பற்றிக் கூறமுடியுமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால : முதல்ல சிலோன் வாழ் தமிழ் ரசிகப் பெருமக்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏன்னா என்னுடைய படங்கள் சிலோன்ல மிகப்பெரிய வரவேற்பு இருப்பதாகக் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷமடைகிறேன்.

நான் இந்த சினிமா பீல்டுக்கு வரவேண்டும் என்ற நினைப்போட வரல்ல. உண்மையிலே சொல்லப்போனா என் ரத்தத்திலே கலந்து போனது நாடகம்தான். நாடகங்கள் எழுதணும் நாடகங்கள் மேடையேற்றணும் தயாரிக்கணும் என்கிற ஒரு ஆர்வத்தின் காரணமாகத்தான் அமச்சூர் நாடக மேடையிலே பல நாடகங்கள் நடத்திவருகிறேன் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்போ அக்கவுண்டன்ட் ஆபீஸிலே சுப்பிரண்ட்டாக வேலை செய்து வந்தேன். அந்த நேரத்திலேதான் நாடக உலகத்திலே பிரபலமானதாலே அப்படியே சினிமா உலகத்திற்கு முயற்சி பண்ணினேன். அப்புறம் சினிமா உலகத்தில ஒரு காலும் உத்தியோகத்தில ஒரு காலும் வைச்சுகிட்டு இருந்தேன். அபபுறம்தான் முழுநேரத் தொழிலாக இந்த சினிமாவை ஏத்துக்கிட்டேன

விசா : அப்படியானால் சினிமாத்துறையில் உங்களுக்குக் கிடைத்த இந்தப் புகழ் நீங்கள் எதிர் பாராதது இலலையா?

பால : நிச்சயமாக நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏன்னா என்னுடைய எழுத்து எண்ணம் எல்லாமே நாடக துறையைப் பற்றியதுதான் சினிமாத்துறையைப பற்றியதல்ல. அதுக்கப்புறம் நாம சினிமாத்துறைக் வந்திட்டோம் என்று தெரிந்த பிறகு சரி இனிமே சினிமான்னா என்ன சினிமாவுல முக்கியமான விஷயங்கள் என்னென்ன இருக்கு Celluloid media வின்; potentiality என்ன அப்பிடிங்கிறதப் பின்னாலதான் கத்துக்க ஆரம்பிசிசேன். அதாவது ஒவ்வொரு சினிமா எடுக்கும் போதும் அதுல பல விஷயங்களைக் கத்துகிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா : உங்கள் படங்களைப் பற்றிய விமர்சனங்களை நீங்கள் பார்ப்பதுண்டா?

பால : அநேகமா என் பார்வைக்குக் கொண்டுவரப்படுகின்ற அத்தனை விமர்சனங்களையும் ஆர்வத்தோட ரொம்ப ஆர்வத்தோட படிப்பேன்.

விசா : பத்திரிகை விமர்சனங்களையா அல்லது உங்கள் ரசிகர்களிடமிருந்து வரும் விமர்சனங்களையா சரியான விமர்சனமாக எடுத்துக்கொள்வீர்கள்?

பால : இப்போ விமர்சனம் என்று சொல்லும் போது பத்திரிகை என்றாலும் அது எல்லா மக்களுடைய எண்ணங்களையும் பத்திரிகை பிரதிபலிக்கிறதா நாம கருதமுடியாது. யார் அந்த விர்சனத்தை எழுதுறாங்களோ அவங்களுடைய எண்ணம்தான் அந்தப் பத்திரிகையில வர்ற விமர்சனம் வேிப்படுத்துகின்றது. அப்பிடிப் பார்த்தா தினந்தோறும் ஆயிரக்கணக்கான ரசிகர்களிடமிருந்து எனக்கு லெட்டர் வருது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விமர்சனம்தான். என்னைப் பொறுத்தவரையில் ஒரு பத்திரிகையில விமர்சனம் வந்ததுன்னா அது மக்களுடைய விமர்சனமா நான் எடுத்துக்க மாட்டேன். தனிப்பட்ட ஒருவருடைய விமர்சனமாத்தான் எடுத்துக்குவேன் அதனால்தான் சில சமயங்களிலே புகழ்ந்து எழுதினாலும் நான் பெருசா எடுத்துக்கிறதில்ல ஏன்னா அது ஒரு தனி நபருடைய புகழ்ச்சி. தாக்கி எழுதினாலும் நான் அதையும் பெருசா எடுத்துக்கிறதில்லை.

விசா : அபூர்வராகங்கள் திரைப்படத்தில் ஸ்ரீவித்யா தப்புத்தாளம் போடுவதாக சுப்புடு எழுதியிருந்தாரே அது பற்றிய உங்கள் கருத்து என்ன?

பால : சுப்புடு அவர்கள் சங்கீதத்திலும் ஞானத்திலும் மிகுந்த பிரபலமடைந்தவா அவர் அப்பிடிச் சொல்லியிருக்கிறார் என்றால் அது கரக்ட்டாகத்தான் இருக்கும். அது தவிர்க்க முடியாத ஒண்ணாப்போச்சு. அதாவது சினிமாவை எடுக்கும்போது எத்தனையோ டிவிக்கள்டிஸ் இருக்கு. அது ரசிகர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. ஒரு சிறிய பாடலை டிவை டிவை டாக எடுக்கும்போது அந்தப் பாடலைப் போட்டு அதற்குத் தகுந்தாப்பிலதான் படம் எடுக்கிறோம். அப்பிடி எடுத்து அதையெல்லாம் ஒண்ணாச் சேர்க்கும்போது ஒண்ணுரெண்டு எடத்தில தப்பான தாளங்கள் வந்திருக்கறதுக்கு சான்ஸஸ் உண்டு. ஆனாலும் அந்தப்படத்தில தப்பான தாளம்கூட இருக்கு. அது எங்களுக்குத் தெரியும். அது தெரிஞ்சும்கூட எங்களால நிவர்த்தி செய்ய முடியாத நிலையிலே அதாவது திரும்பவும் எடுக்கமுடியாத நிலைமையினாலதான் அதை அப்படியே ரிலீஸ் பண்ணினோம். ஆனா அது நிச்சயமாக சுப்புடு மாதிரி உள்ள கிரிட்டிக்குடைய கண்களுக்குத் தப்பாது என்பதும் எங்களுக்கு அப்போதே தெரியும்.

விசா : உங்கள் கதைக்கேற்ற கதாநாயகன் நாயகியை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

பால : மொதல்ல எதை வொறி பண்ணிக்கிறேன்னா கதையில வர்ற கரெக்டர்களைத்தான் முக்கியமா முக்கியத்துவம் கொடுத்து முதல்லேருந்து கடைசிவரை அவர் என்ன செய்யப்போகிறார் எப்படிச் செய்யப்போகிறார் என்று தீமானித்து அந்தக் கரெக்டர்களுடைய தனித்தன்மையை எப்படி ரியெக்ட் பண்ணப்போறாங்க என்கிறதையும் நான் வரையறுத்துக் கொள்வேன். அதற்குப் பிறகு இந்த ரோலுக்கு யார் யாரைப் போட்டா நல்லாயிருக்கும் என்று பின்னர்தான் முடிவு செய்கிறேன். அந்தமாதிரி நேரத்திலதான் அபூர்வராகங்கள் படத்தில் பைரவி என்கிற கதாநாயகி பாத்திரத்துக்கு என் கண்முன்னாலே வந்தவர்கள் இரண்டேபேர். ஒருவர் ஸ்ரீவித்யா மற்றவர் ஜெயந்தி ஸ்ரீவித்யாவுக்கு சங்கீத ஞானம் உண்டு. அதனால் ஸ்ரீவித்யாவை தேர்ந்தெடுத்தேன்.

விசா : அப்படியானால் புது முகங்களைத் தேர்ந்தெடுக்கும் போது எப்படியான முறையைக் கையாளுகிறீர்கள்?

பால : புதுமுகங்களை நான் டீல் பண்ணும்போது சின்ன வித்யாசம் இருக்கு ஒரு முக்கியமான ரோலுக்குப் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தைப் போடுகிறேனென்றால் அந்தப் புதுமுகத்துடைய potentiality யை முதல்ல நான் judge பண்ணிக்குவேன். அதாவது அவர்களுக்கு என்னென்ன strong point இருக்கு weak point என்ன இருக்குன்னு முதல்ல தெரிந்து கொள்வேன். அதாவது சில கோணங்களிலே அவங்க முகம் நல்லா இருக்காதுன்னு தெரிஞ்சா அதெல்லாம் வீக் பொயின்டா வைத்துக் கொள்வேன். அதை avoid பண்ணிக்குவேன். அதேமாதிரி ஒருசில ரசனைகள் அவங்களால பண்ணமுடியும் என்று தெரியும்போது அது சம்பந்தமான விஷயங்களை நல்லா exploit பண்ணிக்குவேன். மொதல்ல எனது கெரக்டருக்கு எது ரொம்ப முக்கியமா இருக்கோ அதை main basis ஸா வைச்சக்கிட்டு அந்தப் புதுமுகத்தை தெரிந்தடுத்துக் கொள்வேன்.

சூட்டிங் நடந்து கொண்டிருக்கும்போது காதல் காட்சியில் ஒரு புதுமுகத்துக்கு அவ்வளவா நல்லா வரல்லைன்னா அந்த சீனை சாதாரணமாக காட்டிவிட்டு விட்டிடுவேன். ஆனா அந்தக் காதல் காட்சியை ஒரு புதுமுகம் அற்புதமாகப் பண்ணுகிறார் என்று தெரிந்தால் நாம் எப்படி எடுக்க வேண்டுமென நினைத்தோமோ அதை விட டபுளா என்லார்ஜ் பண்ணி extend பண்ணி எடுத்திடுவேன். அதனால்தான் என் படத்தில புதுமுகமா வர்றவங்க எல்லாம் நல்ல பேர் எடுத்திடுறாங்க. காரணம் என்னன்னா அவர்களுடைய தனித்திறமை என்னங்கிறதை முதல்ல judge பண்ணிகிட்டு அதற்குத் தகுந்தமாதிரி அவங்க ரோலை அங்க இங்க alter பண்ணி எடுத்துக்குவேன்.

விசா : நீங்க டைரக்ட் செய்யும்போது நடிகர்களை அவங்க சொந்த நடிப்பில நடிக்க விட்டு அங்கங்கே திருத்தங்கள் சொல்வீர்களா? அல்லது ஒவ்வொரு அசைவையும் உங்கள் ஸ்டைலில் ஒவ்வொன்றாக அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பீர்களா?

பால : இது ஒரு நல்ல பொயின்ட் எதுக்காக நல்ல பொயின்ட் என்கிறேன்னா எப்படி ஆர்ட்டிஸ்டுகளை டீல் பண்ணணும் ஒரு டைரக்டர் என்கிறதுக்கு மிகச் சிறந்த கேள்வி. அநேகமா யாருமே இப்படியான ஒரு கேள்வியை என்கிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிருக்க மாட்டாங்க என்னு நினைக்கிறேன். இந்தமாதிரி கேள்வி கேட்கும்போது எனக்கு பதில் சொல்வதற்கு சந்தோஷமாக இருக்கிறது. நல்ல திறமைசாலியான ஒரு நடிகரைப் பார்க்கும்போ அவருக்கு வந்து இப்படி நடி அப்படி நடின்னு நம்ப என்னென்ன நினச்சிருக்கமோ அதெல்லாம் சொல்லி அவரைகுழப்பிவிடக் கூடாது. முதல்ல அவரால என்ன செய்ய முடியுது என்னு பாத்துக்குவேன். அவர் என்னுடைய expectation னுக்கு வாறார் என்றால் அவருடைய பாணியிலேயே செய்யக்கூடிய ஒரு தன்மை படைத்தவராகவோ டெலன்ட் படைத்தவராகவோ இருக்கார்ன்னா நான் என்ன சொல்லணும்ன்னு நினைக்கிறேனோ அதைச் சொல்லாம விட்டிடுவேன். உதாரணமா இன்னைக்குப் பிரபலமாக இருக்கிற சுஜாதாவை நான் ஒண்ணு ரெண்டு படத்தில டீல் பண்ணியிருக்கிறேன். முதல் படம் "அவள் ஒரு தொடர் கதை" சுஜாதாவுடைய ஒவ்வொரு அங்க அசைவுக்கும் சரி modulation க்கும் சரி நான்தான் காரணம். நான் என்னென்ன சொல்லிக் கொடுத்தேனோ அதயெல்லாம் தான் செய்திருக்கிறார். ஆனா இப்போ அதே சுஜாதா ரொம்ப பிரபலமான பிறகு நடுவில நெறயப் படங்கள்ல நடிச்சு பேரும்புகழும் அடைஞ்சிருக்கிறதால அவருடைய performance சிலயும் சரி அவருடைய எண்ணத்திலும் சரி மெச்சுரிட்டி வந்திருக்கு அப்படி யிருக்கும்போது இப்போ ரீசன்டா வந்திருக்கிறபடத்தில அவரால மெச்சுரிட்டியோட பண்ண முடியுது. இப்ப என்ன பண்ணுறேன்னா என்ன வேணுங்கிறதை மட்டும் சொல்லிட்டு விட்டிடுறேன்.

விசா : ஒருமுறை கதாநாயகியா சந்தர்ப்பம் கொடுத்தவங்களுக்கு மறுமுறை உங்க படத்தில சந்தர்ப்பம் வழங்குவதில்லை என்று ஒரு கதை இருக்கிறதே உண்மையா?

பால : ஒரு முறை என் படத்தில நடிச்சவங்களை மறுமுறை நடிக்க வைக்கிறதில்லைன்னு கொள்கை ஏதும் கிடையாது. ஆந்த மாதிரி ஏன் பண்ணாம இருக்கேன்னா ஒரு முறை ஒரு அரங்கேற்றத்தில் ஒரு லலிதாவை கிரியேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிவிட்டால் அடுத்தாப்பில பாலசந்தர் அன்ட் பிரமிளா என்று வரும்போது அரங்கேற்றம் லலிதான்னு ஞாபகம் வரணும். அந்த லலிதாங்கிற இமேஜ் இருக்கு பாருங்க அது கொஞ்ச வருஷத்துக்கு மறக்க முடியாது. அதோட வேறொரு ரோல் பண்ணும்போது உடனே கம்பயர் பண்ணிப் பார்ப்பாங்க. அதைவிட இதுல கம்மியா பண்ணியிருக்கா இல்ல ஜாஸ்தியா பண்ணியிருக்கா அப்படியெல்லாம் பேச ஆரம்பிடுவாங்க. அதனால அந்த இமேஜ் கொஞ்ச வருஷத்துக்கு அப்படியே இருக்கணும்கிறதுக்காகத்தான் என்னுடைய அடுத்த ரெண்டு படத்தில் அல்லது மூணுபடத்தில வேற ஆர்ட்டிஸ்டைப் போட்டு பண்றேன் ஆனா இப்படிச்சொன்னா நீங்க கேக்கலாம் கமலஹாசன் மாத்திரம் வரிசையா உங்க படத்தில இருக்கானேன்னு கேப்பீங்க. கமலஹாசனைப் பொறுத்தவரை எனக்கு ஒரு கண்பிடன்ஸ் இருக்கு.

அவரை எப்படி வேணுன்னாலும் நம்மளால வளைக்க முடியுங்கிற அசாத்திய நம்பிக்கை எனக்கு உண்டு அவன்மேல. உதாரணமாச் சொன்னா அவள் ஒரு தொடர் கதையில அவன் பண்ணின ரோல் வந்து ஒரு கொமிக்கல் சென்சோட உள்ள கரெக்டர். ஆனா அதுவே ஒரு புரட்சிகரமான யூத்தினுடைய கரெக்டரா அபூர்வ ராகங்கள் படத்தில பண்ணியிருக்கான். அதனால இந்த மாதிரி மாத்த முடியும்னு நம்பிக்கையுள்ள படங்களிலே மட்டும் அப்பப்ப நான் அந்தந்த கரெக்டர்கள் வரும்போது யூஸ் பண்ணிக்கிறேன்.

விசா : ஏற்கனவே வெளிவந்த நாவல்கள் கதைகள் இவைகளைப் படமாக்குவது பற்றிய உங்கள் கருத்து என்ன?

பால : இப்போ அப்படியான ஒரு டென்டென்சி உருவாகி இருக்கு. அந்தமாதிரிக் கதைகளை எடுக்கக் கூடிய தைரியம் எல்லாருக்கும் வர ஆரம்பிச்சிருக்கு ஆல் வேய்ஸ் குட் நாவல்களைத் திரைப்படமாக்கும்போது டிபிகள்டீஸ் நிறைய இருக்கு. அந்த ஸ்கிரீன் வெர்ஷனுக்குக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்றதிருக்கே அது பெரிய கலை அந்தக் கலையை நாம மிஸ் பண்ணிட்டா அந்த நாவல் பெயிலாயிடும். அதனால நூல் பிடிச்ச மாதிரி அதுல ஏதோ ஒரு விஷயம் இருக்கு. நாவலில் சொல்லப்பட்டிருக்கிற விஷயம் இருக்கு பாருங்க அந்தக் கரு கெடாம அதைத் திரையில் விஷ்வலாக நாம் காட்டக் கூடிய அளவுக்கு அநத ஸ்கிரீன் பிளே அமைக்கிறதிலேதான் சாமர்த்தியம் இருக்கு. அதை சாமர்த்தியமா அமைச்சிட்டோமின்னா எந்த நாவலையும் வெற்றிகரமா பண்ணலாம்.

விச : அடுத்து நீங்கள் ரசிகர்களுக்குத் தரப்போகும் புதுமைப் படைப்பு என்ன?

பால : புதுமை என்னன்னு படத்தைப் பார்த்த பிறகு ரசிகர்கள்தான் சொல்லணும். ரசிகர்கள் விடாம ரசிக்கணும்னா ஏதாவது மாற்றங்கள் தேவை. திருப்பித் திருப்பி ஒரே முகத்தையோ திருப்பித் திருப்பி பழகிப்போன சம்பவங்களையோ பழகிப்போன இமோஷன்களையோ பார்க்க விரும்புறதில்ல. கொஞ்சம் சேன்ஞ் இருந்தாத்தான் அதை ரசிக்கிறார்கள் என்கிற பொதுப்படையான ஒரு அபிப்பிராயத்தை நம்மால உணர்ந்து கொள்ள முடிகிறது. அதற்குத் தகுந்த மாதிரி ஒவ்வொரு படத்திலேயும் ஏதாவது ஒரு மாற்றத்தைக் கொடுக்கிறதுக்கு முயற்சி செய்வேன். அது சில நேரங்களில ரொம்ப நல்ல சக்ஸஸ் தருது சில சமயங்களில பெயிலியராவதும் உண்டு.

விசா : புதிதாக இந்தத் திரைப்படத்துறைக்கு வரும் தயாரிப்பாளர்களுக்கு உங்கள் அனுபவத்தின் மூலம் அவர்களுக்குச் சொல்லும் அறிவுரை என்ன?

பால : ஒரு படம் சக்ஸஸ் ஆவதற்கு முக்கியமான காரணம் எதுவென்று என்னுடைய அனுபவத்தில நான் தெரிந்து வைத்திருக்கிறது என்னவென்றால் அது திரைக்கதை. திரைக்கதை அமைப்பில்தான் இருக்கிறது success of the project அந்தக் கதையின் கதாபாத்திரங்களுக்குத் தகுந்த மாதிரி நடிகர்களைத் தெரிந்தெடுத்து படத்தைத் தயாரிச்சா நிச்சயம் அந்த புரொஜக்ட் வெற்றிகரமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா : நன்றி பாலசந்தர் அவர்களே எவ்வளவோ வேலைகளுக்கிடையில் உங்கள் பொன்னான நேரத்தை எமது இலங்கை வானொலி நேயர்களுக்காக ஒதுக்கி உங்கள் எண்ணங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டு மிகவும் பயனள்ள கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறீர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நேயர்கள் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகிறோம்.

பால : Pleasure is mine. இந்த சந்திப்பின் மூலமாக இலங்கை வாழ் ரசிகப் பெருமக்களுக்கும் எனது எண்ணங்களையும் கருத்துக்களையும் எடுத்துச் செல்லும் உங்களுக்கும் என் நன்றியும் வணக்கமும்.



எஸ்.வி.சேகரின் ஒலிப்பதிவுக் கலையகத்தில் வைத்து இயக்குனர் திலகம் கே. பாலச்சநதர் அவர்களைப் பேட்டி கண்டபோது எடுக்கப்பட்டது.

'ஆபாசம் என்ற கண்ணோட்டத்தோடு பார்த்தால் எதுவும் ஆபாசமாகத்தான் தெரியும்."

திரைக்கவிஞரும் திரைக்கதை வசனகர்த்தாவுமான பஞ்சு அருணாசலம்__அவர்களுடனான சந்திப்பு.

ஏ.வி.எம்.ஸ்டுடியோவில் ருசிகண்டபூனை திரைப்படத்திற்காகப் பாடல் ஒலிப்பதிவு நடந்து கொண்டிருந்தது. கவிஞர் பஞ்சு அருணாசலம் இசையமைப்பாளர் இளையராஜா ஆகியோர் வாத்தியக் கலைஞர்களுடன் சேர்ந்து சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சு சார் அவர்களிடம் பாடகர் யார் என்று நான் கேட்டேன்.

பஞ்சு அருணாசலத்தை மற்றவர்கள் பஞ்சு சார் என்றுதான் அன்புடன் அழைக்கிறார்கள்.

அதற்குப் பஞ்சு அவர்கள் 'பாலுவைத்தான் போட்டிருந்தோம். அவர் வெளியூர் சென்றவர் இதுவரை வரலில்லை. அப்படி வரல்லேன்னா ராஜா (இளையராஜா) தானே பாடி ரெக்காடிங்கை முடிச்சிடுவார்" என்றார்.

'இந்தப் படத்திற்குப் பாடல்கள் மாத்திரம்தான் நீங்கள் எழுதியிருக்கிறீர்களா அல்லது திரைக்கதை வசனமும் நீங்கள்தானா?' என்று கேட்டேன்.

ஆமா திரைக்கதை வசனமும் பாடல்களும் நானேதான் பொறுப்பேற்றுக்கிறேன். ஆனால் மூலக்கதை மலையாளத்திலிருந்து எடுக்கப்பட்டது. மலையாளத்தில் நடிகை ஷீலா திரைக்கதை எழுதி சிகரங்கள் என்ற பெயரில் வெளிவந்த படம்தான் இந்த ருசி கண்ட பூனை.

இதற்கிடையில் பாடல் பதிவிற்கு ரெடியாகிவிட்டார்கள். அன்றைய தினம் பதிவான பாடல் இதுதான். அன்புமுகம் தந்த சுகம் நெஞ்சில வரும் இன்ப சுகம் என்று தொடங்குகிறது. இசையமைப்பாளர் இளையராஜா இந்தப் பாடலைப் பாடியிருக்கிறார். பாடி முடிந்து வெளியே வந்ததும், அவரை எல்லோரும் பாராட்டினார்கள். இந்தச் சந்தர்ப்பம் பஞ்சு அருணாசலம் அவர்களோடு சிறிது நேர உடையாடலுக்கு வழிவகுத்துக் கொடுத்தது.

கேள்வி : சினிமாத்துறையில் வருவதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தீர்கள். இந்தத் துறையில் வருவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்?

பதில் : சுருக்கமாச் சொன்னால் கவிஞர் கண்ணதாசன் ஏ.எல். ஸ்ரீனிவாசன் இருவருமே திரையுலகில் சிறந்த இடத்தை வகித்து வந்தார்கள்.

ஏ.வி.எம்.ஸ்டியோவில் ஒரு கணக்காளனாக வேலை பார்த்தேன். அதன் பிறகு எனக்கு கணக்கு வேலை பிடிக்காததால் கவிஞர் கண்ணதாசனிடம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து வேலையில் சேர்ந்தேன் எனது இன்றைய வளர்ச்சிக்குக் கவிஞர் கண்ணதாசன் அவர்களே முக்கிய பொறுப்பு

கேள்வி : இப்போது வரும் ஒரு சில பாடல்கள் இரட்டை அர்த்தங்கள் கொண்டவையாகவும் ஆபாசமாகவும் இருக்கின்றன, என்று ஒரு பொதுவான அபிப்பிராயம் நிலவுகிறது. நீங்கள் இதைப்பற்றி என்ன சொல்லவிரும்புகிறீர்கள்?

பதில் : எது ஆபாசம் எது ஆபாசமில்லை என்று யாருமே தீர்மானமாகச் சொல்ல முடியாது. எனக்கு நல்ல விஷயமாகப் படுவது மற்றவருக்கு ஆபாசமாகப்படலாம். உண்மையிலேயே ஆபாசமான காட்சிகளோ பாடல்களோ இருந்தால் அதுவே ஒண்ணும் இல்லேன்னு சென்சார் விட்டுவிடுகிறார்கள். என்னுடைய அபிப்பிராயம் இதுதான். இலக்கிய நயத்தோட செக்ஸ் எழுதப்படும்போது அழகும், நயமும் கொண்டதாகவே இருக்கும். ஆபாசம் என்ற கண்ணோட்டத்தோடு எதையும், பார்த்தால் அது ஆபாசம்தான். கவிஞரின் கற்பனை நயத்தை அங்கு கண்டார்களானால் அங்கு ஆபாசம் தெரியவே தெரியாது. அதையே தெருவிலே போறவனுடைய பாஷையில் சொன்னால் ஆபாசம்தான். உதாரணத்திற்கு கோவில்களில் காணப்படும் சிற்பங்களைச் சொல்லலாம். சிறந்த ஓவியங்கள் இவைகளைச் சொல்லலாம்.

கேள்வி : நீங்கள் இயற்றிய ஏராளமான பாடல்கள் இரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. கவிநயமும் கருத்தாழமும் கொண்டவை. உங்கள் மனதில் இன்றும் மறக்காமல் இருக்கும் பாடல் எது?

பதில் : நான் முதன் முதல் எழுதிய மணமகளே மருமகளே வா வா என்ற சாரதா படத்திற்காக எழுதியது. அந்த பாடலை என்னால் மறக்க முடியாது. ஏனென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் முதல் முதலில் எழுதிய பாட்டல்லவா! ஆனால் படத்தில் கண்ணதாசனுடைய பெயர்தான் போட்டிருப்பார்கள். ஏனென்றால் அப்போது நான் அவருக்கு உதவியாளனாக இருந்தேன். அதோட எப்பவும் என் காதிலே ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் பாடல் அன்னக்கிளி பாடல்கள்.

கேள்வி : பாடல் இயற்றுவதற்கு உங்களுக்குத் தனிமையான சூழ்நிலை வேண்டுமா? அல்லது எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் இயற்றுவீர்களா?

பதில் : எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் பாடல்கள் எழுத என்னால் இயலும். நல்ல மெட்டு மனதுக்குப் பிடித்துவிட்டதென்றால் தானாகவே நல்ல சொற்கோவைகள் வந்து விழும். சில வேளைகளில் சுமாராக அமைந்து விடுவதும் உண்டு. ஆனால் அதற்குச் சூழ்நிலை காரணமல்ல, உதாரணத்திற்குச் சொல்லப் போனால் உல்லாசப் பறவைகள் படத்திற்காகப் பாடல்கள் கொம்பசிங் செய்வதற்கு நானும் இளையராஜாவும் சிங்கப்பூர் போயிருந்தோம். அந்தப் படத்திற்காகப் படப்பிடிப்பும் அங்கு நடந்தது. அங்கு போய் தீவிரமாக பாடல் சிந்தனையில் ஈடுபட முடியவில்லை. ஏனென்றால் நண்பர்கள் வந்து போவதும், ஊரைச் சுற்றிப் பார்ப்பதும், பேர்சீசனிங் செய்வதும் இப்படியாக எதை நினைத்துப் போனோமோ அது நிறைவேறாமல் போய்விட்டது. திரும்பி வந்து ஸ்டியோவில் மரத்துக்கடியில் அவசர அவசரமாகப் பாடல் எழுதி அவசர அவசரமாக ரெக்காடிங் செய்தோம். எல்லாப் பாடல்களும் பிரமாதமாக அமைந்தது விட்டன.

கேள்வி : சமீபத்தில் வெளியான கல்யாண ராமன் திரைப்படம் உங்களுக்குப் பெரும் வெற்றியை அளித்திருக்கிறது. ஆவியோடு சம்பந்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதையை நீங்கள் எழுதும்போது ரசிகர்களிடம் நல்லவரவேற்பு கிடைக்கும் என்றும் அந்தப்படம் உங்களுக்கு வெற்றிப்படமாக அமையும் என்றும் நீங்கள் எதிர்பார்த்ததுதானா?

பதில் : எப்போதுமே கதாசிரியர்கள் கதை எழுதும்போது எந்த அளவுக்கு மக்கள் இதனை இரசிப்பார்கள் என்பதை ஓரளவுக்கு ஊகித்துக் கொண்டு அதன்பின்தான் ஏழுதத் தொடங்குவார்கள். அந்த யூகம் வெற்றியடையும்போது கதாசிரியர் தானும் வெற்றி பெறுகிறார். யூகம் தவறாகும்போது தோல்வியடைகிறார். உதாரணத்திற்குச் சொல்லப் போனால் இந்த தொகுதியில் நின்றால் ஒரு இலட்சம் வோட்டு வித்தியாசத்தில் நான் ஜெயிப்பேன் என்று யூகித்து ஒரு தலைவர் போட்டியில் நிற்கிறார் என்று வையுங்கள். அதேபோல் அவர் வெற்றிபெற்றுவிட்டாரானால் ஜனங்களைப் பற்றிய அவரது யூகம் சரியானதாகிவிடுகிறது. அவரது யூகம் பிழையென்றால் அவர் தோற்றுவிடுகிறார். அது போல்தான் படம் எடுப்பதும். அது போன்றதுதான்.

கேள்வி : ஜனங்களின் ரசனையைத் தெரிந்து கொள்வதற்கு தனி நபர் ஒருவரின் யூகத்தைப் பயன்படுத்தாமல் பலதரப்பட்டவர்களை ஒரு குழுவாக அமைத்து அவர்களின் அபிப்பிராயங்களை நீங்கள் ஆராய்ந்து அதை வைத்துக் கொண்டு முன்னதாகவே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க முடியாதா?

பதில் : முடியாது? யாராலுமே முடியாது. ஏனென்றால் பத்துப் பேரை வைத்துக் கொண்டு அவர்களிடம் அபிப்பிராயம் கேட்கப் போனால் பத்து விதமான அபிப்பிராயங்களைச் சொல்லுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் என் கருத்துக்களை வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எனது அனுபவங்களை வைத்துத்தான் கதைகளை தீர்மானிக்கிறேன்.

மிக்க நன்றி பஞ்சு அருணாசலம் அவர்களே. தங்கள் அருமையான விளக்கத்திற்கும் அற்புதமான கருத்துக்களுக்கும் இலங்கை வாழ் ரசிகர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம.



நடிகை
ஸ்ரீதேவியை
**AVM Studio** வில்
சந்தித்தபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திரையிசையில் கர்நாடக சங்கீதம்"

"சங்கராபரணம் கே.வி.மகாதேவனுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி."

இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் கூறுகிறார்.

அது கல்யாண மண்டபம். வாசலில் நுழையும்போதே வாத்தியக்கருவிகளின் இசை மனதைச் சுண்டி இழுக்கிறது. உள்ளே சங்கர் கணேஷ் தங்கள் இசைக் குழுவினருடன் ஒத்திகை நடத்திக் கொண்டிருந்தார்கள். இருந்தும் எம்மைக் கண்டதும் இன்முகத்துடன் கரம் கூப்பி வரவேற்று சற்று இருக்கும்படி சைகை காண்பித்துவிட்டு ஒத்திகையில் தொடர்ந்து கவனத்தைச் செலுத்தினார்கள்.

ஒரு பாடல் முடிந்தவுடன் சங்கர் தொடர்ந்து மற்றப் பாடலுக்கு ஒத்திகை பார்க்க கணேஷ் எங்களிடம் ஓடி வந்தார். நாளை மறுதினம் ஒரு ஷோ நடக்கப் போகிறது. அதற்குத்தான் இந்த ஒத்திகை என்றார். பரவாயில்லை நீங்கள் அதை முடித்துவிட்டு வாருங்கள் நாங்கள் வெயிட் பண்றோம் என்றேன். "அடேயப்பா அது இன்னைக்கு முழு நாளும் போகும். அதைப்பற்றிக் கவலைப்படாதீங்க அதை சங்கர் நின்று பார்த்துக்குவாரு". என்றார்.

"அப்போ பேட்டியை இங்கேயே வச்சுக்கலாமே" என்றேன் பேஷாக என்றார்.

என் கையில் கொண்டு சென்ற கெஸட் ரெக்கார்டரைத் தட்டி விட்டு பேட்டியை ஆரம்பித்தேன்.

கேள்வி : இசைத்துறையில் இரட்டையர்களாக விளங்கும் சங்கர் கணேஷ் என்னும் நீங்கள் எப்படி இந்த இசைத்துறையில் இணைந்தீர்கள் என்று சொல்வீர்களா?

பதில் : நாங்கள் இணைந்த விதத்தைச் சொல்வதற்கு முன் இலங்கை வாழ் அன்பு ரசிகப் பெருமக்களுக்கு என் பணிவான வணக்கத்தை சொல்லிவிடுகிறேன். நாங்கள் இணைந்தது எப்படி என்றால் பாசமலர் என்றொரு படம் வந்தது உங்களுக்கு தெரியும். அதுலே நாங்கள் ரெண்டு பேரும் விஸ்வநாதன் சாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவிலே பணியாற்றிக் கொண்டிருந்தோம் நான் ரிதம் வாசித்துக் கொண்டிருந்தேன். சங்கர் ஆர்மோனிஸ்டா இருந்தாரு. அந்தப் படத்திலே வாராய் என் தோழி வாராயோ என்ற பாட்டிலே தான் நான் மொதல் சங்கரைச் சந்தித்தேன். அந்தப் பாட்டிலே வருவதைப் போல வாராய் என் நண்பனே வாராய் என்று சங்கர் என்னை வரவேற்றார் நானும் சங்கரை வரவேற்றுக் கொண்டேன்.

கேள்வி : அப்படியானால் நீங்கள் இருவரும் சேர்ந்து முதனமுதலில் இசையமைத்த படம் எது?

பதில் : நாங்கள் முதல் முதல்ல இசையமைச்ச படம் மகராசி அது தான் எங்கள் முதல்படம் என்று சொல்ல வேண்டும். கவிஞர் கண்ணதாசன்தான் அந்த சந்தர்பத்தை எங்களுக்கு வாங்கிக்கொடுத்தார். அதனாலேதான் இன்றும் நாங்கள் கவிஞர் வழங்கிய தேவரின் சங்கர் கணேஷ் என்று டைட்டில்லே பேரு கொடுக்கிறோம்.

கேள்வி : இசையமைப்பதோடு பாடல்கள் பாடியும் இருக்கிறீர்கள் இல்லையா?

பதில் : ஆமாம் கைநிறைய காசு படத்திற்காக டைட்டில் பாட்டு நான் தான் பாடியிருக்கிறேன் (பாடுகிறார்) கைநிறையக் காசு பைநிறையக நோட்டு இப்போ நான் நடிச்சிட்டிருக்கிற ஒத்தையடிப் பாதையிலே என்ற படத்தில சங்கர்கூடப் பாடியிருக்கிறார்.

கேள்வி : ஒத்தையடிப் பாதையிலே படத்திலே நீங்கள் என்ன மாதிரியான ரோல் செய்யிறீங்க!

பதில் : அது வந்து ஒரு ரன்னர் ரோலுங்க. ஒரு சின்னக் கிராமம், அங்க வந்து எந்தவிதமாக வசதியுமில்லை. அங்கே ரங்கன என்கிற போஸ்ட்மேன் இவன் ஊரில் இருக்கிற லெட்டர் எல்லாத்தையும் எடுத்திட்டுப் போய் டவுணுக்குப் போய் போட்டுட்டு வரணும். இதுக்கு மத்தியிலே நடக்கிற இன்ஸிடெனட்டை வைத்துத் தான் கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : அப்போ அந்த ரோல் உங்களுக்கு நல்லாப் புடிச்சிருக்குன்னு சொல்லுங்க

பதில் : ரொம்ப நல்லாப் புடிச்சிருக்குங்க

கேள்வி : வேற படங்களும் நடிச்சிட்டு வர்றீங்களா இப்போ

பதில் : தியாக தீபம் என்ற ஒரு படத்திலே இப்போ நடிக்கிறேன். ஏன் மாமனார் ஜீ.என்.வேலுமணின்று உங்களுக்கு நல்லாத் தெரியும்னு நான் நெனைக்கிறேன். அவருடைய ஆசீர்வாதம்தான் நான் நடிக்கிறதுக்குக் காரணம்.

கேள்வி : இப்போ நீங்கள் நடிப்புத் துறையிலே இறங்கிட்டதாலே இசையமைப்பு நடிப்பு இரண்டையும் கவனிக்கிறது கஷ்டமாயில்லையா?

பதில் : அதுக்குத்தான் நாங்க ரெண்டு பேர் இருக்கிறமே ஒருத்தர் ஆக்டிங்கை கவனிச்சா மற்றவர் மியூஸிக்கை கவனிப்போம். ஆனா நடிச்சாலும் இசையமைச்சாலும் பேர் எதிலும் சங்கர்-கணேஷ் என்றேதான் போடுகிறோம்.

கேள்வி : அப்படியா உங்கள் இருவரினதும் இந்த ஒற்றுமை என்றென்றும் நீடித்து நிலைக்க வேண்டுமென்று வாழ்துகிறோம். நீங்கள் இருவரும் இசையமைக்கும் போது யார் யார் என்ன பொறுப்புக்களை ஏற்றுச் செய்ய வேண்டும் என்று பிரித்துக் கொள்வீர்களா?

பதில் : டியூன் கோம்பேசிங் செய்யும்போது இரண்டு பேருமே ஓர் ஆர்மோனியப் பெட்டியை வச்சிட்டு பக்கத்துல பக்கத்துல இருந்து அவங்களுக்கு வர்ற ஐடியாவைப் போட்டு கொம்பேசிங் செய்வோம். ரெக்கார்டிங்கிற்குப் போகும்போது சங்கர் உள்ளே வாத்தியக் குழுவை கண்டக்ட் செய்வார். நான் கொண்ட்ரோல்ல நிற்பேன். ரீக்காடிங் செய்யும்போது நான் ஆர்க்கஸட்ராவா நிற்பேன். சங்கர் ரிக்காட் பண்ணுவார். நாங்க ரெண்டு பேருமே ஒருத்தருக்கொருத்தர் ஹெல்ப் பண்ணுவோம். வித்தியாசம் பார்க்க மாட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள் : புதிய பின்னணிப் பாடகர்கள் உங்கள் அறிமுகத்தில் யார் யார் இந்த சினிமாத்துறைக்கு வந்திருக்கிறார்கள்?

பதில : நெறயப்பேரை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஆஷா ரமணின்னு ஒரு பொண்ணு நாங்க அறிமுகப்படுத்தினதுதான். அப்புறம் சசிரேகான்னு கேள்விப்பட்டிருப்பீங்க அந்தப்பொண்ணு சமீபத்துல மஞ்சுளான்னு ஒரு பொண்ணு சும்மா வொய்ஸ் டெஸ்ட்டுக்கு வந்தது வொய்ஸ் நல்லா இருந்துது உடனே நானே அடுத்த பாட்டுக்கு சான்ஸ் கொடுத்திட்டேன்.

கேள்வி : தமிழ் மொழி அல்லாத வேறு மொழிப் படங்களுக்கு இசையமைக்கும்போது உங்களுக்கு ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டதுண்டா?

பதில் : ஒரு சிரமும் இல்லிங்க மலையாளப் பாடல்னு வந்தா மலையாளத்தை அப்படியே தமிழ்ல எழுதிக்கொள்வோம். லட்சார்ச்சனை கண்டு மயங்கும் பொழ் என்ற மலையாளப்பாடலுக்காக நெஷனல் அவார்டு கூட கிடச்சிருக்குங்க மொழி வந்து எங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருந்தது இல்ல.

கேள்வி : புதுமைகள் புதிய முயற்சிகள், ஏதாவது உங்க இசையமைப்பில செய்திருக்கிறீர்களா?

பதில் : இந்தக் கேள்விக்கு நான் ஒரு விரிவான விளக்கம் தரணும்னு நெனைக்கிறேன் டேப் போதுமா இல்லேன்னா வேற ஒண்ணு போட்டுக்குங்க அதாவது இசையைப் பொறுத்தவரை நம் முன்னோர்கள் என்னென்ன செய்யணுமோ அதெல்லாம் செய்து வச்சுட்டுத்தான் போயிருக்கிறாங்க. ஏழு ஸ்வரங்களுக்குள்ளேதான் இந்த இசை அடங்க வேண்டும். நாம் புதுசா ஸ்வரத்தைச் சேர்த்துக்க முடியாது 72 மேளகர்த்தா ராங்கள் ஏற்கனவே கண்டு பிடிச்சிருக்கிறாங்க. கர்நாடக சங்கீதமாக இருந்தால் என்ன, மெல்லிசையா இருந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இசையும் அதன் கட்டுப்பட்டிற்குள்தான் அடங்க வேண்டும்

ஒரு அடிப்படை ராகத்தை வைத்துத்தான் நாம் இசையமைக்கிறோம். அதுவே வேணும்னா சில புதிய யுக்திகளைக் கையாண்டு அதாவது சில அலங்காரங்களைக் கொடுத்துக் செய்யும்போது

புதுமை என பெயர் பெறுகிறது. முன்னயெல்லாம் ஏன் இப்போதும் கர்நாடக இசை ஓரளவுக்குத் தெரிந்தவர்களல்தான் இசையை முழுமையாக ரசிக்க, விமர்சிக்க இரண்டுமே முடியும். சினிமாப்பாட்டுன்னு எடுத்துக்கிட்டா பட்டி தொட்டி எல்லா இடத்திலேயும் அது புகுந்து கொள்கிறது. எல்லோரையும் கவர்ந்து விடுகிறதுக்குக் காரணம் அதன் கவர்ச்சிதான்.

கர்நாடக சங்கீதம் வேறு சினிமாச் சங்கீதம் வேறு அல்ல. எல்லாவற்றுக்கும் அஸ்திவாரம் கர்நாடக சங்கீதம்தான். அதனால்தான் சிலர் நினைக்கிறார்கள் அந்தப்பாட்டின் சாயல் இந்தப்பாட்டில் இருக்கிறது. எனவே சங்கர் கணேஷ் அந்தப்பாட்டை அப்படியே கொப்பி அடிச்சுப் போட்டுட்டார் என்று சொல்வார்கள். ஒரு பாட்டைப் போல் இன்னொரு பாட்டுப் போடனும்னு யாருமே நெனைச்சுப் போடுறதில்லை. ஒரே ராகத்தில் பல பாடல்கள் கொம்போசிங் செய்யும்போது அந்த ராகத்திற்குரிய கழகங்கள், அரே சாய்கள் வந்தே தீரும். அதைக் கொப்பி என்று மியூசிக்கைப் பற்றித் தெரிந்தவர்கள் ஒருபோதும் சொல்லமாட்டார்கள். எத்தனை ஆயிரம் பாடல்கள் இதுவரை சினிமாவிலே வந்துட்டுது அவ்வளவும் நாங்க கண்டுபிடிச்ச மியூஸிக் இல்லீங்க. எங்களுக்கு முன்னாலே பெரியவங்க போட்டு வச்ச மியூஸிக் தாங்க. எங்களாலே எப்படியெல்லாம் மெருகு கொடுக்க முடியுமோ அப்படியெல்லாம் செய்து கேட்கிறவங்களுக்கு புதுசுபோல தெரியற மாதிரி வித்தியாசமான முறையிலே புது ஜடியாப் போட்டு எங்களால முடிஞ்ச அளவு கஷ்டப்பட்டு செய்யிறோம். ஒரு சில பாடல்களை, உண்மையிலேயே தெரிந்து கொண்டுதான் அதாவது ஆங்கில மெட்டுக்கள், அதிலேயும் ஜனங்கள் ரொம்ப விரும்பி ரசிக்கிறாங்க என்று தெரிஞ்சு அந்த மெட்டை தமிழ்மொழியில் அந்த ஆங்கில மெட்டுக்களைப் போடுறோம். தெரிந்துதான் செய்யிறோம். ஆங்கில மொழியில் அந்தப் பாடல் தரும் ரசனைக்கும் தமிழ்மொழியில் அந்த ஆங்கிலமெட்டு தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசனைக்கும், வித்தியாசம் நிச்சயம் உண்டு இல்லிங்களா? இன்னொன்றும் சொல்கிறேன். கேளுங்க. புதுமை புதுமை என்கிறோம். இப்போ பாருங்க தனி கர்நாடக சங்கீதம் ஜனங்க மத்தியிலே இப்போ பப்புலராக்கிட்டு வருதுங்கிறதுக்கு சங்கராபரணம் படப்பாடல்களை உதாரணமாக சொல்லலாம். பார்க்கிறவங்க ஓஹோன்னு புகழ்ந்து பேசுற அளவுககு மகாதேவன் சார் அந்தப்படத்திலே செய்திருக்கார். எல்லாமே காப்பிதான். அதாவது நம்முன்னோன்கள் கண்டு பிடித்த ராகங்களின் காப்பி (சிரிக்கிறார்) எதைப்பற்றிச் சொல்கிறார் என்பது எனக்குப் புரிந்து விட்டது.

விசா : ரொம்ப நன்றி இப்படியான சிறந்த விளக்கத்தை எமது ரசிகர்களுக்குத் தந்தமைக்கு உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றி வணக்கம்.

கணே : பார்தீர்களா, எங்களை இப்போ நீங்க பிரிட்சிட்டீங்களே. நான் தான் சொன்னேனே. என் பெயர் சங்கர் கணேஷ் என்று பரவாயில்லை. நீங்கள் பிரித்தாலும் நாங்கள் பிரியமாட்டோம். உண்மையில் நன்றி சொல்ல கடமைப்பட்டவன் நான் என் மனதைத் திறந்து ரசிகர்களுக்கு என் கருத்துக்களைச் சொல்ல இந்த வாய்ப்பைத் தந்தீர்கள் மிகவும் நன்றி வணக்கம்.

பிரபல திரைப்பட இயக்குனர் மகேந்தரின் அவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி

விசால : வணக்கம் மகேந்திரன் அவர்களே.. நீங்கள் திரைப்படத்துறைக்குள் நுழையும்போது இயக்குனராக வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தீர்களா, அல்லது நடிப்பில் ஆர்வம் கொண்டு வந்தீர்களா,

மகேந் : டைரெக்டர் ஆகணும் என்றுதான் வந்தேன். ரொம்பக் கீழே இருந்துதான் மேலே வந்தேன். திடீரென்று டைரெக்டர் ஆகவில்லை நான். அஸிஸ்டன்ட் டைரக்டராக இருந்து பின்னர் ரைட்டராகி பின்னர்தான் டைரெக்டரானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசால : உங்களை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்திய படம் எது?

மகே : முள்ளும் மலரும்தான் நான் இயக்கிய முதல் படம். அதுவே எனக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தது. அதற்குப் பிறகு உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள், ஜானி, நெஞ்சத்தைக் கிள்ளாதே, இப்போது நண்டு படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது.

விசலா : உங்கள் படங்கள் எந்த அளவுக்கு உங்களுக்கு வெற்றியைத் தந்திருக்கிறது. என்று நீங்கள நினைக்கிறீரகள்.

மகே : படங்களின் வெற்றி எத்தனை நாட்கள் தியேட்டரில் ஓடுகின்றன என்பதை வைத்துத் தீர்மானிக்க முடியாது. கோமர்சியல் இயல்பான வெற்றியை நான் எதிர்பார்ப்பதில்லை. என்னுடைய படங்களை கிரிட்டிக்ஸ் தரப்பில் நல்ல விமர்சனங்களைப் பெற்றுள்ளது. அதனால் படம் நீண்ட நாள் ஓடவில்லை என்பதற்காக வருத்தமும் இல்லை. அப்படி ஓடிய படங்களுக்காக சந்தோஷமும் இல்லை. ஒரு படத்தின் தராதரம் அந்தப் படம் எத்தனை நாட்கள் ஓடுகின்றன என்பதை வைத்து எடைபோட முடியாது.

விசா : இந்தத் துறையை நீங்கள் தெரிவு செய்ததற்கு யார் உங்களுக்கு ஊக்கம் கொடுத்தார்கள். யார் காரணம்?

மகே : என்னுடைய அம்மாதான் இதற்குக் காரணம். அதாவது சினிமாத்துறைக்கு என்றில்லை painting, drawing இவைகளில் ஈடுபட ஊக்கம் தந்தார்கள். அது படிப்படியாக முன்னேறி திரைப்படத்தில் கொண்டு விட்டது. சினிமாவில் என்னை அறிமுகப்படுத்தியவர் எங்கள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான்.

விசா: ரசிகர்களின் ரசனைக் கேற்றவாறு. படங்கள் எடுப்பதை நீங்கள் விரும்புவீர்களா, அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது புதியதாகக் கொடுக்க வேண்டும் ரசிகர்களுக்கு என்று நினைப்பீர்களா,?

மகே : ரசிகர்கள் எதை ரசிக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு சாதாரண தமிழ் படங்களிலிருந்தும் சற்று வித்தியாசமாக புதுமையாக ஏதாவது செய்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று நினைப்பேன்.

விசா : பத்திரிகை விமர்சனங்கள் உங்களைப் பாதித்திருக்கிறதா?

மகே : எப்பவுமே விமர்சனங்களைப் பற்றி எனக்கு ஒரே ஒரு அபிப்பிராயம்தான் உண்டு. நல்ல படத்தை அவர்களால் குப்புறத் தள்ளவும் முடியாது. குப்புற விழுந்த படத்தை அவர்களால் தூக்கி நிமித்தவும் முடியாது. ஓடுற படத்தை இன்னும் கொஞ்சம் மேலே தூக்கப் பயன்படலாம். குப்புறவிழுந்த படத்தை ஓரேயடியாகப் புதைக்கிறதுக்கு உதவலாம் அவ்வளவுதான்.

விசா : விமர்சனங்களைப் பார்த்து விட்டுப் படங்களைப் பார்ப்பதற்கு போகிற ஜனங்களும் இருக்கிறார்கள் அல்லவா?

மகே : விமர்சனங்களைப் பார்த்துவிட்டுப் போகிற ஜனங்களும் இருக்கிறார்கள். படத்தைப் பார்த்துவிட்டு விமர்சனத்தைப் படிக்கின்றவர்களும் இருக்கிறார்கள். அது ஏன் என்றால் தங்களது அபிப்பிராயமும் விமர்சனக்காரின் கருத்தும் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு. விமர்சனத்துக்கும், படத்தைப் பார்ப்பவர்களுக்கும் சம்பந்தம் கிடையாது.

விசா : நான் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் பார்த்தேன். உலகப் புகழ் பெற்ற தயாரிப்பாளர் சத்யஜித்ரே அவர்கள் தோல்வியடைந்த படங்களை விரும்பிப் பார்ப்பாராம். இது பற்றி உங்கள் கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகே : நானும் அதைக் கேள்விப்பட்டேன். சத்யஜித்ரே போன்ற சிறந்த படைப்பாளர் மற்றவர்களின் தோல்வியைப் பார்த்துத்தான் தனது படங்களின் வெற்றியை மானிக்கிறார் என்று அர்த்தம் கொள்ள முடியாது. அப்படிப் பார்த்தால் ஷோலே படம் பெரும் வெற்றியைக் கொடுத்தது. அதனால் இப்படியான படம் தான் ஜனங்களுக்குப் பிடிக்கும் என்று ஷோலே மாதிரிப் படம் நிச்சயம் எடுக்க மாட்டார். ஒரு நல்ல படம் எதனால் தோல்வியடைந்தது என்று நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்கு அவர் பார்த்திருக்கலாம்.

விசா : நீங்கள் எப்படியான படங்களைப் பார்ப்பீர்கள்?

மகே : நான் படங்களே பார்ப்பது இல்லை. பார்க்கக் கூடாதென்ற திமிர் என்று நினைத்து விடாதீர்கள். பார்த்தேன் என்றால் அந்த சம்பவங்கள். அந்த டயலொக் இவைகள் என் மைன்ட்ல் பதிந்திடும். என்னுடைய individuality இருக்கு. பாருங்க அது போயிடும். நான் grammar படிச்சதில்லை. But I am writing dialogue. நான் film institute ல படிச்சதில்ல but I am directing films.

விசா : உங்களுக்கு கீழே வேலை செய்பவர்கள் யாராவது உங்களுக்கு ஆலோசனை கூறினால் அதை ஏற்றுக்கொள்வீர்களா?

மகே : நிச்சயம் ஏற்றுக்கொள்வேன். என் குழந்தைகள கூட எனது படங்களைப்பார்த்து விமர்சனம் செய்வார்கள். எந்த சீன் கண்றாவியா இருந்தது எந்தசீன் நல்லா இருந்தது என்று. அவர்களுடைய கருத்துக்களையும நான் ஏத்துப்பேன். ஏன்னைப் பொயின்ட் பொயின்ட்டா கிழிப்பாங்க என் கொழந்தைங்க. அவங்களுக்கே அந்த ஒப்பசுனிட்டி கொடுக்கும்போது என் கீழே வேல செய்யிறவங்க சொல்றதைக்'கேக்காம இருப்பேனா?

விசா : புதுமுகங்களை வைத்துப் படம் எடுப்பது சிரமமானதா? அல்லது பிரபல நட்சத்திரங்களை வைத்துப் படம் எடுப்பது சிரமமானதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகே : எல்லாருக்கும் மொதப்படத்தில அவங்களுக்குப் பெயர் புதுமுகம்தான். புதுமுகம்தான் அப்புறம் நட்சத்திர அந்தஸ்த்தை அடையிறாங்க. புதுமுகங்கள் புதுமுகங்களாக இருக்கும்வரை சிரமங்கள் குறைவு. பழைய முகங்கள் ஆகிவிட்டபிறகுதான் ப்ரொப்ளம்.

விசா : முன்பெல்லாம் யார் நடித்த படம் என்று பார்த்து நடிகர்களுக்காகப் படம் பார்த்தார்கள். இப்போது யார் இயக்கிய படம எனறு பார்த்து இயக்குனர்களுக்காகப் படம் பார்க்கப் போகிறார்கள். ரசிகர்களின் ரசனையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லலாமா?

மகே : அந்தக் காலத்திலும் ஒளவையார் படம்வந்தது. K.B. சுந்தராம்பாள் ஒரு கிழவி கதாநாயகியாக நடிச்ச படம் ஓடல்லியா? தேவதாஸ் படம் வந்தது. நாகேஸ்வரராவ் யாரென்று தமிழ் ரசிகர்களுக்கு தெரியவே தெரியாது. படம் ஓடல்லியா? படம் ஓடறதுக்கும் யார் நடிச்சாங்க என்கிறதுக்கும் சம்பந்தமே கிடையாது. இடைக்காலத்தில் அப்படி ஒரு சில படங்கள் வந்தாலும் அந்த நட்சத்திர அந்தஸ்த்தைப் பெற்ற நடிகர்கள் நடிச்ச படம் கூட தோல்வியடைந்திருக்கிறது. அன்னிக்கும் இன்னிக்கும் ரசிகர்கள் அப்படியேதான் இருக்கிறாங்க. நல்ல படங்கள் யார் நடிச்சிருந்தாலும் பார்ப்பாங்க.

விசா : நன்றி மகேந்திரன் அவர்களே உங்கள் பொன்னான நேரத்தை எமக்காக ஒதுக்கித் தங்களின் மேலான கருத்துக்களை எம்மோடு பகிரந்து கொணடமைக்கு இலங்கை வானொலியின் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேட்டி முடிவடைந்ததும் என்னிடம் உங்கள் சொந்த ஊர் எது? உங்கள் தமிழைப் பார்த்தால் தஞ்சைத் தமிழ்போல் இருக்கிறதே என்றார். நான் புகுந்த இடம் தஞ்சை என்றேன் சிரித்துக்கொண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயக்குனர் மகேந்திரன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்த போது.

இசைஞானி இளையராஜாவை 1977ம் ஆண்டு எஸ்.வி.சேகரின் ஒலிப்பதிவுக் கலையகத்தில் வைத்து எடுத்த சந்திப்பு நிகழ்ச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னக்கிளி பத்ரகாளி ஆகிய படங்களின் பாடல்கள் மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்த மகிழ்ச்சியில் இருந்த வேளை நாம் அவரைச் சந்தித்தோம்.

விசாலா : மச்சானைப் பாத்திங்களா என்கின்ற பாடல் இளையராஜான்னு ஒரு புதிய சாதனை படைத்த இசையமைப்பாளரைப் பாத்தீங்களா என்று எல்லோரையும் கேட்க வைத்தது அந்தப் பாடல். உங்கள் சொந்தப் பெயரே இளையராஜாதானா அல்லது சினிமாவுக்காக மாற்றிக்கொண்ட பெயரா?

இளைய : நீங்க சொன்னது கரெக்ட்தான். சினிமாவுக்காக மாத்திக்கொண்ட பேர்தான் இளையராஜா. ஏற்கனவே ஏ.எம். ராஜா என்பவர் மியூசிக் டைரக்டராக இருப்பதால் பஞ்சு அருணாசலம் அவர்கள் ஜூனியர் ராஜா என்பதன் தமிழாக்கமாக இளையராஜா என்று வைத்துக கொள்ளும்படி கூறினார். எனக்கும் அந்தப்பெயர் பிடித்திருந்த காரணத்தால் அந்தப்பெயரையே வைத்துக்கொண்டேன்.

விசா : அன்னக்கிளிக்குப்பிறகு உங்கள் இசையமைப்பில் எத்தனை படங்கள் வெளிவந்திருக்கின்றன? இப்போது எத்தனை படங்கள் இசையமைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

இளைய : இதுவரை ஆறுபடங்கள் வெளிவந்துவிட்டன. இசையமைத்துக் கொண்டிருக்கும் படங்கள் நிறைய இருக்கின்றன.

விசா : இசையமைப்பாளராக ஆவதற்கு முன்னால் என்னவாக இருந்தீர்கள்?

இளைய : பல மியூஸிக் டைரக்டர்களிடம் இன்ஸ்ருமென்ட்ஸ் வாசித்துக்கொண்டிருந்தேன்.

விசா : இந்தத் துறைக்கு வருவதற்கு யார் யார் காரணமாக இருந்தார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய: : மியூஸிக் டைரக்டர் ஜி.கே.வெங்கடேஷ் பஞ்சு அருணாசலம் அன்னக்கிளி கதாசிரியர் செல்வராஜ் இவர்கள்தான் காரணம் எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அளவுக்கு நான் வெற்றி பெறச் செய்த எனது அன்பான ரசிகர்கள்தான் காரணம்.

விசா : ஒரு பாடல் எந்த அளவுக்கு மக்களிடையே பிரபலமடைந்திருக்கிறது என்பதை எப்படி அறிந்து கொள்கிறீர்கள்?

இளைய : வானொலியில் பாடல் அடிக்கடி ஒலிபரப்பாகும்போதும் இது தவிர வெளியூர்களில் கச்சேரி செய்யும் போது துண்டுச்சீட்டுகள் வரும். அது எந்தப் பாடலாக இருக்குமென்றால் மச்சானைப்பாத்தீங்களா அல்லது வாங்கோன்னா இந்த மாதிரிப்பாடலாகத்தான் இருக்கும்.

விசா : ஜனரஞ்சகமான பாடல் என்றால் இந்தமாதிரியான பாடல்கள்தான் என்று கூறலாமா?

இளைய : ஜனங்க விரும்புற மாதிரி இருந்தா அது ஜனரஞ்சகமான பாடல்தான்.

பாட்டு கேக்கிறதுக்கு இனிமையாக இருக்கணும். டியூனும் சிம்பிளா இருக்கணும் எவ்வளவுக்கு எவ்வளவு சிம்பிளான வேர்ட்ஸும் சிம்பிளான டியூனும் அமைகிறதோ அந்த அளவுக்கு பாட்டும் பொப்புலராகும் என்பது என் கருத்து.

விசா : ஒரு பாடலுக்கு எத்தனை விதமான டியூன் போட்டுப்பார்பீங்க?

இளைய : நாலைந்து டியூன் போட்டு இயக்குனரிடம் காண்பிப்போம். சிட்டுவேஷனுக்குத் தகுந்தமாதிரி எது பொருந்துகிறதோ அதை அவர் தெரிந்தெடுப்பார். அதன் பிறகு பாடலாசிரியரை வரவழைத்துப் பாடல் எழுதச் சொல்லுவொம். அதன்பின்னர் இந்தப் பாட்டை யார் பாடினா நல்லா இருக்கும் என்று டிஸ்கஸ் பண்ணுவோம். என்னுடைய சஜெஷன் பெரும்பாலும் கரெக்ட்டாத்தான் இருக்கும் அதையே ஏற்றுக்கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா : இசையமைப்பாளராக வருவதற்கு முன்னால் யாருடைய இசையை விரும்பி ரசிப்பீர்கள்?

இளைய : குறிப்பிட்டு இன்னார் என்று சொல்ல முடியாவிட்டாலும் எனக்கு விஸ்வநாதன் சார் மியூஸிக் ரொம்ப பிடிக்கும். அதேபோல நல்ல பாடல்கள் யாருடைய இசையானாலும் ரசிப்பேன்.

விசா : மாறிக்கொண்டு வரும் ரசனைக்கேற்றவாறு இசையில் மாற்றம் வேண்டும் என்று நினைக்கிறீர்களா? இல்லை இந்த ரசனை மீண்டும் பழமைக்கே திரும்பும் என்று எதிர்பார்க்கிறீரகளா?

இளைய : ஜனங்களின் ரசனை எப்படி மாறும் என்று இப்போது சொல்லமுடியாது.

ரசிகர்கள் இப்படித்தான் வேண்டும் என்று கேட்டு நாங்கள் கொம்போஸிங் செய்வதில்லை. எங்களுக்கு என்ன தோணுதோ அப்படிச்செய்துகொண்டு போகிறோம் பாடல் பிரபலமாவதும் ஆகாததும் அந்தப் பாடலின் தலையெழுத்து. ஒவ்வொரு பாடலையும் ரெக்கோர்டிங் செய்யும்போது அந்தப்பாடல் பொப்புலர் ஆகவேண்டும் என்று நினைத்துக்கொண்டு ரொம்ப ஸ்ரெயின் எடுத்துத்தான் செய்கிறோம்.

விசா : பழைய பாடல்களைப்போல் இப்போது வரும் புதிய பாடல்கள் இனிமையாக இல்லை என்று சிலர் சொல்லுகிறார்களே அதுபற்றி உங்கள் அபிப்பிராயம்?

இளைய : நிச்சயமாக இல்லை எனறுதான் நானும் கூறுகிறேன். ஏனென்றால் அந்தக்காலத்தில் ஒரு வருடத்திற்கு ஆறு படம் ஏழ படம் ரிலீசாச்சுன்னா பெரிய சமாச்சாரம். பாடல் கொம்போஸிங் கிட்டத்தட்ட ஒரு மாதம் கூட நடக்கும். ரெக்காடிங் இரண்டுநாள் மூன்றுநாள் நடக்கும். இப்போதெல்லாம் பாஸ்ட் வேர்க் இன்னிக்கு பாடல் ரெக்கார்டிங்னா நாளைக்கு சூட்டிங் நாளைன்னைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் ரிலீஸ் ஆயிடுது. அந்த நாளில் எடுத்த சிரமங்கள் கவனங்கள் இப்போ முடியாது அதேநேரம் சிட்டுவேஷன் ஒரே மாதிரியாதான் இருக்கு. ஒரு டுயட் ஒரு தாலாட்டு ஒரு சோகம் இப்படியேதான் செல்கிறது.

விசா : நீங்கள் அறிமுகப்படுததிய புதுமுகங்கள் யார் யார?

இளைய : புதியகுரல்கள் வருவதை நான் விரும்புகிறேன். முடிந்தவரை புதியவர்களுக்கு வாய்ப்பளித்து வருகிறேன். குறிப்பிட்டுச்சொல்வதானால் மலேசியா வாசுதேவன் சுஜாதா பூரணி ஆகியோரைச் சொல்லலாம்.

விசா : எங்கள் இலங்கையின் பொப்பிசைப் பாடல்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இளைய : சின்னமாமியே என்ற பொப்பிசைப் பாடலை எங்கள் கச்சேரிகளில் பாடிக்கொண்டு வருகிறோம். எங்கள் குருப்பில மலேசியா வாசுதேவன் பாடுகிறார். அது பைலா சோங் வகையைச்சேர்ந்தது. இசை ரொம்ப சிம்பினா இருக்கு.

விசா : நன்றி இளையராஜா அவர்களே உங்கள் சிரமத்தைப் பாராமல் இங்கு வந்து எமக்கு இந்தப் பேட்டி நிகழ்ச்சியைத் தந்தமைக்கு இலங்கை வானொலி சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைய : என்னை இலங்கை வானொலி நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க முயற்சி எடுத்த உங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1980ல் இசைஞானி இளையராஜா இலங்கை வந்திருந்தபோது இளையராஜாவுடன் எம்.ஏ. ஹமீது

மலையாள மொழியை நான் 1961 ஆம் ஆண்டு கேரளத்திற்கு சென்று ஐந்து மாதங்கள் தங்கியிருந்தபோது கற்றுக் கொண்டேன். அதன் பலன் வீண்போகவில்லை. எமது ஆசிய சேவையில் கருணாகரன், லதிகா விவேகாந்தன் என்று இரு மலையாள அறிவிப்பாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் நிகழ்ச்சிக்கு வரமுடியாதவிடத்தில் அந்த மலையாள நிகழ்ச்சிகளை நான் தொகுத்து வழங்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

மலையாளத் திரையுலகில் பல வெற்றிப் படங்களுக்கு இசை வழங்கிய பிரபல இசையமைப்பாளர் எம்.ரவீந்திரன் அவர்களை ஒரு முறை நானும் என் இளைய மகள் ஹம்ராவும் சென்னை சென்றிருந்தபோது அவரது இல்லத்தில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

எங்கள் இருவரையும் பார்த்த இசையமைப்பாளர் ரவீந்திரனும் அவரது மனைவியான ஷோபாவும் மலந்த முகத்தோடு நான்தான் ரவீந்திரன் என்று என் மகள் ஹம்ராவைப் பார்த்துக் கூறினார்கள். உடனே என் மகள் 'நான் அல்ல விசாலாட்சி ஹமீது இவர்தான் அவர்". நான் அவரது மகள் என்றார். இருவரது முகத்திலும் ஆச்சரியம் வெளிப்பட்டது. நாங்கள் இதுவரை காலமும் விசாலாட்சி ஹமீது என்பவர் இள வயதுப் பெண் என்றல்லவா நினைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தோம். உங்கள் குரலையும் ஆளையும் பார்த்தால் நம்பவே முடியாமல் இருக்கிறது என்றார்கள்.

ஒவ்வொரு முறை இந்தியா செல்லும்போதும் நானும் என் கணவரும் திரை உலகையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு வருவோம். அதனால் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், கவிஞர்கள், நடிகர்கள் இப்படிப் பலரையும் சந்திப்போது. சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்களது பேட்டி நிகழ்ச்சியைப் பதிவு செய்து கொண்டு வருவோம். அவ்வாறு பேட்டி கண்டவர்களில் இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர், இயக்குனர் மகேந்திரன், இசையமைப்பாளர்கள் இளையராஜா, சங்கர் கணேஷ், கவிஞர் பஞ்சு அருணாசலம், நடிகை மனோரமா நடிகர் எஸ்.ஏ.அசோகன ஆகியோரைக் குறிப்பிட்டுச் செல்லலாம். இவற்றில் சில பேட்டி நிகழ்ச்சிகள் எமது ஒலிப்பதிவுக் களஞ்சியத்தில் இப்போதும் இருக்கிறது.

சானாவின் காலத்தில் நாடகங்களில் பங்குபற்றிய கலைஞர்களில் இன்று வரை தொடர்ந்து அறிவிப்பாளர்களாக தங்கள் சேவையைச் வழங்கி வருகிறார்கள். ராஜேஸ்வரி சண்முகம், சற்சொரூபவதி நாதன், ஜோக்கிம் பெர்னாண்டோ ஆகியோர். பழமையின் சிறப்புகளையும் புதுமையின் துடிப்புக்களையும் சேர்த்து தங்கள் திறமையின் வெளிப்பாடுகளாக நிகழ்ச்சிகளிலே காட்டி வருகிறார்கள். நிரந்தர அறிவிப்பாளர்களாக சந்திரமோகன், ஜெயகிருஷ்ணா கணேஷ்வரன், ஜெயலக்ஷ்மி, நாகபூஷணி, கலிஸ்டா லூக்கஸ் ஆகியோர் தங்களுக்கென்று ஒவ்வொரும் தனித்துவமான பாணியை கையாண்டு நேயர்களை மகிழ்ச்சிப்படுத்தி வருகிறார்கள். அறிவிப்பாளர் திலகமாய் அன்றும் இன்னும் என்றும் பிரகாசித்திக் கொண்டிருக்கும் அன்புச் சகோதரர் அப்துல் ஹமீட் உலகின் சிறந்த அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு, தேமதூரத் தமிழோசையை உலகெலாம் பரவும் வகை செய்து இலங்கை வானொலிக்கும் இலங்கைக்கும், பெருமை சேர்த்து வருகிறார். இவர்கள் எல்லோரும் நம்முடன் இருப்பதால் மெல்லத் தமிழ் இனி வாழும் என்ற நம்பிக்கையை உண்டாக்குகிறது.

இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் நிதி உதவியுடன் தமிழ்த்திரையுலகின் கலைஞர்களை வரவழைத்து மேடை நிகழ்ச்சிகள் நடத்திவரும் வழக்கம் அப்போது இருந்தது. எழுத்தாளர் மானா மக்கீன் நமது வர்த்தக நிறுவனத்தின் அனுசரணையில் ஒர இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு யோசனையை முன் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கணவரும் அந்த யோசனையை ஏற்று, இதுவரை இலங்கைக்கு வராத ஒரு பாடகரைத்தான் நாம் அழைக்க வேண்டும் என்று கூறி, பாடகர் ஜெயசந்திரனை அழைப்பதற்குத் தீர்மானித்தோம். .

ஜெயசந்திரன் மலையாளத்தில் நல்ல பிரபலம் பெற்றவர். தமிழ்த் திரைப்படங்களிலும் பாடியிருக்கிறார், ஆனால் நம் நாட்டு இரசிகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அவரால் பாட முடியுமா? என்றொரு சந்தேகத்தைக் கிளப்பினார் மானா மக்கீன்.

பரவாயில்லை. அவரது பாடல்களை ரசிக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள். அப்படியானவர்கள் நல்ல கௌரவமானவர்கள் வந்தாலே போதும். இதில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் நாம் இசை நிகழ்ச்சி நடத்தப் போவதில்லையே. திறமையான கலைஞனை நாம் கௌரவப்படுத்துவதாக அமைந்தால் போதுமானது. அவரோடு வரும் பெண் பாடகியை அவரே தெரிவு செய்யட்டும் என்னு என் கணவர் கூற அதுவே தீர்மானமாக நானும் என் கணவரும் சென்னை சென்று ஜெயச்சந்திரனை அவரது வீட்டில் சந்தித்து நிக்ழ்ச்சி பற்றி உரையாடினோம். அமைதியான பேச்சு, மலையாளம் கலந்த தமிழ் ஆனால், அவர் பாடிய பாடல்களைக் கேட்டால் ஆச்சரியமாக இருக்கும். தமிழ்மொழியின் உச்சரிப்பு அத்தனை அற்புதமாக இருக்கும். அவர் சம்மதம் தெரிவித்தார். பி.எஸ்.சசிரேகாவை தன்னுடன் இணைந்து பாட அழைத்து வருவதாகவும் தெரிவித்தார். பி.எஸ்.சசிரோகா அப்போதுதான் ஒரிரு படங்களில் இளையராஜாவின் இசையில் பாடி அறிமுகமாகிவரும் பாடகி. இசை நிகழ்ச்சிக்கான தேதியை நிச்சியம் செய்து கொண்டு வந்தோம். கொழும்பில் இரண்டு நிகழ்ச்சிகளும், கண்டியில் ஒரு நிகழ்ச்சியுமாக மூன்று நிகழ்ச்சிகள் நடந்தன. அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா நிகழ்ச்சிகளையும் அறிவிப்பாளர் சுகுமார் ஒரு நிகழ்ச்சியையும் மிகவும் சிறப்பாகக் தொகுத்து வழங்கினார்கள். யாராக இருந்தாலும் ஒரு முறை அறிமுகமாகிவிட்டால் அவர்கள் அந்த நிமிஷத்திலிருந்து உற்ற நண்பர்களாகிவிடுவார்கள். என் கணவரின் சிறப்பான குணங்களில் அதுவும் ஒன்று. ஜெயச்சந்திரனும் சசிரோகாலும் நம்நாட்டு ரசிகர்களின் ரசனையைப் புரிந்து கொண்டு, எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்தும் வகையிலான பாடல்களைப் பாடி கரகோஷங்களைப் பெற்றுக் கொண்டனர். அழகி ஒருத்தி இளனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிறா கொழும்பு வீதியிலே என்ற பாடல் அனைவரையும் கைத்தாளம் போடவைத்தது.



ஒருநாள் இலங்கை வானொலியில் இசைத்தட்டுக் களஞ்சியத்தைப் பார்ப்பதற்கு சசிரோகாவையும், ஜெயச்சந்திரனையும் அழைத்துச் சென்றோம், அங்கே ஒரு இசைத்தட்டைப் போட்டுக் காட்டி இந்தப் பாடல் எஸ்.பி.சைலஜா என்று இசைத்தட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இது ஷைலஜாவின்குரல் போல் இல்லை. இந்தப் பாடலில் வரும் பெண் குரல் யாருடையது என்று தெரியுமா என்று கேட்டோம். அப்போது சசிரேகா அவர்தான் அந்தப் பாடலை கே.ஜே.ஜேசுதாஸ் அவர்களுடன் பாடியதாகக் குறிப்பிட்டார். அன்று அந்த இசைத்தட்டில் இருந்த பெயர் குழப்பத்தையும் தீர்க்க முடிந்தது. இதே போல் எம்.எஸ்.ராஜேஸ்வரி இலங்கை வந்த போதும் இதேபோன்ற சம்பவம் நடந்தது. வாழ்க்கை திரைப்படத்தின் இசைத்தட்டுகளில் பாடியவர்களின் பெயர் இல்லாதினால் அந்தப் பாடல்களை நடிகை வையந்திமாலா பாடியதாகவே கூறி பாடல்களை ஒலிபர்ப்பி வந்தோம். அவர் சொன்னபிறகுதான் அந்தப்பாடல்களை எம்.எஸ். ராஜேஸ்வரிதான் பாடியிருக்கிறார் என்பதை அறிய முடிந்தது.

எந்த இசைக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்தாலும் எமது இலங்கை வானொலி இசைத்தட்டுக் களஞ்சியத்தைப் பார்வையிட்டு வியந்து பாராட்டாமல் சென்றதில்லை. இசைஞானி இளையராஜாவை முதன் முதலாக இலங்கை வானொலிக்கு நாம் அழைத்துச் சென்றபோது அவர் பாடிய முதல் டைட்டில் பாடலான சோளம் விதைக்கயிலே பாடலை ஒலிபரப்பி இசைத்தட்டுக் களஞ்சியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை ஆரவாரமாக வரவேற்றார் அன்புச் சகோதர் அப்துல் ஹமீட் அவர்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் தமிழுக்கு நிறமுண்டு. புத்தகம் வெளியீட்டுத் தினத்தன்று இலங்கை வானொலி சர்வசேத ஒலிபரப்பில் எங்கள் நிறுவனத்தின் அனுசரணையில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தோம். கடைசி நேரத்தில்தான் புத்தகம் கையில் கிடைத்தது. 3 நாட்கள்தான் இருந்தன. அந்தக் கவிதைத் தொகுதியைப் பற்றிய விமர்சனமாக அந்த நிகழ்ச்சியைச் செய்ய வேண்டும் என்று விரும்பினேன். என் கணவருக்கும் கவிதைகளில் ஈடுபாடு அதிகம். அதனால் அவருக்குப் பிடித்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அவர் விமர்சனம் எழுதினார். இருவரும் சேர்ந்து நிகழ்ச்சிகான பிரதியை இரண்டே நாளில் எழுதி விட்டோம்.

அவரது உதவி இல்லை யென்றால் குறிப்பிட்ட தினத்தில் நிகழ்ச்சியை ஒலிபரப்ப முடியாமல் போயிருக்கும். நிகழ்ச்சியைக் கேட்டுவிட்டுக் கவிஞர் பெரு மகிழ்ச்சி அடைந்தார். "எண்ணங்களாலே சில வண்ணங்கள்" என்ற பெயரில் அந்த நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது.



கவிப்பேரரசு வைரமுத்துவை அவரது இல்லத்தில் சந்தித்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கர் கணேஷ் இசையமைப்பில் பாடியபோது
கணேஷ் ஹமீது விசாலாட்சி சங்கர்

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர் நந்தி காட்டிடத்துக் கண்டவன்
ஏவன செய்யும் இலங்கிழையோனே.

வானம் நமது தந்தை பூமி நமது அன்னை உலகம் நமது வீடு உயிர்கள் நமது உறவு.

பூவை செங்குட்டுவன் எழுதியிருக்கிறார் இப்படி ஒரு பாடலை தாகம் திரைப்படத்திற்காக.

பூமியில் பிறந்த நாம் அனைவரும் இதனை உணர்ந்தாலே போதுமானது. மனிதர்கள் நாம் எல்லோரும் ஓர் இனம் என்ற உணர்வு தானாக உண்டாகும். பெற்ற தாய் தன் கருவறையில் பத்து மாதங்கள் தான் சுமக்கின்றாள். ஆனால் பூமித்தாயானவள் வாழ்நாள் முழுவதும் நம்மை சுமக்கிறாள். அதனால்தான் ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவருகின்றபோது பூமித்தாயை வணங்கியபடியே இந்தப் பூவுலகில் பிரவேசிக்கின்றது

"இதுவரை என்னை என் அன்னை தாங்கினாள். இனிமேல் என்னைத் தாங்கப் போகிறவன் நீதான். இனிமேல் உன் மடியில்தான் கிடந்து, தவழ்ந்து எழுந்து விழுந்து ஓடி ஆடிக்குதித்து விளையாடப் போகிறேன். என்னை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். தாயே" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குழந்தை கேட்பதுபோல் அமைந்ததுதான். அதன் தத்துவம். மனிதனின் பிறப்பு என்னும் நாடகத்தின் ஆரம்பக்காட்சி அது.

மேடையில் நடிக்கப் போகும் முன்னர் கலைஞர்கள், மேடையைத் தொட்டு வணங்கி விட்டுப் பின்னர் மேடையேறுவதைப் பார்த்திருப்பீர்கள். பூமி என்னும் நாடக மேடையில் நடிப்பதற்கு வந்து விட்டோம். இந்த மேடைக்கு முதலில் குனிந்து வணக்கம் செலுத்திவிட்டுத்தான் நாம் நிமிர்ந்து நிற்கிறோம். உயிர்களைக் காக்க வேண்டியவள் பூமாதேவி. பொறுமைக்கு உதாரணமான பூமித்தாய்க்கு எப்படி இத்தனை கோபம் வந்தது. இந்தக் குமுறலுக்குக் காரணம் என்ன?. கீதையிலே சொல்லபட்டிருப்பது போல், தர்மங்கள் தோற்றுப் போவதும். அதர்தமங்கள் வென்று வருவதும் காணக்கூடாகக் காண்கிறோம். உறவு முறைகள் பிறழ்வதும், வன்முறைகள் வளர்ந்து பெருவதும். பார்த்துக் கொண்டு வருகிறோம். மனிதனுக்கு அறிவைப் புகட்ட வேண்டிய ஊடகங்கள், அழிவை ஏற்படுத்தும் வழிவகைகளைக் காணபிக்கின்றன. மனித இனத்துக்குள்ளேயே மதச்சண்டைகள், ஜாதிச்சண்டைகள் இவைகள் எல்லாம் பூமித்தாயைக் கொந்தளிக்கச் செய்திருக்கின்றன., அன்னையின் சீற்றம் எப்போதாவது இருந்தாற்போல் வரும் அது பாரிய அளவில் அமைந்து விடுகிறது.

பிள்ளைகள் ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டையிட்டு அடிபட்டுக் கொள்வார்கள். அப்போது தாய்க்கு கோபம் வந்தால் அவர்களைத் தானும் சேர்ந்து அடிப்பாள். சண்டை நின்றுவிடும். பூமித்தாயின் இந்தக் கோமும் அப்படியானதுதான். இனிமேலாவது வேறுபாடு இன்றி, சண்டைகள் ஓய்ந்து எல்லோரும் ஓர் இனம், ஓர் தாய் மக்கள் என்று வாழ இந்தக் கடல் கொந்தளிப்பு மனித இனத்திற்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். இந்தப் பாரிய இயற்கை அனர்த்ததால் பலியானவர்களில் சிறுவர்களும், பெண்களும்தான் அதிகம் என்று கூறுகிறார்கள். ஒருவேளை அநியாயங்களும், அக்கிரமங்களும் நிறைந்த இந்தப் பொல்லாத உலகத்தில் நீங்கள் இனிமேலும் கஷ்டப்பட வேண்டாம் என்று அன்னை அவர்களைத் தன்னோடு அரவணைத்து அழைத்துக் கொண்டாளோ என்னவோ. கடல் கொந்தளிப்பால் நாட்டில் ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர் பூவையர் பூங்கா மகளிர் கருத்தரங்கு நிகழ்ச்சி ஒன்றிலே எனது கருத்தாகத் தெரிவிக்கப்பட்டது இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1978 ல் நடிகை மனோரமாவை ஒரு படப்பிடிப்பிடிப்பின் இடைவேளையில் சந்தித்தபோது.



சொந்தத் தொழில் என்று ஆரம்பித்தபோதும், கலைத்துறையில் உள்ள நண்பர்களை என் கணவர் மறந்துவிடவில்லை புகழ்பெற்ற வானொலி நாடகங்களை எழுதிப் பிரபலம் பெற்ற என்.எஸ்.எம். ராமையா அவர்களையும், நகைச்சுவை பாத்திரங்களில் சக்கைபோடு போட்ட காலஞ்சென்ற ஓ.நாகூர் என்பவரையும் தனது வியாபாரத்தாபனத்தில் வேலை போட்டுக் கொடுத்தார். மிகவும் பொறுப்புள்ள பதவியான கணக்கப்பிள்ளைப் பதவியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.எஸ்.எம்.ராமாயைவிடம் ஒப்படைத்தார். மிகவும் நம்பிக்கைக்குரிய வேலையான பணம் கொடுக்கல் வாங்கல் முதலிய வேலைகளுக்கு வெளியே சென்றுவரும் பொறுப்பை ஓ.நாகூரிடம் ஒப்படைத்தார். எஸ்டேட்டில் வசித்து வந்த அவரது குடும்பத்தை கொழும்புக்கு வரவழைத்து நாங்கள் வாடகைக்கு தங்கியிருந்த வீட்டின் கீழ்ப்பகுதியில் வசிப்பதற்கு இடமும் கொடுத்தார். இவ்வாறு எவருக்கும் பாரபட்சம் காட்டாமல் உதவி செய்யக் கூடியவர் என் கணவர். அது மாத்திரமன்றி எங்கள் நிறுவனத்தில் எல்லா இனத்தவர்களும் எல்லா மதத்தவர்களும் வேலை செய்கிறார்கள். அவரவர்களின் பண்டிகை தினங்கள் வரும்போது அவர்களுக்கு சிறப்புச் சலுகைப் பணம் வழங்கும் வழக்கம் நமது நிறுவனத்தின் ஒரு சிறப்பு அம்சம்

அமீது என்ற ஆலவிருட்சத்தின் நிழலில் பல குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. எல்லோருக்கும் அள்ளி வழங்கும் இளகிய இதயம் படைத்தவருக்கு அந்த இதயத்திலேயே நோயைக் கொடுத்து விட்டான் இறைவன்.

கொடுப்பதற்கு ஒன்றும் இல்லாதவிடத்து தனது இதயத்தையம் கொடுத்து விடுவாரோ என்று அந்த இறைவன் நினைத்தானோ என்னவோ?

கடைசியில் இருதய சத்திரசிகிச்சைக்காகப் பணம் தேவைப்பட்டபோது கடனாக உதவுவதற்கு ஒரு உறவினர்கூட முன்வரவில்லை. எல்லோரும் சென்னைக்கு வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். பிரார்த்தனை செய்தார்கள் சிகிச்சை பலனளிக்கவில்லை. அவரது கடைசி விருப்பத்தின்படி அவரது ஊரிலேயே அவர் பிறந்த மண்ணிலேயே அடக்கம் செய்து விட்டு நானும் என் பிள்ளைகளும் இலங்கைக்கு அனாதரவாக திரும்பினோம். இரு வேறு மதங்களில் இணைந்த குடும்பம் இப்போது நான்கு மதங்களாக விரிவடைந்து கிளைவிட்டு நிற்கிறது. இருவேறு மொழிகளால் இணைந்த குடும்பம் இப்போது நான்கு மொழிகளாக வேர்கள் விட்டு கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. இலங்கை, இந்தியா, மலேசியா அமெரிக்கா ஆகிய, நான்கு நாடுகளையும் இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய நான்கு மதங்களையும் இணைத்து ஒரு சர்வதேசக் குடும்பமாக விளங்குகின்றது எங்கள் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் காலத்திலும் ஒரு நிரந்தர அறிவிப்பாளரின் பதவிக்கு நான் விண்ணப்பித்ததில்லை ஆசைப்பட்டதில்லை. பாராட்டு விழா, பரிசளிப்பு விழா இவைகளில் அக்கறை காட்டியதில்லை. இலங்கை வானொலியின் 75 வருட பவளவிழாவின்போது பழைய கலைஞர் என்ற வகையில் கௌரவிக்கப்பட்டேன். எனது திறமைகளுக்கெல்லாம் சூத்திரதாரி எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே. எல்லாப் புகழும் அந்த இறைவனுக்கே. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவள் நான்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லை துஞ்சித்தது
நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே.

திருமூலரின் திருமந்திரமும் படித்திருக்கிறார். திருக்குர்ஆனையும் மனப்பாடம் செய்துள்ளார். புத்தனின் தம்மபோதனையும் அறிந்திருக்கிறார். பைபிளையும் கற்று வைத்திருக்கிறார். அவருக்கு எல்லா மதமும் சம்மதம். பணம் சம்பாதித்த காலத்தில் நிறைய அள்ளி அள்ளிக் கொடுத்தார். பாத்திரமறிந்து பிச்சை போடு என்று பழமொழி இருக்கிறது. ஆனால், அவர் நல்லவன் கெட்டவன், நண்பர்கள் என்று எல்லோருக்கும் வாரி வழங்கினார். எல்லாவற்றையும் கற்றறிந்து தர்மசிந்தனையோடு வாழ்ந்து வந்தவர் வரவு செலவு கணக்குப் பார்க்க மாத்திரம் கற்றுக் கொள்ள மறந்துவிட்டார். அவரது தராளமனப்பான்மை என்னால் தடுத்து நிறுத்த முடியாத ஒன்றாகிவிட்டது.

"நான் தனியாக இருந்தபோது இறைவன் எனக்கு மாத்திரம் போதுமானதைத் தந்தான். நான் குடும்பமாக வாழ்ந்தபோது என் குடும்பத்திற்காக மேலும் இறைவன் தந்தான். நான் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் எனக்கு மேலும் மேலும் தந்து கொண்டிருக்கிறான். பயப்படாதே ஒருபோதும் நம்மை அந்த இறைவன் கைவிடமாட்டான் என்று ஆறுதல் கூறுவார்".

தனக்கு மிஞ்சித்தான் தானமும் தருமமும் என்று சொல்வார்கள்.

எனது கணவர் வித்தியாசமானவர். தான தருமங்களுக்குப் போக மிஞ்சியதுதான் நமக்கு என்ற கொள்கையுடையவர். வசதி வந்தவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நமக்கு ஒரு வீடு என்றுதான் எல்லோரும் நினைப்பார்கள். ஆனால் இவரோ வீடு கட்டுவதற்கு முன் உடப்பு என்ற கிராமத்தில் உடைந்து விழுகின்ற நிலையில் இருந்த பள்ளிவாசலைப் புதிதாக கட்டிக் கொடுத்த புண்ணியத்தை முதலில் பெற்றுக் கொண்டார்.

இந்தப் புண்ணிய காரியத்தைச் செய்வதற்கு உடப்பு கிராமத்தைத் தெரிவு செய்தமைக்கு ஏதும் காரணம் உண்டா என்று கேட்டவர்களுக்கு அவர் கூறியது "இந்தக் கிராமத்திலதான் கோவிலையும் சர்ச்சையும் பள்ளியையும் ஒரே இடத்தில் அமைத்திருக்கும் அற்புதத்தைப் பார்த்தேன்." என்றார்.


பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை அங்கு வந்து ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பியது. அப்போது முஸ்லிம் சேவைப் பணிப்பாளராக இருந்த அல்ஹாஜ்.வி.ஏ.கபூர் அவர்கள். என் கணவரின் இந்த முயற்சியைப் பாராட்டி "இறைவனுக்காக பள்ளிவாசல் கட்டிய உங்களுக்கு சீக்கிரமே ஒரு அழகான இல்லம் கட்டுவதற்குதுணைபுரிவான்" என்று ஆசிர்வதித்தார்.

தனக்கு மிஞ்சித் தான் தானமும் தருமமும். என்றும் பழமொழியைப் பொய்யாக்கிவிட்டார் என் கணவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாற்பத்திமூன்று வருடங்களுக்குப்பின் இப்போதும் அவர் எனக்கு முதன் முதலாகக் கொடுத்த குறிஞ்சிமலர் நாவலைப் புரட்டிப் பார்க்கின்றேன். அவர் கிழித்த கோடுகள், சுட்டிக்காட்டிய வசனங்கள் மங்கி மறைந்து காணப்பட்டன. அதே குறிஞ்சிமலர் புத்தகத்தில் கடைசிப்பகுதியில் கோடிழுக்கப்படால் ஒரு வசனம் அந்த இடத்தில் நான் இப்போது கோடு போடுகிறேன்.

உயரத்தில் ஏறிச் செல்லும் போதெல்லாம்
உடன்வரும் துணையை பூரணி இழந்து விட்டாள்

சேர்த்து வைத்த சொத்துக்களை கடன்காரர்கள் அள்ளிக் கொண்டார்கள். சேர்த்து வைத்த புண்ணியம்தான் சந்ததியை காத்துக் கொண்டிருக்கிறது.


என்னிடம் இப்போது இருப்பது இறைவன் கடனாகக் கொடுத்த இந்த உயிர் மாத்திரம்தான் அவர் அதைத் திருப்பிக் கேட்டும் வரை என்னால் முடிந்த நற்காரியங்களைச் செய்து வருகிறேன். அன்பையும், பாசத்தையும் அள்ளிச் சொரியும் நேய நெஞ்சங்கள்தான் எனது பலம். எனது ஆரோக்கியம். எனது சந்தோஷம்.

என் வாழ்நாளில் முடிந்த அளவுக்கு நேயர்களுக்கு அந்தப் பணியை நான் செய்திருக்கிறேன் என்ற மனநிறைவோடு இந்தப் புத்தகத்தை நிறைவு செய்து விடைபெறுகிறேன். வணக்கம்.

அன்புடன் - உங்கள் அபிமானத்திற்குரிய
விசாலாட்சி ஹமீது

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில். ✆ : 233853

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# BASKER LODGE

**MEENAKSHIPURAM,**
**NAGERCOIL - 629 001.**
**PH : 04652 - 227706, 222381**
**FAX : 04652-224996**



**Lion A.P.S. Ravindran** MJF
District Governor (2003-2004) Dist. 324-B4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒலியலையில் என் நினைவலைகள்"
எனும் இந்நூல்
ஒரு வானொலி அறிவிப்பாளரின்
சரிதம் மட்டுமல்ல
இன்று வானொலியில்
அறிவிப்பாளராகப் பணியாற்றத்
தொடங்கியிருப்போருக்கும்
பணியாற்ற விரும்புவோருக்கும்
அரிய பல தகவல்களைக் கொண்ட
கையேடாகவும் திகழ்கிறது.
இந்நூலில் திருமதி. விசாலாட்சி அமீது அவர்கள்
பதிவு செய்துள்ள சம்பவங்களும்
வானொலி அனுபவங்களும்
வாசகர்கள் மனதில் நம்பிக்கையை
ஊட்டிக் கலாரசனையை
வளர்க்கும் என்பது என் எண்ணம்.

- கவிப்பேரரசு வைரமுத்து -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : 233853